# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

இரண்டாம் பதிப்பு
விலை: 20
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 135 பங்குனி 27ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 10 ஏப்ரல் 2018 வள்ளுவர் ஆண்டு 2049


## ஆங்கிலத்தில் கோட்டை விட்ட 49 வீதத்தினர்

யாழ்ப்பாணம், ஏப்.10
கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் நடந்த ஜி.சி.ஈ. சாதரண தரப் பரீட்சையில் தோற்றியோரில் ஏறத்தாழ அரைவாசிக்கும் அதிகமானவர்

>> 23

## விட்டுக் கொடுத்து செயற்பட கூட்டமைப்பு–மு.கா. இணக்கம்

திருகோணமலை, ஏப். 10
எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் குழுவினர் திருகோணமலை யிலுள்ள அவரது அலுவலகத்தில் நேற்றுச் சந்தித்தனர். சிநேகபூர்வமாக இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் கடந்த பெப்ரவரி மாதம் நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பிலும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் தமிழ்த்

>> 23

# பொருத்தமான முதலமைச்சரை பொறுத்த நேரம் அறிவிப்போம்

## தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவிப்பு

திருகோணாமலை, ஏப்ரல் 10
வடக்கு மாகாண சபையின் அடுத்த முதலமைச்சர் வேட்பாளர் யார் என்பதை பொறுத்த நேரத்தில் அறிவிப்போம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.
திருகோணமலையில் ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
வடக்கு மாகாண சபையின் ஆயுள் காலம் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 25ஆம் திகதியுடன் முடிவடைகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு முதலமைச்சராகத் தெரிவு செய்யப்பட்ட சி.வி.விக்னேஸ்வரன், அடுத்த மாகாண

>> 23

## கண்டிக் கலவரம்: இராணுவ கோப்ரல்கள் நேற்றுக் கைது

கொழும்பு, ஏப். 10
கண்டிக் கலவரத்தின் போது பள்ளிவாசல் மீது தாக்குதல் நடத்தினர் என்ற குற்றச்சாட்டில் இராணுவ கோப்ரல்கள் இருவர் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார். குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் முன்னெடுக்கப்படும் விசாரணைகளின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்ட இராணுவக் கோப்ரல்கள் இருவரே கைது செய்யப்பட்டனர். பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் அவர்கள் இருவரும் தடுத்துவைக்

>> 25

## தவறுகளைத் திருத்தி தீர்வைப் பெறுவோம்

### சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

வடமராட்சி, ஏப்.10
எமது பக்கத்தில் நாம் விட்ட தவறுகளைத் திருத்திக் கொண்டு தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வைப் பெற்றுத்தருவோம் என்று தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்ட

>> 25

## கரைச்சியும் கூட்டமைப்பு வசம்

### ஈ.பி.டி.பி., தமிழ்த் தேசிய முன்னணி நடுநிலை: இரண்டாகப் பிளவுபட்டது சு.க.

கிளிநொச்சி, ஏப். 10
கிளிநொச்சி, கரைச்சிப் பிரதேச சபையின் ஆட்சியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கைப்பற்றியது. ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இரண்டு உறுப்பினர்களில் ஒரு உறுப்பினரும் கூட்டமைப்புக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

>> 23



## வெற்றியை பொறுக்காது சுயேச்சைக் குழு வெளிநடப்பு

கிளிநொச்சி, ஏப்.10
கரைச்சிப் பிரதேச சபையில் தவிசாளர், உப தவிசாளர் தெரிவுகளில் போட்டியிட்டும் தோல்வி அடைந்த சுயேச்சைக் குழுவினர் அந்தத் தெரிவுகளில்

>> 23

## வலி.வடக்குக் காணிகளின் விடுவிப்பில் திடீர் மாற்றம்

### 13ஆம் திகதியன்று 680 ஏக்கர் விடுவிக்கப்படும் சாத்தியம்

யாழ்ப்பாணம், ஏப்.10
வலி.வடக்கில் 3 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 680 ஏக்கர் காணி எதிர்வரும் 13ஆம் திகதி மக்களிடம் கையளிக்கப்படவுள்ளது என்று தெல்லிப்பழை பிரதேச செயலக வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

>> 23

## 6 கிலோ கேரளக் கஞ்சா மட்டுவிலில் சிக்கியது

### சந்தேகநபர் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஏப்.10
சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டுவில் தெற்கில் 6 கிலோகிராம் கேரளாக் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் நேற்று மாலை கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
சாவகச்சேரி குற்றத்தடுப்பு பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் கஞ்சா கைப்பற்றப்பட்டது என்றும், சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.
சந்தேகநபரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும், விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றில் முற்படுத்த நடவ

>> 23

## கரைதுறைப்பற்று சபையில் தமிழ்க் கூட்டமைப்பு ஆட்சி

### 40 ஆண்டுகளின் பின்னர் இயங்க ஆரம்பிக்கிறது சபை

முல்லைத்தீவு, ஏப். 10
40 ஆண்டுகளுக்குப் பின்னர் நேற்று நடைபெற்ற முல்லைத்தீவு கரைதுறைப்பற்றுப் பிரதேச சபை அமர்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியைக் கைப்பற்றியது. ஈ.பி.டி.பி., சிறிலங்கா சுதந்திரக் கட்சி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐ.தே.க, சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி என்பன கூட்டமைப்புக்கு ஆதரவு வழங்கின.
தவிசாளர், உப தவிசாளர் தெரிவுகளுக்காக நேற்று பிற்பகல் 2 மணிக்கு உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் டிறஞ்சன் தலைமையில் கரைதுறைப்பற்றுப் பிரதேச சபை கூடியது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தவிசாளர் வேட்பாளராக கனகையா தவராசாவை முன்மொழிந்தது. சுயேச்சைக் குழு தவிசாளர் வேட்பாளராக ஜோசப் அமலதாஸை முன்

>> 23

## ரணில் - கூட்டமைப்பு உடன்பாடே காணி விடுவிப்புக்குக் காரணமாம்

### கண்டுபிடித்தார் பீரிஸ்

கொழும்பு, ஏப். 10
ரணில்விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் அனைவரும் வாக்களித்தனர். அந்தக் கட்சிக்கு எழுத்து மூலமாக பத்து வாக்குறுதிகள் வழங்கப்பட்டிருந்தன. அதற்கு அமைவாக, புதுவருடப்

>> 23

## பெருந்தொகை ஆயுதங்கள் முல்லைத்தீவில் மீட்பு

### புலிகளால் புதைக்கப்பட்டவை



முல்லைத்தீவு, ஏப்.10
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பால் புதைத்து வைக்கப்பட்டன என்று நம்பப்படும் பெருந்தொகையான வெடிபொருள்களும், ஆயுதங்களும் நேற்று முள்ளிவாய்க்கால் கிழக்கில் மீட்கப்பட்டன. அவை பாதுகாப்பாக அழிக்கப்பட்டன. வவுனியா இரகசியப்

>> 23

## எதிரணியில் அமர்ந்து செயற்பட அனுமதிக்க வேண்டும் மைத்திரி

### தீர்மானத்துக்கு ஆதரவளித்த சு.க. உறுப்பினர்கள் கோரிக்கை

கொழும்பு, ஏப்.10
கூட்டரசிலிருந்து வெளியேறி நாடாளுமன்றத்தில் எதிரணியில் அமர்வதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவளித்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் நேற்றுக் கோரிக்கை விடுத்தனர்.
அரசிலிருந்து விலகினாலும் அரச தலைவருக்கான ஆதரவு தொடரும் என்றும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியை கைவிட்டுச் செல்லமாட்டோம் என்றும் அவர்கள் உறுதியளித்துள்ளனர்.

>> 23

## வடக்கு முதல்வர் ஆன்மிகப் பயணம்

யாழ்ப்பாணம், ஏப். 10
வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் இந்தியாவுக்கு இரு வார கால ஆன்மிகப் பயணத்தை மேற்கொண்டுள்ளார். தமிழகத்தில் தங்கியிருந்து ஆன்மிகப் பயணத்தை அவர் மேற்

>> 23

## சிலாபம் நகரசபையை ஐ.தே.க கைப்பற்றியது

சிலாபம்,ஏப்.10
சிலாபம் நகரசபையின் தலைவராக ஐக்கிய தேசியக் கட்சியின் துஷான் அபயசேகர தெரிவு செய்யப்பட்டார்.
நகரசபையில் நேற்று இடம்பெற்ற வாக்கெடுப்பின் போது 5 மேலதிக வாக்குகளினால் துஷான் அபயசேகர தலைவராகத் தெரிவு செய்யப்பட்டதுடன் உப தலைவராக அமீன் தெரிவு செய்யப்பட்டார்.
நடைபெற்ற உள்ளூராட்சி சபை தேர்தலில் சிலாபம் நகரசபையில் 7 ஆசனங்களை ஐக்கிய தேசிய கட்சி கைப்பற்றியதோடு பொதுஜன முன்னணி மற்றும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஆகியன 6 ஆசனங்களைக் கைப்பற்றின.
இந்நிலையில் ஐக்கிய தேசிய கட்சி சிறிலங்கா சுதந்திர கட்சியுடன் இணைந்து சிலாபம் நகர சபையில் ஆட்சி அமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற,ரி4)

## 82 உணவக உரிமையாளர்களுக்கு தண்டம்

பதுளை, ஏப்.10
மனித பாவனைக்குதவாத வகையில் சுத்தமற்ற உணவு வகைகளை விற்பனை செய்த குற்றச்சாட்டுக்களின் பேரில் உயர்ரக உணவு விடுதிகள் நான்கு உள்ளிட்ட 82 உணவக உரிமையாளர்களுக்கு பதுளை மஜிஸ்ரேட் நீதிபதி நான்கு இலட்சத்து அறுபதாயிரம் ரூபா தண்டம் விதித்து தீர்ப்பு அளித்துள்ளது.
பதுளை மஜிஸ்ரேட் நீதிபதி நயந்த சமரதுங்க முன்னிலையில் நேற்று உணவு விடுதி உரிமையாளர்கள் 82 பேர் முற்படுத்தப்பட்டனர். இதன் போதே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது.
சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு மாநகரை நாடி வரும் மக்களின் நன்மை கருதி பதுளை மாநகர சுகாதார சேவைப்பிரிவினர் உணவு விடுதிகளை சோதனையிட்டனர். அதன் போதே மனித பாவனைக்குதவாத வகையில் சுத்தமற்ற உணவுவகைகளை விற்பனை செய்தமை கண்டு பிடிக்கப்பட்டது.
உணவக உரிமையாளர்கள் இருவர் நேற்று முன்னிலையாகாததால் அவர்கள் இருவருக்கும் நீதிபதி பிடிவிறாந்தினை பிறப்பித்தார். (ற-ரி5)

# அமைச்சர்களே அரசுக்கு சவால்

## பொது ஜன முன்னணி தலைவர் பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.10
**அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சர்களே அரசின் நடவடிக்கைகளுக்கு சவாலாக செயற்படுகின்றனர். இவ்வாறு பொது ஜன முன்னணி தலைவர் பேராசிரியர் ஜீ எல் பீரிஸ் தெரிவித்தார்.**

பத்தரமுல்லையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது;
அரசின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஒன்றிணைந்த எதிர்கட்சியில் அங்கம் வகிக்கும் சிலர் போலி எதிர்ப்புக்களை வெளிக்கொணர்வதான குற்றச்சாட்டு நிலவுகின்றது.
ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் உண்மைகளை மாத்திரமே கண்டறிந்து மக்களுக்கு தெரியப்படுத்துகின்றனர். ஆனால் அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சரவை அமைச்சர்களே அரசின் வேலைதிட்டங்களுக்கு எதிராக செயற்படுகின்றனர்.என்றார். (ற,ரி4)



## மீன்பிடி உபகரணங்கள் நேற்று வழங்கப்பட்டன

சாவகச்சேரி,ஏப்.10
சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் கடற்றொழிலாளர்களுக்கான மீன்பிடி உபகரணங்கள் நேற்று வழங்கப்பட்டன.
தென்மராட்சிப் பிரதேசத்தில் மீள்குடியமர்வு அமைச்சின் வாழ்வாதார உதவித் திட்டத்தின் கீழ் கடந்த வருடம் மீன்பிடி உபகரணங்களுக்கு விண்ணப்பித்த தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன. ஒரு பயனாளிக்கு தலா ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் கையளிக்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.
நாவற்குளி கிழக்கு, நாவற்குளி மேற்கு, கோயிற்குடியிருப்பு, கெற்பேலி கச்சாய் கைதடி நாவற்குளி ஆகிய கடலோரியில் தொழில்களை மேற்கொள்ளும் கடற்றொழிலாளர்கள் 75 பேர் மீள்குடியமர்வு அமைச்சின் வாழ்வாதாரத்திட்டத்தில் மீன்பிடி உபகரணங்களுக்கு கடந்த வருடம் தெரிவு செய்யப்பட்டனர்.
அவர்களில் படகு வெளியிணைப்பு இயந்திரம் வழங்கத் தெரிவு செய்யப்பட்ட 12 பேருக்கு கடந்த வருடம் பிரதேச செயலகத்தில் வைத்து மாவட்டச் செயலரினால் கையளிக்கப்பட்டன.
மீன்பிடி உபகரணங்கள் வழங்கும் ஆரம்ப நிகழ்வு கடந்த வாரம் மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மீள்குடியமர்வு அமைச்சின் அதிகாரிகளால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. நேற்று தென்மராட்சி பிரதேச பயனாளிகளுக்கு மீன்பிடி உபகரணங்கள் கையளிக்கப்பட்டன. ஏனைய் பிரிவு பயனாளிகளுக்கு விரைவில் கையளிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ற,ரி4,9)



மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் ஆலயத்தில் பங்குனித் திங்கள் பொங்கல் விழா நேற்று சிறப்பாக நடைபெற்றது. இந்தச் சிறப்பு பூசை வழிபாடுகளில் பல்வேறு பகுதியில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பொங்கல் பொங்கி வழிபாடுகளில் ஈடுபட்டனர். (ற-ரி5,7)

## நிறுவை கருவிக்கு முத்திரை பதிக்கும் வேலைத்திட்டம்

மட்டக்களப்பு,ஏப்.11
வவுணதீவு பிரதேச செயலக வளாகத்தில் வர்த்தக நிலையங்களில் உள்ள நிறுவை அளவு கருவிகளுக்கு முத்திரை பதிக்கும் வேலைத்திட்டம் நேற்றுத் தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வர்த்தக நிலையங்களில் பொருட்கொள்வனவில் ஈடுபடும் நுகர்வோரைப் பாதுகாக்கும்வகையிலே இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.
நேற்றுத் தொடக்கம் வியாழக்கிழமை வரை 4 நாட்கள் வவுணதீவு பிரதேசத்தில் இந்தச் வேலைத் திட்டம் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.
தராசுகள் மற்றும் அளவை பொருட்களுக்கு முத்திரையிடும் பணிகளைச் சில வர்த்தக நிலையங்கள் கருத்தில் கொள்ளாமல் பொதுமக்களையும் நுகர்வோரையும் சுரண்டும் செயற்பாட்டை மேற்கொண்டுவருகின்றன.
இவ்வாறு செயற்பட்டுவரும் வர்த்தக நிலையங்களைக் கண்டுபிடித்தால் அவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்க அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் தயங்காது. இவ்வாறு மாவட்ட பொறுப்பதிகாரி ஏ.எல். நௌசாத் தெரிவித்தார். (ற,ரி4,46)



## மட்டக்களப்பு மாநகரசபையை முதன்மையாக மாற்றுவோம்

### மாநகரசபையின் பிரதி முதல்வர் தெரிவிப்பு

மட்டக்களப்பு,ஏப்.10
மட்டக்களப்பு மாநகரசபையை இலங்கையின் முதன்மை மாநகரசபையாக மாற்றுவதற்கான நோக்குடன் பயணிக்கவுள்ளோம். இவ்வாறு மட்டக்களப்பு மாநகரசபையின் பிரதி முதல்வர் க.சத்தியசீலன் தெரிவித்தார். மட்டக்களப்பு விளையாட்டுக்கழகத்தின் 90 ஆவதுஆண்டு நிறைவையும் சித்திரை புத்தாண்டையும் முன்னிட்டு இன - மத நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் நேற்று முன்தினம் விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன. இதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது;
மட்டக்களப்பு மாநகரசபையின் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில், இந்த மாநகரசபையை இலங்கையில் உள்ள மாநகரசபைகளில் முதன்மையான மாநகரசபையாக மாற்ற வேண்டும் என்ற ஒரே நோக்குடன் பயணிக்கவுள்ளோம். நாங்கள் தனித்துவமான சமூகமாக, ஏனைய சமூகங்களுக்கு சவால்விடக்கூடிய சமூகமாக மாறவேண்டுமானால் எங்களுக்குள் ஒற்றுமையேற்பட வேண்டும். கட்சி, இன மற்றும் மொழி பேதங்களைப் பாராது எங்களது பணிகளை முன்னெடுக்கின்றபோதுதான் இந்த மாநகரசபை புதுப்பொலிவுள்ள மாநகரமாக மாற்றமுடியும். எதிர்வரும் காலத்தில் கிழக்கு மாகாணசபை தேர்தல் காலமும் வரவுள்ளது. நாங்கள் தமிழனை தமிழனே ஆளவேண்டும் என்ற நோக்குடன் அனைவரும் ஒரே குடையின் கீழ் வரவேண்டிய அவசியம் உள்ளது".என்றார். (ற,ரி4)

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் தவிசாளர்களால் புறக்கணிப்பு

மட்டக்களப்பு,ஏப்.10
மட்டக்களப்பு ஏறாவூர்ப்பற்று பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் ஏறாவூர் நகரசபை மற்றும் ஏறாவூர்ப் பற்று பிரதேச சபைகளுக்கு தெரிவாகியுள்ள தவிசாளர்கள் சமூகமளிக்க வில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.
மட்டக்களப்பு ஏறாவூர்ப்பற்று பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர்அலி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் ஆகியோரின் இணைத் தலைமையில் பிரதேச செயலக கேட்போர், கூடத்தில் நேற்று நடைபெற்றது. ஏறாவூரில் காணப்படுகின்ற மூன்று தமிழ் கிராமங்களின் அபிவிருத்தி புறக்கணிக்கப்பட்டிருந்தன. இந்த நிலையில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கு ஏறாவூர் நகர சபைத் தவிசாளர் சமூகமளிக்காதது குறித்து உறுப்பினர்களினால் விசனம் தெரிக்கப்பட்டது. (ற,ரி4)

# நாட்டுக்காக உழைக்கும் படையினருக்கு அரசு சகல வசதிகளையும் வழங்கும்

அரச தலைவர் தெரிவிப்பு



கொழும்பு.ஏப்.10

தாய் நாட்டுக்காகத் தமது கடமைகளை நிறைவேற்றும் படையினருக்கு அரசு அனைத்து வசதிகளையும் வழங்கும் இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

மாதுரு ஓய இராணுவப் பயிற்சிப் பாடசாலையில் பயிற்சி பெற்று வெளியேறும் நிகழ்வு நேற்று அரச தலைவர் தலைமையில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்: என்று அரசதலைவர் ஊடகப் பிரிவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

பாதுகாப்புப் படை தமது சேவைகளை நிறைவேற்றும் போது ஆயுதங்களினால் மட்டுமன்றி அறிவு, இயலுமை, ஆக்கத்திறன் என்பவற்றினாலும் பலம் பெற்று அவர்களது திறமைகளை வெளிக்காட்ட வேண்டும் என்று அரச தலைவர் தெரிவித்தார். இதற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் சலுகைகளையும் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்:

அரசதலைவர் வருகையை நினைவுகூரும் முகமாக மாதுருஓய இராணுவப் பயிற்சிப் பாடசாலை வளாகத்தில் அவரால் மரக்கன்றும் நடப்பட் டது. மாதுரு ஓய மீனவர் கிராமத்திலுள்ள கத்தோலிக்கத் தேவாலயத்தின் புதிய கட்டடத்தை திறந்துவைக்கும் நிகழ்விலும் அரசதலைவர் கலந்து கொண்டார். 'எழுச்சிபெறும் பொலன்னறுவை' மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சமயஸ்தாபனங்களை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்திற்கேற்ப சுமார் 60 இலட்சம்ரூபாசெல வில் இக் கட்டடம் அமைக்கப்பட்டது.

மீனவர் கிராமத்திலுள்ள மக்களின் வீட்டுப் பிரச்சினைகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்து அரச தலைவரிடம் தெரிவிக்கப்பட்டது. பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதாக அரச தலைவர் இதன்போது தெரிவித்தார். அப் பிரதேசத்திலுள்ளபிள்ளைகளின்கல்வி. சுகாதாரப் பிரச்சினை உள்ளிட்ட ஏனைய தேவைகளையும் கண்டறிந்து நிறைவேற்றிக் கொடுக்குமாறும் அவர், அதிகாரிகளுக்குப் பணிப்புரைவிடுத்தார். பிரதேசத்தின் சமயத்தலைவர்கள் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

(ற.ரி2)

## திருகோணமலையில்

# கூட்டமைப்பிடம் மண்கவ்வியது மகிந்த அணி

திருகோணமலை.ஏப்.10

திருகோணமலை நகராட்சி மன்றத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியது.

கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளர் எம். வை.எம்.சலீம் தலைமையில் நேற்றுக் கூடிய நகராட்சி மன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் ந. இராசநாயகம் தவிசாளராகவும், பிரதித் தவிசாளராக சே.சிறிஸ்கந்தராஜாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 09 ஆசனங்களையும், சிறிலங்கா பொதுஜன முன்னணி 04 ஆசனங்களையும், ஐக்கிய தேசியக் கட்சி 02 ஆசனங்களையும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் 02 ஆசனங்களையும் பெற்றுக் கொண்டது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழர்களின் சமூக ஜனநாயக கட்சி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் மற்றும் தமிழ் ஐக்கிய விடுதலை முன்னணி ஆகியன தலா ஒவ்வொரு ஆசனங்களைப் பெற்றுக் கொண்ட நிலையில், சுயேச்சைக்குழு 02 ஆசனங்களைப் பெற்றது. இம்முறை இடம் பெற்ற கலப்புத் தேர்தல் முறையின் மூலமாக 24 உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். 13 மேலதிக வாக்குகளால் ந. இராசநாயகம் தலைவராக தெரிவுசெய்யப்பட்டார். இந் நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் கலந்து சிறப்பித்தார். (ற.ரி2,40)

# நாம் வீதியில் கிடக்க களியாட்ட நிகழ்வா?

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

வவுனியா,ஏப்.10

வவுனியா நகரசபைமைதானத்தில் நடைபெறும் களியாட்ட நிகழ்வுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்றுப் போராட்டம் நடத்தினர்.



வவுனியா வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்கு முன்பாக கடந்த 410 நாட்களாக தொடர் போராட்டம் மேற்கொள்ளும் மக்களாலேயே கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. வவுனியா நகரசபை மைதானத்தில் மாவட்டச் செயலகம் மற்றும் இராணுவம் இணைந்து புது வருட கொண்டாட்டம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், தமிழர் பிரதேசங்களில் போதைப் பாவனையைக் கட்டுப்படுத்தக் கோரியும், ஊடகம் ஒன்றின் மேல் தாக்குதல் நடத்தப்பட்டதைக் கண்டித்தும் கவனவீர்ப்புப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது. தமிழர்கள் நாம் தீர்வுக்குத் திண்டாடும்போது மாவட்டச் செயலகத்தினர் இராணுவத்துடன் இணைந்து கொண்டாட்டம் செய்கிறார்கள். இராணுவத்தின் மேல் நல்லெண்ணம் ஏற்படுத்தி எமக்கு உதவ வரும் ஐரோப்பிய நாடுகளை எமக்கு உதவாமல் செய்யவே இப்படியான கொண்டாட்டங்கள் நடத்தப்படுகிறது. இதற்கு அனைத்து அதிகாரிகளும், வர்த்தக சங்கமும் துணை போவதுடன் இத்தனை நாளாக தெருவிலே இருக்கும் எங்களை அவர்களின் கண்களுக்குத் தெரியவில்லையா?

தமிழர்களிடம் விடுதலை உணர்வுகள் உருவாகி விடக்கூடாது என்பதற்காவே போதைப் பாவனை திட்டமிட்டு பரப்பப்படுகிறது. இது எமது கல்வியை, உழைப்பை நிர்மூலமாக்கும் செயற்பாடாகவே நாம் பார்க்கிறோம். இந்தக் கொடூரச் செயலில் ஒரு அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினரும் தீவிரமாக செயற்படுகின்றனர். இது ஒரு மனித உரிமை மீறலாகும் இதற்கு எதிராக நாம் ஐக்கிய நாடுகள் சபையில் முறையிட வுள்ளோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியுடன் இணைந்து செயற்படுவதுடன் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கி சிங்களவரை பாதுகாக்கும் செயற்பாடுளையே செய்து வருகின்றார்கள் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

(ற.ரி2,110)

## இலங்கையில் இருந்து தமிழகம் சென்ற துருக்கியர் கைது

கொழும்பு.ஏப்.10

இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக படகு மூலம் தமிழகத்துக்குச் சென்ற துருக்கி நாட்டவர் ஒருவர் கைது செய்யப்பட்டார். தமிழகத்தின், இராமேஸ்வரம் பகுதியில் வைத்து நேற்று முன்தினம் சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாகத் தமிழகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அவரிடம் உரிய ஆவணங்கள் எதுவும் இருக்கவில்லையெனவும், தொடர்ந்தும் அவரிடம் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ற.ரி2)



## பார்வை இழந்த இராணுவ அதிகாரிக்கு நேற்று வீடு கையளிப்பு

கொழும்பு.ஏப்.10

வடக்கு, கிழக்கில் இடம் பெற்ற போரின்போது, பார்வை இழந்த இராணுவ அதிகாரிக்கு நேற்று வீடு கையளிக்கப்பட்டது. 35 இலட்சம் ரூபா பெறுமதியான வீட்டுக்கான திறப்பு மற்றும் உரிமைப் பத்திரத்தை நேற்று வீடமைப்பு அமைச்சில் வைத்து அமைச்சர் சஜித் பிரேமதாச வழங்கி வைத்தார்.

இரண்டு கண்களையும் இழந்த இராணுவ அதிகாரி தன் குடும்பத்தினருக்கு வீடொன்றைப்பெற்றுத் தருமாறு கோரியிருந்தார். இதனையடுத்தே மொறட்டுவ, அங்குலானைப் பகுதியில் உள்ள தொடர்மாடிவீடமைப்புத் திட்டத்தில் இந்த வீடு நேற்று வழங்கப்பட்டது. (ற.ரி2)



## புத்தாடைகள் வழங்கி வைப்பு

மட்டக்களப்பு,ஏப்.10

எதிர்வரும் சித்திரைப்புத்தாண்டை முன்னிட்டு வாழைச்சேனை நாசீவந்தீவுப் பகுதியில், 100 பேருக்குப் புத்தாடைகள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டுள்ளன.

"வறுமையை ஒழிப்போம்" என்னும் தொனிப் பொருளில் இந்த செயற்றிட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இரண்டாம் கட்டமாக கிரான் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பிரம்படித்தீவு, பூலாக்காடு ஆகிய பிரதேசத்திலுள்ள முதியோர்கள் மற்றும் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு, உதவிகள் வழங்கி வைக்கப்படும் என பிரதேச சபை உறுப்பினர் கமலநேசன் தெரிவித்தார். (ற.ரி2)

# எந்த அரசின் ஆட்சியானாலும் தமிழர்களுக்குத் தீர்வு இல்லை

முன்னாள் மாகாணசபை உறுப்பினர் மயூரன் தெரிவிப்பு

வவுனியா,ஏப்.10

எந்த அரசாக இருந்தாலும் தமிழர்களுக்குரிய தீர்வுகளைத் தரமாட்டாதுஎன்பதேஉண்மை. இருந்தாலும்மக்கள்பிரதிநிதிகள் என்ற வகையில் நாம் அரசுக்குப் பல அழுத்தங்களை வழங்கியே வருகின்றோம். இவ்வாறு முன்னாள் மாகாணசபை உறுப்பினர் சே.மயூரன் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தொரிவித்தார். அவர் தெரிவித்ததாவது,

காணாமல் போனோரின் உறவினர்களால் மேற்கொள்ளப்படும் போராட்டம் பல நாள்களாக தீர்வின்றித் தொடர்ந்து கொண்டிருக்கிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இந்த விடயம் தொடர்பாக அரசுடன் பேசிக் கொண்டுதான் இருக்கிறது. ஆனால் எந்த அளவுக்கு இந்தப் பேச்சுவார்த்தைகளை சிங்களப் பேரினவாத அரசு செவிமடுக்கின்றது என்பது எமக்குத் தெரியவில்லை.

வவுனியாவில் பல பிரச்சினைகள் உள்ளன. இது தொடர்பாக நான் வடக்கு முதலமைச்சரிடம் நேரடியாகப் பல பிரச்சினைகளைத் தெரியப்படுத்தியிருந்த போதும் அவர் அதனை செவிசாய்க்காமல் அவரது ஆலோசனைக் குழுவில் உள்ளவர்கள் சொல்வதையே செய்து வருகின்றார்.

வவுனியா மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் வவுனியா நகரசபை மைதானத்தில் களியாட்ட நிகழ்வு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது உண்மையில் வவுனியா மாவட்டச் செயலரின் செயற்பாடுகளைப் பார்க்கும் போது வவுனியா மாவட்டத்தை அண்டிய பகுதிகளை பௌத்தமயமாக்க முனைகின்றாரோ என்ற ஒரு ஐயப்பாடு இருக்கின்றது. இங்கு காணாமற்போனோர், அரசியல் கைதிகள், காணிப் பிரச்சினை என்று பல பிரச்சினைகள் இருப்பதால் நாம் தேவையில்லாத களியாட்டங்களைத் தவிர்க்கவேண்டிய நிலையில் இருக்கிறோம் - என்றார். (ற.ரி4,110)



வட்டுக்கோட்டை கார்த்திகேய வித்தியாசாலை மாணவர்களின் சின்னம் சூட்டும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வலிகாமம் மேற்கு பிரதேச சபை உறுப்பினர் சிற்றம் பலம் ஸ்ரீஜீவா கலந்து கொண்டு மாணவர்களுக்கு சின்னம் சூட்டினார்.

# தளபாட வசதிகளற்ற பாடசாலை நடவடிக்கைஎடுக்கக்கோரிக்கை





வவுனியா, ஏப். 10

**வவுனியா மகாறம்பைக்குளம் திருஞானசம்பந்தர் வித்தியாலயத்தில் 10, 11 ஆம் தர மாணவர்களுக்கான தளபாட வசதிகள் இல்லாமையால் கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்வதில் பெரும் சவால்களை எதிர்கொள்வதாக பாடசாலைச் சமூகத்தினர் மற்றும் பெற்றோர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.**

இதுதொடர்பில்பாடசாலைச்சமூகத்தினர் தெரிவித்ததாவது:

வவுனியா தெற்கு கல்வி வலயத்துக்கு உட்பட்ட திருஞானசம்பந்தர் வித்தியாலயத்தில் தரம் 10 மற்றும் 11இல் 50 க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். இவர்கள் முதலாம் தர (ஆரம்ப வகுப்பு) மாணவர்களுக்குரிய சிறிய இருக்கைகளில் அமர்ந்திருந்தே தமது கற்றல் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் நீண்ட நேரம் அமர்ந்திருந்து கல்வி கற்பதில் பல சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். இதுமாணவர்களின் உளரீதியான பல பிரச்சினை களுக்கும் வழிவகுத்துவிடும்.

இதுதொடர்பாகவடக்குமாகாணகல்வித்திணைக்களத்துக்கு நாம் பல தடவைகள் தெரியப்படுத்தியுள்ளோம். ஆனால் இன்றுவரை எமக்கான தளபாட வசதிகளை உரியவர்கள் செய்து தரவில்லை.

எனவேசம்பந்தப்பட்டவர்கள்இந்தப்பிரச்சினையை உடனடியாகத் தீர்த்து மாணவர்களதும் பாடசாலையினதும்வளர்ச்சிக்குக்கைகொடுக்க வேண்டும்என்றனர். (எ-110)



வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் மாணவி அ. யதிஸிகா தரம் 5 ஆம் ஆண்டு புலமைபரீட்சையில் சித்தியடைந்தமையை பாராட்டி வட்டு. ஐக்கிய நாணய சங்கத்தினரால் அண்மையில் மதிப்பளிக்கப்பட்டது.

## திருத்தம்

நேற்று வெளியான எமது பத்திரிகையில் முதல் பக்கத்தில் 'ஜும்மா பள்ளிவாசலுக்கு அடிக்கல் நடப்பட்டது' 'தளபாட வசதியின்றி இன்றும் வவுனியாவில் பாடசாலை' ஆகிய செய்திகளின் சுருக்கம் பிரசுரிக்கப்பட்டு அதன் விரிவாக்கம் இடம்பெறவில்லை. எனவே இன்றைய நாள் அதன் விரிவு பிரிசுரிக்கப்படுகிறது.

## வருடாந்த பொங்கல் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப் 10

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான வருடாந்த பொங்கல் நிகழ்வு இன்று அதிகாலை 5 மணிக்கு திருப்பள்ளி எழுச்சியுடன் ஆரம்பித்துஐந்துநேரம்பூசைகளும் இடம்பெற்று அம்பாள் வெளிவீதி உலா வரவுள்ளதாக ஆலய நிர்வாக சபை அறிவித்துள்ளது.

*மன்னார் காட்டாஸ்பத்திரியில்*

## ஜும்மா பள்ளிவாசலுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது

மன்னார், ஏப். 10

மன்னார் காட்டாஸ்பத்திரிப் பகுதியில் ஜும்மா பள்ளிவாசல் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சரும் அகில இலங்கை மக்கள் காங்கிரசின் தேசியத் தலைவருமான ரிசாத் பதியுதீன் வாக்குறுதிக்கு அமைய சவூதி நாட்டின் நிதி உதவியுடன் ஜும்மா பள்ளிக்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

காட்டாஸ்பத்திரிஜும்மாபள்ளிநிர்வாகத்தலைவர் அப்துர்ரஹீம் அவர்களின் வழி நடத்தலில், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினரும், அமைச்சர் ரிசாத் பதியுதீனின் பிரத்தியேக செயலாளருமான ரிப்கான் பதியுதீன் தலைமையில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில்ஓ.எச்.ஆர்.டிநிறுவனத்தலைவர்சஹாப்தீன்,மன்னார் பிரதேச சபை உறுப்பினர்கள், நிதி உதவிய சவூதி நாட்டின் பிரதிநிதிகள்,பள்ளிநிர்வாகத்தினர், தேசிய இளைஞர்சேவைகள் மன்றத்தின் வன்னி மாகாண பணிப்பாளர் என்.எம்.முனவ்பர் மற்றும்கிராமமக்கள்எனபலர்கலந்துகொண்டனர். (எ-56)



## துயிலுமில்லத்தில் வணங்கி சபை அமர்வில் பங்கேற்பு

*கிளி. சுயேச்சைக்குழு முன்மாதிரி*

கிளிநொச்சி, ஏப்.10

கிளிநொச்சி, கரைச்சிப் பிரதேச சபையில் சுயேச்சைக் குழுவாகப் போட்டியிட்டுத் தெரிவு செய்யப்பட்ட சமத்துவம், சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் 11 உறுப்பினர்களும் கனகபுரம் மாவீரர் துயிலுமில்லம் சென்று அகவணக்கம் செலுத்திய பின்னர் பிரதேச சபையின் முதலாவது அமர்வுக்குச் சென்றனர்.

நேற்றுக் காலை 6 மணிக்கு துயிலுமில்லம் சென்ற உறுப்பினர்களும், முன்னாள் போராளிகள் சிலரும் விளக்கேற்றி, மலர்தூவி அகவணக்கம் செலுத்தினர். அதன்பின்னர் தவிசாளர் தெரிவுக்கான அமர்வில் கலந்து கொண்டனர். (ρ-5,35)

## பரிசில் வழங்கும் நிகழ்வு

தென்மராட்சிப் பிரதேச சிறுவர் அபிவிருத்திப் பிரிவினரால் சிறுவர் கழகங்களிடையே நடத்தப்பட்ட விளையாட்டு மற்றும் கலைப் நிகழ்வுகளில் வெற்றியீட்டியோருக்கு பரிசில்கள் வழங்கல் நிகழ்வு இன்றுகாலை10மணிக்குப் பிரதேச செயலர் தேவந்தினி பாபு தலைமையில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் சங்கத் தலைவர் ந.சிவபாலன் உட்பட பலர் கலந்துகொள்வர் எனத் தெரிவிக்கப்பட்டது. (9)

## விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்கல்

தென்மராட்சி ஏப் 10

வரட்சியினால் பாதிக்கப்பட்ட தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பிரிவுக்குட்பட்ட விவசாயிகளுக்கான உலர் உணவுப் பொருட்கள் இன்று தொடக்கம் சங்கத்தின் கிளைக் கடைகளில் பெற்றுக் கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேசத்தில் உள்ள 60 கிராம அலுவலர் பிரிவுகளி லும் 3 ஆயிரத்து 692 விவசாயிகள் வரட்சி நிவாரண உலர் உணவுப் பொருள்கள் பெறுவதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் சாவகச்சேரி, தென்மராட்சி மேற்கு( கைதடி) ஆகிய பலநோக்குக் கூட்டு றவுச் சங்கக் கிளைகளில் நிவாரண உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டுவருகின்றன எனவும் தென்மராட்சி கிழக்கு (கொடிகாமம்) பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகளில் இன்று தொடக்கம் விநியோகிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒன்று தொடக்கம் மூன்று பேர் வரையான அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பத் துக்கு மாதாந்தம் தலா 2 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்களும் நான்கும் அதற்கு மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு 2 ஆயிரத்து 500 ரூபா பெறமதியான உலர் உணவுப் பொருள்களும் விநியோகிக் கப்படும் எனவும் தற்போது இரு மாதங்களுக்குரிய பொருள்கள் விநியோகிக்கப் பட்டு வருகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டது . (9)

## சமுர்த்தி சௌபாக்கியா வர்த்தகக் கண்காட்சி நேற்று ஆரம்பமானது

யாழ்ப்பாணம், ஏப்.10

2018ஆம் ஆண்டுக்கான சமுர்த்தி சௌபாக்கியா வர்த்தகக் கண்காட்சி ஆரம்ப நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் ஆரம்பமானது. இந்தக் கண்காட்சி இன்றும் நடைபெறவுள்ளது.

கண்காட்சியில் சமுர்த்தித் திட்டத்தின் மூலம் உதவிகள் பெற்றுக் கொண்ட பயனாளிகளின் உற்பத்திப் பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்கள யாழ். மாவட்டப் பணிப்பாளர் க.மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்டச் செயலர் நா.வேதநாயகனும், சிறப்பு விருந்தினராக இலங்கை மத்திய வங்கியின் வடக்கு மாகாணப் பிராந்திய முகாமையான பா.சிவதீபனும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் யாழ்.மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் உரையாற்றினார்.

சமுர்த்திக் கடன் திட்டம் பயனாளிகளுக்கு ஒரு வரப்பிரசாதம். அதைப் பெற்றவர்கள் திறம்படச் செயற்படுத்த வேண்டும். வாழ்வாதாரம் உயர வேண்டும் என்பதே எங்களின் எதிர்பார்ப்பு.

உற்பத்திப் பொருள்களை அறிமுகப்படுத்துவதற்கு இந்தக் கண்காட்சி ஒரு சந்தர்ப்பமாக உள்ளது. வளங்களை விருத்தி செய்து, வருமானத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்." என்று அவர் தெரிவித்தார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட இலங்கை மத்திய வங்கியின் வடக்கு மாகாணப் பிராந்திய முகாமையாளர் பா.சிவதீபன் உரையாற்றினார்.

"தேவையான பயிற்சி, கருத்தரங்குகளை ஒழுங்கு செய்வதற்கு நாம் மிகவும் ஆர்வமாக உள்ளோம். நுண்நிதி, கடன் அல்லது தொழிற்பாடு சம்பந்தமான பல்வேறு விமர்சனங்களும், கேள்விகளும் எழுகின்ற இந்தச் சந்தர்ப்பத்திலே பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். அவை மிகுந்த பயனை தருமென எதிர்பார்க்கிறோம். கிடைக்கின்றதே என பெறுவதாகக் கடன்கள் அமைந்து விடக் கூடாது. அதைப் பயனுள்ளதாக்க வேண்டும்." என்று அவர் தெரிவித்தார்.

நிகழ்வில் பிரதேச செயலர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ρ-112)



## அலங்கார உற்சவம்

அளவெட்டி ஏப் 10

உரும்பிராய் வடக்கு வங்கியடி அருள்மிகு அண்ணமார் தேவஸ்தான அலங்கார உற்சவம் நாளை புதன்கிழமை ஆரம்பமாகி எதிர் வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நிறைவு பெறும் என ஆலய பரிபாலன சபையினரால் தெரிவிக்கப்பட்டது. (63)

# தேங்காய் பிடுங்க மரத்தில் ஏறிய குடும்பத்தர் தவறி வீழ்ந்து பாதிப்பு

தென்மராட்சிஏப். 10
தேங்காய் பிடுங்க மரத்தில் ஏறிய குடும்பத்தர் தவறி வீழ்ந்து பாதிப்புக்கு உள்ளாகி யாழ்.போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.
இந்தச்சம்பவம் கடந்த 6 ஆம்திகதி மறவன்புலவு மேற்கில் இடம்பெற்றது.
மரத்திலிருந்து வீழ்ந்து கைமுறிவுடன் பாதிப்புக்கு உள்ளான நிலையில்சாவகச்சேரிமருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையின் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்குஅனுப்பிவைக்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. இதே இடத்தைச் சேர்ந்த சின்னவன் கேதீஸ்வரன்(வயது39)என்னும் குடும்பத்தரேபாதிக்கப்பட்டவர்எனவும்தெரிவிக்கப்பட்டது. (42)

# சித்திரைப் புத்தாண்டு நிகழ்வுகள்

அனலைதீவு, ஏப்.10
அனலைதீவு அருணோதயா சனசமூகநிலையமும்அருணோதயா விளையாட்டுக் கழகமும் இணைந்து அனலைதீவுப் பிரிவு இளைஞர் யுவதிகளுக் கான சித்திரைப் புத்தாண்டு விளையாட்டு நிகழ்வுகளை நடத்த தீர்மானித்துள்ளது. இதன்படிநிலையமைதானத்தில்எதிர்வரும்13,14ஆம்திகதிகளில்படகுஓட்டம்,முச்சக்கரவண்டி ஓட்டம், துவிச்சக்கர வண்டிஓட்டம் மரதன் ஓட்டம், சறுக்குமரம் ஏறுதல் குழு நிகழ்ச்சிகள் போன்ற நிகழ்வுகள்நடத்தவுள்ளதால்போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் இளைஞர் யுவதிகள் பதிவு செய்யுமாறு விளை யாட்டுக் கழக நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (9)

# நல்லூர் பிரதேச செயலகத்தால் ஊக்குவிப்புப் பரிசு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஏப்.10
வடக்குமாகாணபண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் இளைஞர்களுக்கான ஊக்குவிப்பு பரிசு - 2018க்குவிண்ணப்பங்கள்கோரப்பட்டுள்ளன. நல்லூர்பிரதேசசெயலக பிரிவுக்குட்பட்ட 40 வயதுக்கு உட்பட்ட கலைத்துறைக்கு அளப்பெரிய சேவையாற்றிய கலைஞர்கள்தமதுபெயர்மற்றும்கலைச்சேவைக்குஆற்றியவிபரங்களினை நல்லூர் பிரதேச செயலக கலாசாரப்பிரிவில் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்பாக சமர்பிக்கும்படி நல்லூர்பிரதேசசெயலர்பி.அஜிதா தெரிவித்துள்ளார்

# விற்பனைக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஏப்.10
வடமாகாண தொழிற்துறைத் திணைக்களத்தின்அனுசரணையுடன் வலிகாமம் வடக்கு தெல்லிப்பழைபிரதேசசெயலர்பிரிவினரால் தொழில் முயற்சியாளர்களின் விற்பனைக் கண்காட்சி சகாயமாதா தேவாலயவளாகத்தில்(மல்லாகம் காங்கேசன்துறை வீதி )நாளை புதன்கிழமை காலை10 மணிக்கு நடைபெறவுள்ளதாக பிரதேச செயலர் ஜெயகரன்தெரிவித்துள்ளார்.

# சாவகச்சேரி பிரதேச சபையின் பெயரை மாற்ற நடவடிக்கை எடுங்கள்

## *சாவகச்சேரி நகரசபையின் உறுப்பினர் க.வேலாயுதபிள்ளை ஆலோசனை தெரிவிப்பு*

சாவகச்சேரி ஏப்.10
சாவகச்சேரிபிரதேசசபையை தென்மராட்சிபிரதேசசபைஎன அழைப்பதற்கான எற்பாடுகளை மேற்கொள்ள சபை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சாவகச்சேரியின் எல்லைப்பகுதிகூட இல்லாத நிலையில் தென்மராட்சி பிரதேசத்தின்பலபகுதிகளை(49 கிராம அலுவலர் பிரிவுகளை ) உள்ளடக்கிய பிரதேசத்தினை சாவகச்சேரி பிரதேச சபையென அழைப்பதை விட தென்மராட்சி பிரதேச சபையென குறிப்பிடுதல் பொருத்தமானது.
இது தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு அறிவிக்கசபைநடவடிக்கைஎடுக்கவேண்டுமென சாவகச்சேரிநகரசபையின் உறுப்பினர்க.வேலாயுதபிள்ளைஆலோசனை தெரிவித்தார்.
சாவகச்சேரிநகரசபையின்கன்னிஅமர்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வேளையில்சபையின்கணக்குக்குதிறைசேரியினால் அனுப்பபட்ட காசோலை சாவகச்சேரி பிரதேச சபைக்குரியது எனவும் தவறுதலாக நகரசபையின் கணக்குக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதெனவும்அந்தகொடுப்பனவினைசாவகச்சேரி பிரதேசசபைக்கு வழங்குமாறுதிறைசேரியினால் விடுக்கப்பட்ட அறிவிப்பினையடுத்து அதனை பிரதேச சபைக்கு மீள வழங்குவது தொடர்பாக சபையின் அனுமதிக்காக சபையின் கணக்காளர் சி.பரதனால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையையடுத்து உறுப்பினரால் இந்தக் கருத்து தெரிவிக்கப்பட்டது
மேலும் அவர் தெரிவித்ததாவது:
சாவகச்சேரி நகரசபை ,சாவகச்சேரி பிரதேச சபை என இரு சபைகளாக இருப்பதால்நியமனங்கள்,நிதிவழங்கல்,வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளல், அபிவிருத்திப் பணிகளுக்குநிதிஒதுக்கீடுசெய்தல்போன்றவற்றினால் பல்வேறு சிரமங்களை பொது மக்களும் அரச நிறுவனங்களும் எதிர்நோக்குகின்றனர்.
இதனால்சாவகச்சேரிநகருடன்இணைந்த பகுதியை சாவகச்சேரி நகரசபை எனவும் நகரசபைக்குஅப்பால்உள்ளதென்மராட்சி பிரதேசத்தின் பல்வேறு கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய பிரதேசத்தை தென்மராட்சி பிரதேச சபையென வழங்க வேண்டுமெனவும் அவர் கருத்துத் தெரிவித்தார். சாவகச்சேரி பிரதேச சபையை தென்மராட்சி பிரதேச சபையாக மாற்றுவது தொடர்பாக உரிய அதிகாரிகளுடன் தொடர்புகொண்டுநடவடிக்கைமேற்கொள்வதாக சபையின் தவிசாளர் சிவமங்கை இராமநாதன்தெரிவித்தார் எனத்தெரிவிக்கப்பட்டது. (9)

# உளறல்கள் கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு



யாழ்ப்பாணம், ஏப்.10
எஸ்.ரி.திஸ்னுகனின்உளறல்கள்கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு மணிக்கு சங்கானை கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் மானிப்பாய் இந்துக்கல்லூரி ஆசிரியர் எஸ்.ரி.அருள்குமரன் தலைமையில் இடம்பெற்றது.
இந்த நிகழ்விற்கு முதன்மை விருந்தினராகதழிழ்த்தேசியக்கூட்டமைப்பின்யாழ் மாவட்டப்நாடாளுமன்றஉறுப்பினர்ஈஸ்வரபாதம்சரவணபவன்கலந்துகொண்டு நூலினை வெளியிட்டுவைத்தார்.
வரவேற்புரையினைஇ.றெனேக்சனும், நூல் மதிப்புட்டுரையினை அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் சைவப்புலவர் எஸ்.ரி.குமரனும், வெளியீட்டுரையினை வடமாகாண சபை உறுப்பினர் எஸ்.குகதாசனும், வாழ்த்துரையினை மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியர் ஞானதிருக்கேதீஸ்வரன், நல்லூர்பிரதேசசபைஉறுப்பினரும் எழுத்தாளருமாகிய மதுசூதனன் ஆகியோர்வழங்கினார்கள்எனத்தெரிவிக்கப்பட்டது.

# ஊர்காவற்றுறையில் புத்தாண்டுச் சந்தை

யாழ்ப்பாணம், ஏப்.10
தொழில் முயற்சியாளர்களின் உற்பத்தி, கைவினைப் பொருள்களுக்கான புத்தாண்டுச் சந்தை நாளை புதன்கிழமை காலை 10 மணி முதல் மாலை 4.30 மணிவரை சிறுவர் பெண்கள் பிரிவு, பிரதேச செயலகம் ஊர்காவற்றுறையில் நடைபெறவுள்ளது.
இந்தப் புத்தாண்டுச் சந்தைக்கான ஏற்பாட்டை வடக்கு மாகாணத் தொழிற்துறைத் திணைக்களத்தின் அனுசரனையுடன் தீவகம் வடக்கு ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகம் முன்னெடுக்கிறது.
புத்தாண்டுச் சந்தையில், சிரட்டையினாலான கைவினைப் பொருள்கள், பனை ஓலை சார் உற்பத்திப் பொருள்கள், பதப்படுத்தப்பட்ட உற்பத்திப் பொருள்கள், ஆடைகள், மட்பாண்ட உற்பத்தி கைவினைப் பொருள்கள், காலணி வகைகள், மெழுகுதிரி உற்பத்திப் பொருள்கள், தும்புசார் உற்பத்திப் பொருள்கள், கைத்தறி உற்பத்தியிலான ஆடைகள், அலங்காரப் பொருள்கள், சீமெந்தினாலான உற்பத்திப் பொருள்கள், வாழ்த்து மடல்கள், பனை சார் உணவு உற்பத்திகள் உள்ளடங்கலான பொருள்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (21)



# அமரர் கு.சிவரூபனின் நினைவாக குருதிக் கொடை

யாழ்ப்பாணம்ஏப்.10
அமரர் கு.சிவரூபனின் நினைவாக, அவரது நண்பர்களினால், கணேசன் இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் யாழ். பன்னாலை கணேசா சனசமூக நிலையத்தில் காலை 09.00 மணிமுதல் மாலை01.00மணிவரைகுருதிசேகரிப்புஇடம்பெற்றது . நிகழ்வில் தெல்லிப்பளை ஆதார வைத்திய சாலைகுருதிவங்கிபொறுப்பதிகாரிவைத்தியர்ம.பிரதீபன்தலைமையிலானகுழுவினர்கலந்துகொண்டு குருதிசேகரிபில்ஈடுபட்டிருந்தனர். 31குருதிக்கொடையாளர்கள் குருதிதானம் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# நிர்வாகிகள் தெரிவு

அளவெட்டி, ஏப் .10
வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுற வுச்சங்களின் கொத்தணி ஊழி யர் நலன்புரிச் சங்கத்தின் பொதுக்கூட்டம்அண்மை யில் சங்கத் தலைவர் மா.நவலிங்கம் தலைமையில் நடைபெற்றது.
இதன்போது நிர்வாகத் தெரிவு இடம்பெற்து. அதன்படி தலைவர் மா.நவலிங்கம்,செயலாளர். இ.குகனேஸ்வரன். பொருளாளர். ற.ஸ்ருதி உபதலைவர் க. முருகா னந்தன் ஆகியோரும் நிர்வாக உறுப்பினர்களாக கி.சத்திய காந்தன்,ச.கனிபிகரன், மு.அல்பிரட் போஷகர்,க.சுதாகரன் கணக்காய்வாளர் க. சத்திய சீலன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (63)

# வேம்பிராய் இந்து மயானம் துப்புரவு செய்யப்பட்டது

தென்மராட்சி, ஏப்.10
நீண்டகாலமாகசீரமைக்கப்படாது காணப்பட்டமீசாலை வடக்கு வேம்பிராய் இந்து மயான வளாகப் பகுதி அண்மையில் சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்பட்டது.
சாவகச்சேரிநகரசபையின்பிரதித்தவிசாளர்அ.பாலமயூரனின் ஏற்பாட்டில் மீசாலை வடக்கு சுடர் ஒளி சனசமூக நிலையத்தினரும் மீசாலைப் பிரதேச இளைஞர்களும் இணைந்து துப்புரவு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.
மீசாலை வடக்கு வேம்பிராய் மயானம் தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த 11 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த இந்து மக்களால் இறுதிக் கிரியைக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது..சாவகச்சேரிப் பிரதேச சபையினால் முன்பகுதிக்கு மதில் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் வடக்கு மாகாண சபை உறுப்பினர் கேசவன்சயந்தனின் நிதிஒதுக்கீட்டில்எரிகொட்டகைஅமைக்கப்பட்டுள்ளது.
மக்கள் நடமாட்டமில்லாத பகுதியில் மயானம் அமைந்துள்ளதால்இரவுவேளைகளில்வாகனங்களில்கொண்டு வரப்படும் கழிவுப் பொருள்கள் மயான வளாகத்தினுள் வீசப்பட்டு துர்நாற்றம் வீசிவருகின்றன. இது தொடர்பாக பிரதேச சபை இயங்கிய காலத்தில் தொடர்பு கொண்ட போது சபை எல்லைக்குட்பட்ட ப்குதியில் பெருமளவு மயானங்கள் காணப்படுகின்றன எனவும் சபையில் குறைந்தஅளவுதொழிலாளர்களேகடமையாற்றுவதால் துப்புரவு செய்வதில் சிரமம் காணப்படுகிறது எனவும் பொதுமக்கள் சிரமதானம் மூலம் துப்புரவு செய்வதாக தமக்குஅறிவித்தால் சபையின் ஊழியர்களையும்வாகனங்களையும் வழங்குவதாகவும் தெரிவித்திருந்தனர்.
அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலின் போது மீசாலை மக்கள் தமது கோரிக்கைகளில் ஒன்றாக வேம்பிராய் இந்து மயானத்தைச் சீரமைத்து வழங்க வேண்டுமெனக் கேட்டிருந்தனர்.
சாவகச்சேரிநகரசபையின்மீசாலைமேற்குவட்டாரத்தில் போட்டியிட்டுவெற்றிபெற்றதமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் அ.பாலமயூரன் சபையின்பிரதித்தவிசாளராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். அவரின் ஏற்பாட்டில் அங்குள்ள சனசமூக நிலையத்தினருடன் இணைந்து இளைஞர்களால் துப்புரவுப்பணி இடம்பெற்றது. (21,9)



# தோல்விக்குப் பொறுப்பேற்பது யார்?


## மகிந்த அணிக்குள் பிடுங்குப்பாடு

கொழும்பு, ஏப். 10
தலைமை அமைச்சர் ரணில்விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வியடைந்தமை தொடர்பாக கூட்டுஎதிரணிக்குள் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன.
அநுராதபுரத்தில் ஊடகங்களிடம் நேற்றுமுன்தினம் கருத்து வெளியிட்ட கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.சந்திரசேன, தலைமை அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோற்கடிக்கப்படுவதற்குச் சில குறிப்பிட்ட கூட்டு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்களே காரணம் என்று கூறியுள்ளார்.
அதேவேளை, கூட்டு எதிரணியின் பேச்சாளரான பந்துல குணவர்த்தன கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசியபோது, ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கடைசி நேரத்தில் அரச தலைவரே தோற்கடித்து விட்டார் என்று குற்றஞ்சாட்டியுள்ளார்.
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர் என்ற வகையில், மைத்திரிபால சிறிசேன, நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவளித்திருந்தால், வெற்றி பெற்றிருக்க முடியும் என்றும் அவர் கூறியுள்ளார்.
அதேவேளை, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கட்சிக்குத்துரோகம்இழைத்து விட்டார் என்று நாமல் ராஜபக்சவும் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

# ஐ.தே.கவுக்குள் புயலைக் கிளப்புகிறார் பாலித ரங்க பண்டார!

## சஜித்தும் எதிர்ப்பு

கொழும்பு, ஏப். 10
எதிர்பார்க்கும் விதத்தில் ஐக்கிய தேசியக் கட்சியில் மறுசீரமைப்பு இடம்பெற வேண்டும் என்றும் அவ்வாறு இடம்பெறாவிட்டால் எந்தச் சந்தர்ப்பத்திலும் அதற்கு எதிரான தீர்மானத்தை எடுப்பதில் பின்னிற்கப் போவதில்லை என்று இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கேபண்டார தெரிவித்துள்ளார்.



கட்சிக்குள் நிலவும் பிரச்சினைகள் மற்றும் நெருக்கடி நிலைமைகளைத் தீர்ப்பதற்குத் தாமும் தமது குழுவினரும் தேவையான ஆலோசனைகளை முன்வைத்துள்ளதாகவும்அதனை நடைமுறைப்படுத்துவதற்கு இதுவே உகந்த தருணம் என்றும்அவர்சுட்டிக்காட்டியுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சிக்குள் தற்போது மேற்கொள்ளப்படும் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் உறுதியானதாக அமைய வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்றத்தில் தலைமை அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மான விவகாரத்தில், தலைமை அமைச்சருக்கு எதிராக முதலில் செயற்படப் போவதாகக் குறிப்பிட்டிருந்த இராஜாங்க அமைச்சர் ரங்கே பண்டார இறுதி நேரத்தில் ரணிலுக்கு ஆதரவாக வாக்களித்திருந்தார்.
இதேவேளை, அமைச்சர் சஜித் பிரேமதாசவும் ஐக்கிய தேசியக் கட்சியில் இரண்டு பிரதித் தலைவர்கள் உருவாக்கப்படுவார்களானால் அதை முழுமையாக எதிர்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.
மேற்படி விடயம் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் நிர்வாகக் குழுக் கூட்டத்தில் பேசப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட அவர் அவ்வாறு இரண்டு பிரதித் தலைவர்கள் நியமிக்கப்படுவார்களானால் தாம் தமது பிரதித் தலைவர் பதவியிலிருந்து விலகப் போவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.
மேற்படி நிர்வாகக் குழுக்கூட்டத்தில் சஜித் பிரேமதாசவைப் பிரதித் தலைவராகவும், முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்கவை உப தலைவராக நியமிக்கவும் தீர்மானம் எடுக்கப்பட்டதாகக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. அதேவேளை மேலும் உப தலைவர்கள் பதவிகளை உருவாக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் கட்சி மறுசீரமைப்பின்போது அதற்கான முடிவு எடுக்கப்படவுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (5)

# ரஷ்யாவிடம் போர்க்கப்பல் வாங்குகின்றது இலங்கை

கொழும்பு, ஏப். 10
போர்க்கப்பல் கொள்வனவு தொடர்பாகப் பேச்சு நடத்துதற்காக, பாதுகாப்புச் செயலர் கபில வைத்தியரத்ன, பாதுகாப்பு அதிகாரிகளின் குழுவொன்றுடன் ரஷ்யாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார் என்று கொழும்பு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.
இந்தக் குழுவில், பாதுகாப்பு அமைச்சின் மேலதிகச் செயலர் சரத் குமார, கடற்படைத் தளபதி அட்மிரல் ரணசிங்க ஆகியோரும் அடங்கியுள்ளனர்.
மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் வழங்கப்பட்ட 500 மில்லியன் டொலர் கடன் திட்டத்தில் எஞ்சியுள்ள தொகையைக் கொண்டு, 158 மில்லியன் டொலர் பெறுமதியான போர்க்கப்பலை ரஷ்யாவிடம் இருந்து கொள்வனவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. (5)

# மகிந்த அணி இன்று கூடுகிறது

கொழும்பு, ஏப். 10
கூட்டு எதிர்க்கட்சியின் சிறப்புக் கூட்டம் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையில் இன்று பிற்பகல் நடைபெறவுள்ளது.
தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மான வாக்கெடுப்பின் பின்னர் முதற் தடவையாகக் கூட்டு எதிர்க்கட்சியின் கூட்டம் நடத்தப்படவுள்ளது. நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வியடைந்தமை குறித்து இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்படவுள்ளது. மேலும், எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனுக்கு எதிராகக் கொண்டு வரத் தீர்மானித்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பில் இறுதி முடிவும் எடுக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (5)

# மாபெரும் புத்தக கண்காட்சி கொழும்பில்

கொழும்பு, ஏப். 10
உலகின் மாபெரும் புத்தகக் கண்காட்சியான 'பிக் பாட் வுள்வ்' (Big Bad Wolf) எதிர்வரும் ஜூன் மாதம் இலங்கையில் இடம்பெறவுள்ளது.
இந்தக் கண்காட்சி கொழும்பிலுள்ள கண்காட்சி மற்றும் மாநாட்டு மண்டப வளாகத்தில் நடைபெறவுள்ளது.
இந்தக் கண்காட்சியில் சுமார் ஒன்று தசம் ஐந்து பில்லியன் புத்தகங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளதுடன் இவற்றை கொள்வனவு செய்பவர்களுக்கு சிறப்புக் கழிவுகளும் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

# பணத்துக்காக நாட்டை காட்டிக் கொடுக்கின்றனர்



## கவலைப்படுகிறார் கரு ஜயசூரிய

கொழும்பு, ஏப். 10
சில அரசியல்வாதிகள் பணத்துக்காக நாட்டைக் காட்டிக் கொடுப்பதாகச் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.
மாத்தளையில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
அதிகார மோகம் கொண்ட அரசியல்வாதிகள்பணத்தை முன்னிலைப்படுத்திச் செயற்பட்டு வருகின்றனர். இதன் காரணமாகவே தேசிய ஐக்கியம் மிகவும் முக்கியமானது என்று வலியுறுத்துகின்றேன். 1948 ஆம் ஆண்டு இலங்கைக்கு சுதந்திரம் கிடைக்கப் பெற்றபோது ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையில் ஒரே விதமான பொருளாதார நிலைமை காணப்பட்டது. தேசிய ஐக்கியம் காரணமாக ஜப்பானியர்கள் முன்னேறிச் சென்றனர். நாம் இன்னமும் பின்னடைவு நிலையில் உள்ளோம் - என்றார். (5)

# சபாநாயகரின் வானூர்தியால் தடைப்பட்ட விளையாட்டு விழா!



கொழும்பு, ஏப். 10
சபாநாயகர் கரு ஜயசூரியவை ஏற்றி வந்த வான் படை உலங்கு வானூர்தி தரித்து நின்றமையால், தாங்கள்ஏற்பாடுசெய்திருந்தசித்திரைப் புத்தாண்டு விளையாட்டு விழா தடைப்பட்டு விட்டது என்று மாத்தளையிலுள்ள பாடசாலையின் நிர்வாகம் தெரிவித்துள்ளது.
மாத்தளை நகர சபையினால் நிர்வகிக்கப்படும் எட்வட் விளையாட்டு மைதானத்தில், கடந்த சனிக்கிழமை புத்தாண்டு விழாவைக் கொண்டாடுவதற்காக, பணம் செலுத்தி முன்கூட்டியே பதிவு செய்திருந்ததாக நிர்வாகம் தெரிவித்துள்ளது.
மாத்தளை வீர மடுகல்லேயின் நினைவு தின வைபவத்தில் பங்கேற்பதற்காக, சபாநாயகர் கரு ஜயசூரிய உலங்கு வானூர்தியில் வந்தார். அவர் பயணித்த உலங்கு வானூர்தி அந்த விளையாட்டு மைதானத்தில் சுமார் 4 மணி நேரம் தரித்து நிறுத்தப்பட்டிருந்தது.
இதனால், கல்லூரியின் மாணவர்கள், பெற்றோர் மற்றும் நிர்வாகத்தினர் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்தனர் என்று தெரிவித்த கல்லூரின் பணிப்பாளர் சட்டத்தரணி பிரசன்ன தர்மகீர்த்தி, நகரத்தில் இன்னும் சில, விளையாட்டு மைதானங்கள் இருக்கின்றன. இந்த நிலையில், உலங்கு வானூர்தியை இறக்குவதற்கு இந்த மைதானத்தைத் தெரிவு செய்தமை கண்டிக்கத்தக்கதாகும் - என்றார். (5)

# விபத்து சாவுகள் திடீர் அதிகரிப்பு


கொழும்பு, ஏப். 10
இந்த ஆண்டில் வீதி விபத்துக்களால் ஏற்பட்ட உயிரிழப்பு பெரியளவில் அதிகரித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.
கடந்த மூன்று மாத காலப் பகுதியில் 3 ஆயிரத்து 368 வாகன விபத்துகள் பதிவாகி உள்ளன.
வீதி விபத்துக்களினால் 2017ஆம் ஆண்டு 267 பேர் உயிரிழந்தனர். ஆனால் இந்த ஆண்டின் இதுவரையான காலப் பகுதியிலேயே 476 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (5)

# நக்கில்ஸ் மலைத்தொடரில் 7 சுற்றுலாவிகளைக் காணவில்லை

கொழும்பு, ஏப். 10
மாத்தளை நக்கில்ஸ் மலைத்தொடர் பகுதியில் சுற்றுலாப் பயணிகள் 7 பேரைக் காணவில்லை என்று முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து அங்கு முப்படையினரும் பொலிஸாரும் தேடுதலில் ஈடுபட்டுள்ளனர்.
பொலிஸ் அவசர உதவிப் பிரிவு 119 இற்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே இந்தத் தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது. 4 பொலிஸ் நிலையங்களிலிருந்து பல நூற்றுக் கணக்கான பொலிஸாரும் அந்தப் பகுதிக்குள் தேடுதலில் ஈடுபட்டுள்ளனர். அத்துடன் இராணுவம் உள்ளிட்ட முப்படைகளும் தேடுதலில் ஈடுபட்டுள்ளன. (5)



கேலிச்சித்திரம்



நன்றி: டெய்லிமிரர்

# அம்பாந்தோட்டை மக்களை வளைத்துப்போடும் இந்தியா

## 70 ஆயிரம் பேருக்கு வாழ்வாதார உதவிகள்

கொழும்பு, ஏப். 10

அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவுக்கு நீண்ட கால குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள நிலையில், அங்குள்ள மக்களுக்கு இந்திய அரசால் வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.



அம்பாந்தோட்டை மாவட்டத்தின் அம்பலான்தோட்டப் பகுதியில் உதவி வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. மீன்பிடி அமைச்சரும், அந்த மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவருமான அமைச்சர் மகிந்த அமரவீர, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தரன் ஜித் சிங் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

அம்பாந்தோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள், மீனவர்கள் உள்ளிட்ட 70 ஆயிரம் பேர் இந்த வாழ்வாதார உதவித் திட்டத்தால் நன்மை பெற்றுள்ளனர். 7 ஆயிரம் ஈருருளிகள், ஆயிரம் தையல் இயந்திரங்கள், 60 ஆயிரம் மண்வெட்டிகள் இந்த நிகழ்வில் வைத்து வழங்கப்பட்டுள்ளன. இவற்றுக்காக இந்திய அரசு 138 மில்லியன் இலங்கை ரூபா நிதி வழங்கியுள்ளது. "இந்திய அரசு அவசியமான எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இலங்கைக்கு உதவத் தயாராக இருக்கின்றது" என்று இலங்கைக்கான இந்தியத் தூதுவர் குறிப்பிட்டார். சீனா, இந்தியா போட்டியின் மையமாக அம்பாந்தோட்டை மாறியுள்ள நிலையில், இந்தியாவால் அம்பாந்தோட்டை மக்களுக்கு இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)



## நாட்டை முன்னேற்ற ஒன்றுபடுங்கள்

### மகிந்த அமரவீர கோரிக்கை

கொழும்பு, ஏப். 10

கட்சி பேதங்களை கடந்து அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து நாட்டை முன்னேற்றப் பாதைக்குக் கொண்டு செல்வது தொடர்பில் சகல தரப்புடனும் கலந்துரையாடப்படும் என்று அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டில் கடந்த சில மாத காலமாக உறுதிப்பாடற்ற நிலைமை தொடர்கிறது. தலைமை அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தை அரச தலைவர் மைத்திரி எங்களிடம் கொடுத்திருந்தார். பெரும்பான்மையானவர்களின் நிலைப்பாடு வாக்களிப்பில் இருந்து சுதந்திரக் கட்சி விலகி இருக்க வேண்டுமென்பதாகும். ஏனென்றால் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் இறுதி இலக்கு அரசைக் கவிழ்ப்பதாகும். நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வியடையும் என்பதாலேயே நாங்கள் வாக்களிப்பில் இருந்து விலகியிருந்தோம் - என்றார். (5)

## காதல் முறிந்தது தேர்தல்வேண்டும்

### நாமல் ராஜபக்ச தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 10

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க வுக்கும் இடையிலான காதல் முறிந்துவிட்டது. உடனடியாக நாடாளுமன்றில் பெரும்பான்மையைப் பயன்படுத்தி பொதுத் தேர்தலுக்கான அழைப்பை விடுக்க வேண்டும். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச கோரிக்கை விடுத்துள்ளார்.

நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாடாளுமன்றத் தேர்தல் நடத்தக் கோரி நாம் வீதியில் இறங்கப் போகின்றோம்.

அரசின் இந்தக் காதல் பயணம் வெற்றி பெறாது. விவாகரத்து வழக்கு தற்போது தாக்கல் செய்யப்பட்டு விட்டது. வழக்கில் தீர்ப்பு வழங்கப்படாவிட்டாலும் மனதளவில் விவாகரத்துப் பெற்று விட்டனர். தேர்தலை ஒத்திவைக்க பயன்படுத்தப்பட்ட மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பயன்படுத்தி தயவு செய்து தேர்தலை நடத்துங்கள் - என்றார். (5)

## மின்உற்பத்தி நிலையங்கள் அமைக்கத் தீர்மானம்

கொழும்பு, ஏப். 10

நாட்டின் மின்சார தேவையைக் கருத்திற் கொண்டு புதிதாக மின் உற்பத்தி நிலையங்களை அமைப்பதற்கு மின்சக்தி மற்றும் மீள்புதுப்பிக்கத் தக்க சக்தி அமைச்சு தீர்மானித்துள்ளது. (5)



## தொண்டமான் - விக்கி சந்தித்துப் பேச்சு

யாழ்ப்பாணம், ஏப். 10

யாழ்ப்பாணத்துக்கு மூன்று நாள் பயணமாக வருகை தந்துள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், பொதுச் செயலரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமான், வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை முதலமைச்சரின் இல்லத்தில் நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின்போது, உள்ளூராட்சி சபைத் தேர்தலின் போது, நுவரெலியா மாவட்டத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸால் கைப்பற்றப்பட்ட பிரதேச சபைகளின் வெற்றி தொடர்பிலும், எதிர்கால அரசியல் நகர்வுகள் சம்பந்தமாகவும் ஆலோசனை நடத்தியுள்ளார்.

மத்திய, ஊவா மாகாண தமிழ் கல்வி அமைச்சர்களான மருதபாண்டி ரமேஷ்வரன், செந்தில் தொண்டமான், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மாகாண சபை உறுப்பினர்கள் உள்பட பல முக்கிய உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (5)

## ரணிலுக்கு எதிராக வாக்களித்த அமைச்சர்களை விரட்டியடியாதீர்!

### சுயாதீனமாக அவர்கள் வெளியேற வேண்டும் என்கிறார் மனோ



கொழும்பு, ஏப். 10

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மான வாக்கெடுப்பின்போது தீர்மானத்துக்கு ஆதரவாகவும் ரணிலுக்கு எதிராகவும் வாக்களித்த அமைச்சர்கள் இந்த அரசில் தொடர்ந்தும் அங்கம் வகிப்பது தார்மீக ரீதியாக சரியானதாக இருக்க முடியாது. அவர்களை விரட்டியடிக்கவும், திட்டித்தீர்க்கவும் முடியாது. அவர்களுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரமுடியாது. அவர்களே சுயாதீனமாக செல்லும் வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும். இவ்வாறு தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

'தானாக கனியும் பழத்தை தடியால் அடித்து கனிய வைக்க வேண்டுமா? தேவையில்லை. அவ்வாறு செய்வதால், பிரச்சினைகள் தான் அதிகரிக்கின்றன. அரசில் பிளவும் ஏற்படும்' - என்றார். (5)

## தேர்தலில் வெற்றி பெறவேண்டுமாயின் மகிந்தவுடன் சு.க. இணையவேண்டும்

### லக்ஸ்மன் யாப்பா தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 10

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் தலைமைஅமைச்சரை நீக்கமுடியாது போனால், அன்றைய தினத்தில் கூட்டு அரசு முடிவுக்கு வரும் என்று நான் கூறியதில் எவ்வித மாற்றமும் இல்லை. எதிர்வரும் 19ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும்போது நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்த அனைவரும் எதிர்க்கட்சி வரிசைக்குச் சென்று அமர்ந்து கொள்வார்கள். இவ்வாறு இராஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.



"சிறிலங்கா சுதந்திரக் கட்சி சம்பந்தமாக காணப்படும் அரசியல் சூழலில் தேர்தலில் வெற்றிபெற வாய்ப்பில்லை என்பது கட்சியில் பெரும்பான்மையானோர் கருதுகின்றனர். தேர்தலில் வெற்றிபெற வேண்டுமாயின் எந்த நிபந்தனைகளாக இருந்தாலும் அதனடிப்படையில் மகிந்த ராஜபக்ச தரப்புடன் இணையவேண்டும் என்ற கடும் நிலைப்பாடு கட்சிக்குள் ஏற்பட்டுள்ளது" என்றும் அவர் கூறினார். (5)

## சிறுமி மீது துர்நடத்தை வயோதிபருக்கு மறியல்

கொழும்பு, ஏப். 10
திருகோணமலை அக்போபுர பகுதியில் 16 வயதுடைய சிறுமியைத் துர்நடத்தைக்கு உட்படுத்திய 70 வயதுடைய நபரொருவரை எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. கந்தளாய் நீதிமன்ற நீதிவான் துசித்த தம்மிக்க இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்ட சந்தேகநபர் சீனிபுர, கந்தளாய் பகுதியைச் சேர்ந்தவர் என்றும் சிகை அலங்கரிப்பு நிலையமொன்றை நடத்தி வந்தவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. பாதிக்கப்பட்ட சிறுமியின் பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கமைய சந்தேகநபர் கடந்த 7ஆம் திகதி இரவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். நீதிமன்றில் சந்தேகநபர் முற்படுத்தப்பட்ட போதே அவருக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (5)

## ரணிலுக்கு எதிரான தீர்மானத்தின் பின்னணியில் பல்வேறு தகவல்கள்

கொழும்பு, ஏப். 10
தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பான யோசனையின் பின்னணியில் வெளிவராத பல இரகசியங்கள் இருப்பதாக அரசியல் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவைத்தோற்கடித்து,தலைமை அமைச்சராக நிமல் சிறிபால டி சில்வாவை நியமிக்கத் திட்டமிடப்பட்டிருந்தது. மூன்று மாத குறுகிய காலத்திற்கே நிமல் சிறிபால டி சில்வாவை தலைமை அமைச்சராக நியமிக்க திட்டமிடப்பட்டிருந்தது. இந்த மூன்று மாத காலத்தில் பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவைக் கலைக்கும் நோக்கம் இருந்ததாகக் கூறப்படுகிறது.

இதன் பின்னர் மகிந்த ராஜபக்சவைத்தலைமைஅமைச்சராக நியமிக்கக்கூட்டுஎதிர்க்கட்சி திட்டமிட்டிருந்தது.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பான வாக்கெடுப்பில் கலந்துக்கொள்ளாத சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தத் திட்டத்துக்கு எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர். இதன் காரணமாகவே இறுதி நேரத்தில் அவர்கள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

மேலும் விமல் வீரவன்ச, உதய கம்மன்பில மற்றும் மகிந்தானந்த அளுத்கமகே ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்களே நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்காக முன்னெடுப்புகளை மேற்கொண்டிருந்தனர். கூட்டு எதிர்க்கட்சியைச் சேர்ந்த சிலர் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்படுவதற்குப் போதிய ஆதரவை வழங்கவில்லை. அத்துடன் நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிக்கவிருந்த ஐக்கிய தேசியக்கட்சியின்நாடாளுமன்றஉறுப்பினர்ஆனந்த அளுத்கமகே இரண்டு தினங்களுக்கு முன்னர் தனது முடிவை மாற்றிக் கொண்டதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் ஹப்புஹாமி தலையிட்டு அவரை தடுத்துள்ளதாகவும் அரசியல் வட்டார தகவல்கள் மேலும் தெரிவித்துள்ளன. (5)



## சம்பந்தனுக்கு அமைச்சு பதவியை வழங்குங்கள்

### வாசுதேவ அரசுக்கு ஆலோசனை

கொழும்பு, ஏப். 10
எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் இருந்து கொண்டு அரசுக்கு ஆதரவாக இரா.சம்பந்தனும் அவரது கட்சி சகாக்களும் செயற்படுகின்றனர். எதிர்க்கட்சித் தலைவர் என்பதை விடப் புதிய அமைச்சரவையில் அமைச்சர் என்பது இவருக்குப் பொருத்தமாகவே காணப்படும். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கூட்டு அரசில்எதிர்க்கட்சித்தலைவராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை நியமித்தமை நாடாளுமன்ற பாரம்பரிய முறைமைகளுக்கு முரணானதாகவே காணப்படுகின்றது. 2015ஆம் ஆண்டு தொடக்கம் தலைமை அமைச்சருக்கும் கூட்டு அரசுக்கும் ஆதரவாகச் செயற்பட்டு அரசின் பங்காளியாக எதிர்க்கட்சித் தலைவர் இடம் பிடித்துள்ளமை எதிர்க்கட்சிப் பதவிக்கு எதிரானதாகவே காணப்படுகின்றது - என்றார்.

இதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை மகிந்த அணியினர் கொண்டு வரத் திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

## மகிந்த காலத்தில்

# ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல் சரத் பொன்சேகாவே முழுப் பொறுப்பு

### விரல் நீட்டுகிறார் மேஜர் அஜித் பிரசன்ன



கொழும்பு, ஏப். 10
மகிந்த ஆட்சிக் காலத்தில் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்களுக்கு பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவே பொறுப்பு என்று தாய் நாட்டுக்கான படைவீரர்கள் அமைப்பின் அழைப்பாளர் மேஜர் அஜித் பிரசன்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அண்மைக் காலமாகப் பாதுகாப்புத் தொடர்பான ஏதேனும் விடயம் என்றால் அந்த விடயத்தைச் சரத் பொன்சேகாவிடம்தலைமை அமைச்சர் ரணில் ஒப்படைக்கின்றார். நான் சொல்வதைப் போன்று இரு, நாம் சொல்லுவதனை பேசு இல்லாவிட்டால் உன்னை பிடித்துக் கொடுப்போம் என்று சரத்பொன்சேகாவை, ரணில் மிரட்டுகின்றார்.

சரத் பொன்சேகாவின் அலுமாரியை திறந்த பார்த்தால் லசந்தவின் எலும்புக்கூடு உள்ளது. கீத் நொயாரின் கைகளைக் கட்டுவதற்கு பயன்படுத்திய கயிறும் அதே அலுமாரியில் உண்டு. ரிவிர ஆசிரியர் உபாலி தென்னகோனை தாக்கு வதற்குப் பயன்படுத்திய ஆயுதங்களும் அதே அலுமாரியிலேயே உள்ளது.

நான் மிகுந்த பொறுப்புடன் இதனைக் கூறுகின்றேன். கீத் நொயார் மற்றும் உபாலி தென்னக்கோன் ஆகியோரைத் தாக்கியது சரத் பொன்சேகாவுக்கு அருகாமையில் இருந்த குழுவொன்றேயாகும். என்னிடம் அது குறித்த கோவைகள் உள்ளன. சரத் பொன்சேகாவின் சட்ட அதிகாரியாக நான் கடமையாற்றியிருக்கின்றேன். அவரது ஆவணங்கள் பல இன்னும் என்னிடம் உள்ளன. - என்றார். (5)

## உலங்குவானூர்தியை உருவாக்கிய மாணவன்



கொழும்பு, ஏப். 10
மாணவன் ஒருவன் பறக்கக் கூடிய வகையில் உலங்கு வானூர்தியைச் சுயமாகத் தயாரித்துச் சாதனை படைத்துள்ளார்.

திம்புலாகல, அரலங்வில விலயாய மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவன் நான்கு பேர் பயணிக்கக் கூடிய உலங்கு வானூர்தியைத் தயாரித்துள்ளார்.

உயர்தரத்தில் கல்வி கற்கும் ஹிரத்த பிரசாத் என்ற மாணவரே உலங்குவானூர்தியைத் தயாரித்துள்ளார். பாடசாலையில் இடம்பெற்ற தொழில்நுட்ப கண்காட்சிக்காக உலங்கு வானூர்தியைத் தயாரித்து சமர்ப்பித்துள்ளார். உலங்கு வானூர்தியைத் தயாரிப்பதற்குச் சுமார் மூன்று மாதங்களைச்செலவிட்டுள்ளார். தயாரிப்புக்காகத் தகடு, இரும்பு, தையல் இயந்திரங்களின் பகுதிகள், கணினி பகுதிகள் ஆகியவைகள் பயன்படுத்தப்பட்டுள்ளதாக மாணவன் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மாணவன் இதற்கு முன்னர் பலபுதிய தயாரிப்புகளை மேற்கொண்டு பல்வேறு வெற்றிகளைப் பெற்றுள்ளார்.

தான் தயாரித்த உலங்கு வானூர்தியை வானில் செலுத்துவதற்காக அனுமதி வழங்குமாறு மாணவன் கோரிக்கை விடுத்துள்ளான். (5)

## இலங்கையிலிருந்து இந்தியாவுக்குச் சென்ற துருக்கியர் கைது

கொழும்பு, ஏப். 10
இலங்கையில் இருந்து உரிய ஆவணங்களின்றி, படகு மூலம் இராமேஸ்வரம் சென்ற துருக்கி நாட்டவரை உளவுப் பிரிவுப் பொலிஸார் கைது செய்தனர்.

இராமேஸ்வரம் சேரன்கோட்டையில் அமைந்துள்ளது கடற்படை முகாம். அந்தப் பகுதியில் கடற்படைப் பொலிஸார் சுற்றுக் காவல் பணியில் ஈடுபட்டு கொண்டிருந்தனர். சந்தேகத்துக்கு இடமான பைபர் படகில் அங்கு சுற்றித் திரிந்த வெளிநாட்டவர் ஒருவரை மடக்கிப் பிடித்தனர்.

விசாரணையில், அவர் துருக்கி நாட்டை சேர்ந்த மஹீர் தேவரீம் என்பதும், கஜகஸ்தான், மலேசியா ஆகிய நாடுகளில் வசித்துவந்த அவர், கடைசியாக இலங்கை வந்து யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்துள்ளார் என்றும் தெரிய வந்துள்ளது. இலங்கையில் இருந்து அனுமதியின்றியும், உரிய ஆவணங்கள் இன்றியும் படகில் வந்துள்ளார் என்பது தெரிய வந்ததையடுத்து, பொலிஸார் அவரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். (5)

## ஏனைய இனங்கள் மீது சம்பந்தனுக்கு காழ்ப்புணர்வு

### இப்படிச் சொல்கிறார் சரத் வீரசேகர



கொழும்பு, ஏப். 10
வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் முக்கியமானஅரசதிணைக்களங்களுக்குத் தமிழ் பேசும் மக்களை மாத்திரம் நியமிக்க வேண்டும் என்கின்ற எதிர்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனின் கருத்தானது பிற இனங்கள் மீது அவர் கொண்டுள்ள வெறுப்பைக் காழ்ப்புணர்வை எடுத்துக் காட்டுகின்றது. இவ்வாறு ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

"தலைமை அமைச்சர் ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமக்குச் சாதகமாக பயன்படுத்தி கொண்டுள்ளது. தீர்மானத்தைக் காரணம் காட்டி 10 நிபந்தனைகளில் ரணிலும் கையெழுத்து வாங்கியுள்ளது.

தலைமை அமைச்சர் ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத் துக்கு எதிர்கட்சி தலைவர் எதிராகச் செயற்பட்டமை அவரது பதவிக்கு பொருத்தமற்றது" என்று சரத் வீரசேகர குறிப்பிட்டார். (5)


அ.ந.ஆனந்தராசா (அப்பா)



வாடிக்கையாளர்களுக்கு ஓர் மகிழ்ச்சியான செய்தி

கடந்த 40 வருடகாலமாக யாழ் கஸ்தூரியார் வீதியில்
புகழ்பெற்ற எமது ஸ்தாபனம் எதிர்வரும் 16 ஆம்
திகதி முதல் யாழ் ஆஸ்பத்திரிக்கு முன்பாக

462, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு இடமாற்றம் செய்யப்படும் என்பதை
மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்



நியூ லலிதா
நகை மாளிகை

யாழ்ப்பாணம் கிளிநொச்சி

அந்த நாள் ஞாபகத்திற்கு என்னவொரு வசீகரம்
பாரம்பரியத்தின் அழகுக்கும் தரத்திற்கும்
சின்னமாக விளங்கும் கைராசியான ஸ்தாபனம்

462, Hospital Road, Jaffna. (Opposite of Jaffna Hospital) Tel: 021 222 4648 / 021 222 2552



அனைவருக்கும் இனிய சித்திரைப்புத்தாண்டு வாழ்த்துக்கள்

யாழ் வீரசிங்கம் மண்டபத்தில்

திருமண பட்டுப்
புடைவைகளின் பூங்காவனம்

இந்தியன் செலக்ஷனின்

மாபெரும்
மெகா சேல்
10%-50% வரை
விலைக்கழிவு



15.04.2018
வரை

ஞாயிற்றுக்கிழமைகளிலும்
திறந்திருக்கும்

- ✓ திருமணப் பட்டு சாறிகள்
- ✓ கொட்டன் சாறிகள்
- ✓ சில்க் சாறிகள், அலுவலக பாவனை சாறிகள் (Office Ware Saree)
- ✓ சல்வார்கள், ✓ சல்வார் துணிகள்
- ✓ டொப் வகைகள் ✓ சேட் வகைகள்
- ✓ சிறுவர், சிறுமிகளுக்கான
- ✓ ஆடை தினுசுகள்

அனைத்தும் ஒரே கூரையின் கீழ்

அனைவரையும்
அன்புடன்
அழைக்கின்றோம்



10,000/- ரூபாவுக்கு மேல்
கொள்வனவு செய்யும்
வாடிக்கையாளர்களுக்கு
இந்தியன் செலக்ஷனின் சின்னம்
பொறிக்கப்பட்ட அழகிய குடை
ஒன்று அன்பளிப்பாக வழங்கப்படும்.

# MICRO PC SYSTEMS

DELL hp AUTHORIZED DEALER

## சித்திரைப் புத்தாண்டு சிறப்பு விலைக்கழிவுகள்

**DELL INSPIRON 3552**
Pentium Q/C 3710 2.56GHz
4GB DDR3
500GB
Intel HD Graphics
DVD R/W
WIFI + Bluetooth
15.6" LED Truelife-HD
Ubuntu Linux
1 Year Warranty
~~Rs.50,000/-~~ Rs.47,500/-

**DELL INSPIRON i3-3567**
7th Gen i3-7100U 2.4GHz
4GB DDR4
1TB
Intel HD Graphics
DVD R/W
WIFI + Bluetooth
15.6" LED Truelife-HD
Ubuntu Linux
2 Years Warranty
~~Rs.69,000/-~~ Rs.65,500/-

**DELL VOSTRO i3-3568**
7th Gen i3-7100U 2.4GHz
4GB DDR4
1TB
Intel HD Graphics
DVD R/W
WIFI + Bluetooth
15.6" LED Truelife-HD
Ubuntu Linux
3 Years Warranty
~~Rs.71,000/-~~ Rs.68,000/-

**HP 15-BS629TU-3GM32PA**
Intel CELERON N3060 2.48GHz
4GB DDR4
500GB
Intel HD Graphics
DVD R/W
WIFI + Bluetooth
15.6" LED Display
WIN10 SL
1 Year Warranty
~~Rs.51,000/-~~ Rs.47,000/-

**HP 15-BS634TU-3GP35PA**
7th Gen i3-7130U 2.7GHz
4GB DDR4
1TB
Intel HD Graphics
DVD R/W
WIFI + Bluetooth
15.6" LED Trelife-HD
WIN10 SL
2 Years Warranty
~~Rs.75,500/-~~ Rs.72,500/-

**DELL VOSTRO 3669 PC**
7th Gen i3-7100 3.90GHz
4GB DDR4
1TB
Intel HD Graphics
DVD R/W
WIFI + Bluetooth
18.5" WideLED BlackLight
DOS
3 Years Warranty
~~Rs.71,500/-~~ Rs.68,500/-

முகவரி : இல : 218 , வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம் - 021 222 5893
கிளை : இல : 66B, 2ம் குறுக்குத்தெரு,வவுனியா - 024 222 1969
மின்னஞ்சல் : jaffna@micropcsystems.com
இணையம் : www.micropcsystems.com
தொடர்புகளுக்கு : 077 396 3280 / 077 303 9536
(Headoffice : No -115C,W.A.Silva Mawatha,Colombo-06 - 011 236 7405)



Auto maasters Lanka (Pvt) Ltd is a leading auto mobile company in Jaffna since 2015. We are providing the total vehicle solutions under the one roof and we have 45 highly committed employees with us.

AUTO MAASTERS

Our services: Vehicle service & maintenance, Accidental repairs, Booth painting, Hybrid battery service, Vehicle scanning, Engine tune up, Wheel alignment, Interior works, Ac and electrical works

## CAREER OPPORTUNITY

A Leading Automobile workshop in Jaffna awaits to sharp your future.

**Accounts Assistant (Male)**
**Customer relationship officer (Male/Female)**
**Marketing executive officer (Male)**

Qualification

- Three passes in Advance level most preferable
- Relevant work experience will be the added advantage
- MS office package and accounting software package skills
- Ability to handle pressure and complex working environment

A good remuneration package will be given to the selected candidates

If you are willing to take up the challenge please forward your CV with a newly taken Photograph to Automaasters@gmail.com or to the mentioned address by registered post with in 14days of this advertisement

For more information:
Feel free to contact HR Department from 0773931393/ 0771099069

## Auto Maasters (Pvt) Ltd.

63, Nedumkulam Road, Ariyalai, Jaffna
Telephone Number - 0765489921

Authorized dealers of
Ford TOYOTA HYUNDAI


## சைவ வித்தியா விருத்திச் சங்கம்
## உடன் வருகை நேர்முகத் தேர்வு (Walk in Interview)

**1. முகாமைத்துவ உதவியாளர் (தரம் 2) - பெண்**
- க.பொ.த.உயர்தரத்தில் வணிகக் கல்வித் தகைமை
- கணினியில் தேர்ச்சியுடையவராக இருப்பது சிறப்புத் தகைமை
- வயதெல்லை 25 - 50
- ஆரம்ப சம்பளம் - ரூபா 14400/- (மாதம் ஒன்றுக்கு)

**2. விடுதிக் காப்பாளர் (ஆண்/ பெண்)**
தகைமை
- க.பொ.த.சாதாரண தரத்துக்குக் குறையாத கல்வித் தகைமை
- விடுதியில் தங்கியிருப்பது கட்டாயம். உணவும், தங்குமிட வசதியும் இலவசம்.
- விண்ணப்பதாரர் தேகாரோக்கியம் உடையவராகவும், இல்லப் பிள்ளைகளைப் பரிவோடு கவனிப்பதிலும், சைவாசாரம் பேணுவதிலும், வழிகாட்டுவதிலும் அர்ப்பணிப்போடு ஈடுபடுபவராகவும் இருத்தல் வேண்டும்.
- வயதெல்லை - 25 - 50
- ஆரம்ப சம்பளம் - ரூபா.12,010/- (மாதம் ஒன்றுக்கு)

**3. தையற் போதனாசிரியர்**
- அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து தையற் பயிற்சி பெற்றதற்கான சான்றிதழ்.
- வயதெல்லை - 25 - 50
- ஊதியம் - ஒப்பந்த அடிப்படையில் பேசி நிர்ணயிக்கப்படும்.

மேற்படி பதவிகளுக்குப் பொருத்தமான விண்ணப்பதாரிகள் 18.04.2018 அன்று பிற்பகல் 3 மணிக்கு உரிய சான்றிதழ்களோடும் சுயவிவரத்தோடும் நேரடியாக அலுவலகத்துக்கு வருகை தரவும்.

சைவ வித்தியா விருத்திச் சங்கம்,
கலாசாலை வீதி, திருநெல்வேலி.
(AJA/6428)(11,17)
தி.செல்வமனோகரன்,
செயலாளர்.


E,S Printers
மக் பிரின்ட் (MUG) 450/=
021 492 7471,
021 492 7472
esprintersjaffna@gmail.com
357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


## ஓராண்டு நினைவில்



**செல்வி தக்ஷினி அற்புதராஜா**

மண்ணில் 05.05.1979
விண்ணில் 23.03.2017


திதி:- தசமி
(10.04.2018)

ஓராண்டு கழிந்தாலும் உங்கள் நினைவுகள் எங்களை விட்டகலா
அன்பின் சின்னமாய் அரவணைத்து பண்பின் பாதையில் வழி நடத்தி
ஆயிரம் உறவையும் அரவணைத்த நீங்கள் ஆறாத்துயரில் எமைவிட்டுப் பிரிந்ததேனோ?
நீங்காத நினைவுகளுடன் உதிரும் கண்ணீர்ப் பூக்களால் அர்ச்சித்து உங்கள்
ஆத்மசாந்திக்காய் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

கரந்தன், நீர்வேலி. (CS/600)(11,17) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### அருணாசலம் பாலசிங்கம்
(Retd.P.M)



கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் பாலசிங்கம் (இளைப்பாறிய தபால் அதிபர்) 7.4.2018 சனிக்கிழமை கொழும் பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - புவனேஸ்வரி தம்பதியரின் மருமகனும், மங்கையகரசியின் அன்புக் கணவரும், தனுசா, சாமினி, சிறிதரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், கஜேந்திராகுமார் சிவா, றஞ்சினி ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான நகுலேஸ்வரி, பாலசுப்பிரமணியம், சண்முகலிங்கம் மற்றும் கமலாம்பிகை இராஜேஸ்வரி, தர்மாம்பிகை ஆகியோரின் சகோதரரும், சிவசுப்பிரமணியம் சரோஜினி, லலிதா, பகவதி ஆகியோரின் மைத்துனரும், போதிகஜனா, ஹிமவந்தன், சிந்தியா, சமிரா, செல்சியஸ் சொலமன் ஆகியோரின் அன்புப்பாட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் மகிந்த மலர்ச்சாலையில் இன்று (10.04.2018) செவ்வாய்க்கிழமை அஞ்சலிக்குவைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகள் நாளை (11.04.2018) புதன்கிழமை நண்பகல் நடைபெற்று தகனக்கிரியைகள் கல்கிசை பொது மயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தகவல் - குடும்பத்தினர்.
கல்கிசை.

முல்லைத்தீவில்

## மாகாண சபை உறுப்பினர்களின் கவனவீர்ப்புப் போராட்டம் இன்று

முல்லை மாவட்டச் செயலரை செயலகத்தில் நிற்குமாறு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், ஏப். 10
முல்லைத்தீவு மாவட்டத்தில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களின் கவனவீர்ப்புப் போராட்டம் இன்றையதினம் இடம்பெறவுள்ளதால் முல்லைத்தீவு மாவட்டச் செயலரை அலுவலகத்திலேயே நிற்குமாறு மாகாண சபையால் செயலருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுவரும் சிங்களக் குடியேற்ற இடங்களைப் பார்வையிடுவதுடன் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக அனைத்து மாகாண சபை உறுப்பினர்களும் இணைந்து பெரும்கவனவீர்ப்புபோராட்டம்ஒன்றைமுன்னெடுப்போம். அன்றையதினம் மாவட்டச் செயலர் அங்கு கட்டாயம் இருக்க வேண்டும் என்று கடந்த மாகாண சபை அமர்வில் வலியுறுத்தப்பட்டிருந்தது.

மாகாண சபையில் எடுக்கப்பட்ட குறித்த முடிவு முல்லைத்தீவு மாவட்டச் செயலருக்கு எழுத்து மூலமாக அறிவிக்கப்படும் எனவும் கூறப்பட்டது. அதன்படி மாவட்டச் செயலருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களின் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளதுடன் உங்களிடம் மனு ஒன்றை கையளிக்கவுள்ளதால் செயலர் அலுவலகத்தில் இருப்பதை உறுதிப்படுத்துமாறு கோரப்பட்டுள்ளது.

போராட்டத்தின் நிறைவில் மாவட்டச் செயலரின் ஊடாக மனு ஒன்றைக் கையளித்து அரசதலைவர் மற்றும் தலைமை அமைச்சருக்கு எமது கோரிக்கை வலியுறுத்தப்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-8)

# ஆசிரியர்களின் மன உளைச்சலே பெறுபேற்று வீழ்ச்சிக்கு காரணம்

இலங்கை ஆசிரியர் சங்கச் செயலாளர் ஸ்டாலின் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 10
ஆசிரியர்களின் மன உளைச்சலும் மாணவர்களின் பெறுபேறுகளின் வீழ்ச்சிக்கு ஒருவிதத்தில் காரணமாகும். வடக்கு மாகாண ஆசிரியர்கள் தற்போது அறிமுகமாகியுள்ள 'பிங்கர் பிறின்ட்' கையொப்ப முறையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். சரியான போக்குவரத்து மற்றும் தங்குமிட வசதி இருப்பின் ஆசிரியர்கள் எந்தவித மன உளைச்சலுமின்றி மாணவர்களுக்கு பாடங்களை நேர்த்தியாகக் கற்றுத்தர முடியும்.

இவ்வாறு தெரிவித்தார். இலங்கை ஆசிரியர் சங்கச் செயலாளர் யோசப் ஸ்டாலின்.

வெளியாகியுள்ள ஜி.சி.ஈ சாதாரண தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் வடக்கு மாகாணம் 9ஆவது இடத்தில் உள்ளது. கடந்த வருடமும் 9ஆவது இடத்தில்தான் இருந்தது. எனினும் இந்த வருடப் பெறுபேறுகள் கடந்த வருட பெறுபேறுகளிலிருந்து அதிகமாகவே உள்ளன. வடமாகாணம் தொடர்ந்தும் 9ஆவது இடத்தில் இருப்பதற்கான காரணம் தொடர்பில் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
பெறுபேறுகளால் மட்டும் கல்வி அபிவிருத்தி அடைகின்றது எனக் கூறிவிட முடியாது. ஆனாலும் கல்வி அபிவிருத்திக்கு முக்கிய காரணிகளில் ஒன்றாக பெறுபேறும் காணப்படுகின்றது.

கல்வி அபிவிருத்திக்கு உயர் பெறுபேற்றுக்கு சமமான திட்டங்களும் முறையான நடைமுறைகளும் கல்வியில் காணப்பட வேண்டும்.

வடக்கில் கல்வித்துறையில் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. குறிப்பாக ஆசிரியர் பற்றாக்குறை உட்பட கல்வித்துறையில் உள்ள அதிகாரிகளின் கவனவீனம், முறையற்ற செயற்றிட்டங்கள், செயற்பாடுகள், நியமனங்கள் சரியான முறையில் அமையாமை என்பன காணப்படுகின்றன. 'பிங்கப்பிறின்ட்' முறையும் ஆசிரியர்களிடையே மன உளைச்சலை ஏற்படுத்துகின்றது.

வடக்கு மாகாணத்தில் போக்குவரத்து வசதிகளற்ற கீழ்மட்ட பாடசாலைகளுக்குச் செல்லும் ஆசிரியர்களுக்கான அடிப்படை வசதிகளான போக்குவரத்து, தங்குமிடம் போன்றன இல்லாத பட்சத்தில் அவர்களுடைய வருகை தாமதமாக இருக்கும். இந்த நேரத்தில் கையொப்பமிடுதல் போன்றவற்றால் கற்பித்தல் செயற்பாடுகளில் மன உளைச்சலுடனேயே ஈடுபட வேண்டி வரும். எனவே உரிய முறையில் கற்பித்தல் இடம்பெறாது.

மேலும் கல்வித்துறையில் காணப்படும் முரண்பாடுகள் தீர்க்கப்பட்டு, ஊழல்கள் நிறுத்தப்பட்டு வடக்குக்கு உரிய கல்விமுறை திட்டமிடப்படும் சந்தர்ப்பத்திலேயே சிறந்த முடிவுகளைப் பெறமுடியும் - என்றார். (எ-114)

## முல்லையில் நேற்று இடம்பெறவிருந்த மகாவலி அமைச்சின் கலந்துரையாடல் கைவிடப்பட்டது

யாழ்ப்பாணம், ஏப்.10
முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நேற்றைய தினம் நடைபெற இருந்த மகாவலி அமைச்சு அதிகாரிகளின் கலந்துரையாடல் கைவிடப்பட்டது.

கொழும்பு மகாவலி அமைச்சின் அதிகாரிகளுக்கும் மாவட்ட அதிகாரிக்கும் இடையில் மாவட்டச் செயலகத்தில் கலந்துரையாடல் நடத்த நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த நிலையில் திடீரென அந்தக் கூட்டம் கைவிடப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மகாவலி அபிவிருத்தி திட்டம் என்ற பெயரில் திட்டமிட்ட சிங்களக்குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று பலர் குற்றஞ் சாட்டி வருகின்றனர். இது தொடர்பாக வடக்கு மாகாண சபையிலும் ஆராய சிறப்பு அமர்வு நடத்தப்பட்டு இன்றையதினம் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு முன்னால் மாகாண சபை உறுப்பினர்கள் ஒன்றிணைந்து பெரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின்ஊடகப் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், "முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மகாவலி அமைச்சின் கலந்துரையாடல் தொடர்பில் கட்சியின் தலைவர்களான இரா.சம்பந்தன், மாவைசேனாதிராசா ஆகியோர் அரச தலைவரிடம் விடுத்த கோரிக்கைக்கு இணங்க அது கைவிடப்பட்டுள்ளது" என்று கூறியிருந்தார். அதன் படி நேற்றையதினம் அங்கு அந்தக் கூட்டம் கைவிடப்பட்டது. (எ-8)

## 2கிலோ கஞ்சாவுடன் மாதகலில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஏப். 10
யாழ்ப்பாணத்தில் 2 கிலோகிராம் கஞ்சா போதைப் பொருளுடன் ஒருவரை அவரது வீட்டில் வைத்துக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மாதகல் பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் வைத்தே குறித்த கைது இடம்பெற்றுள்ளது.

கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் கடந்த சனிக்கிழமை அங்கு சென்ற வல்வெட்டித்துறைப் பொலிஸார் கஞ்சாவை மீட்டதோடு அதனை வைத்திருந்த குற்றச்சாட்டில் குடும்பத் தலைவரையும் கைது செய்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

அந்தப் பிரதேசம் இளவாலைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசம் என்பதால் அவர் இளவாலைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். அவர் விசாரணையில் உள்ளார். அதன்பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று வல்வெட்டித்துறைப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (4,26)

தமிழ் பேசுவோர் மூவர் உட்பட

## மேல் நீதிமன்ற நீதிபதிகளாக 13 பேர் நியமனமாகவுள்ளனர்

யாழ்ப்பாணம், ஏப். 10
நாடு முழுவதும் மேல்நீதிமன்ற நீதிபதிகளாக 13 பேர் நியமிக்கப்படவுள்ளனர். அவர்களில், வவுனியா மாவட்ட நீதிபதி சிறிநிதி நந்தசேகரன், திருகோணமலை நீதிபதி என்.எம்.எம்.அப்துல்லா மற்றும் சட்டமா அதிபர் திணைக்கள மூத்த அரச சட்டவாதி சூசைதாஸன் ஆகியோர் நியமிக்கப்படவுள்ளனர் என்று அறியமுடிகிறது.

நாடு முழுவதும் மேல்நீதிமன்ற நீதிபதிகளாக 75 பேர் பதவிவகிக்கின்றனர். அந்த எண்ணிக்கையை 130 ஆக அதிகரிக்க நாடாளுமன்று அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி முதற்கட்டமாக 13 பேர் நியமிக்கப்படவுள்ளனர் என்று கூறப்பட்டுள்ளது. (எ-4)

## கொக்கிளாய் இறங்குதுறை விடுவிப்பு தமிழனின் நேர்மைக்குக் கிடைத்த வெற்றி

வடமாகாண சபை உறுப்பினர் ரவிகரன் வெற்றிக்களிப்பு

முல்லைத்தீவு, ஏப்.10
கொக்கிளாய் இறங்குதுறை விடுவிப்பு தமிழ் மக்களின் நேர்மைக்கும், உண்மைத் தன்மைக்கும் கிடைத்த வெற்றி என்று வடக்கு மாகாண் சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
முல்லைத்தீவு மாவட்டத்துக்குட்பட்ட கொக்கிளாயில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான இறங்குதுறையை மீள அமைப்பதற்காக ஏற்கனவே காலங்காலமாக பாவித்து வந்த நிலப்பரப்பில் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தால் 150மீற்றர் நீளமான கரையோர நிலம் வழங்கப்பட்டது. கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் 2016.07.20 அன்று mu/mpp/ds/land/kok.east/01 ஆம் இலக்க கடிதத்தின் மூலம், கொக்கிளாய் சென்.அன்ரனி கடற்றொழிலாளர் அமைப்புக்கு இதற்கான அனுமதியை வழங்கியிருந்தார்.


கோப்புப்படம்

ஆனால் இந்த 150மீற்றர் நீளமான கரையோர நிலத்துக்குள் தங்களுடைய கரவலைப்பாடுகள் உள்ளடங்குவதாகக் கூறி கொக்கிளாய் பகுதியில் அத்துமீறி தங்கியிருந்து கடற்றொழில் செய்துவந்த சிங்கள மீனவர்கள் குழப்பம் விளைவித்தனர். அத்தோடு தமிழ் மக்களுடன் முரண்பட்டனர். மேலும் மத்திய நீரியல்வளத்துறை அமைச்சு, முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்துறை திணைக்களம் என்பன கொக்கிளாய்ப் பகுதியில் அத்துமீறி நுழைந்திருந்த சிங்கள மீனவர்களுக்கு ஆதரவு வழங்கியதுடன், பிரதேசசெயலரின் அனுமதியுடன் இறங்குதுறையை அமைக்கச்சென்ற தமிழ் மீனவர்களை எதிராளிகளாக்கி முல்லைத்தீவு நீதிவான் மன்றில் வழக்குத்தாக்கலும் செய்தனர்.

இந்த நிலையில் தமிழ் மீனவர்களின் நிலையைக் கருத்திற்கொண்டு அந்தப் பகுதியின் மக்கள் சார்பாளன் என்கின்ற வகையில் நான் மாகாணசபை அமர்வுகளில் பிரேரணைகளை முன்வைத்ததுடன், தொடர்ந்தும் இந்தப் பிரச்சினை தொடர்பாக வலியுறுத்தியிருந்தேன். அத்தோடு முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களிலும் குறித்த பிரச்சினை தொடர்பாக தொடர்ந்தும் அழுத்தங்களைப் பிரயோகித்தேன். ஆயினும் இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகள் எதுவும் எட்டப்படாத நிலையே தொடர்ந்தும் காணப்பட்டுவந்தது. இந்த நிலையில் கொக்கிளாய் இறங்குதுறை நிலம் தமிழ் மீனவர்களுக்கே சொந்தமானது என்று கடந்த 6ஆம் திகதி நீதிமன்று,தீர்ப்பளித்துள்ளது.

மேலும் நீதிமன்றின் உத்தரவு, அமைச்சரவை தீர்மானத்திலோ, வர்த்தமானி அறிவித்தல்களிலோ எதிர்காலத்திலும் மீறப்படக்கூடாது எனவும் தீர்ப்பில் கூறப்பட் டுள்ளது- என்றார். (எ-8)

## நன்னீர்மீன்பிடியாளர்களுக்கு மானிய விலையில் வலைகள்

யாழ்ப்பாணம்.ஏப்.10
வடக்கு மாகாணத்தில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடுபவர்களுக்கு மானிய அடிப்படையில் வலைகள் வழங்கப்படவுள்ளன என்று மாகாண விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:
வடக்கு மாகாணத்தில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடுபவர்களுக்கு அமைச்சு பல்வேறு உதவிகளை வழங்கி வருகின்றது. நடப்பு ஆண்டில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடுபவர்களுக்கான வலைகளை 50 வீத மானிய அடிப்படையில் வழங்கவுள்ளது.

வலைகள் தேவைப்படும் பயனாளிகள் தத்தமது பிரதேசங்களில்உள்ளநன்னீர்மீன்பிடிச் சங்கங்கள் ஊடாக தேவையான வலையின் எண்ணிக்கைமற்றும்அளவைக்கொடுத்துப் பதிவுகளை மேற்கொள்ள முடியும். எட்டு வகையான அளவுகளில் வலைகள் உள்ளன. அதன் விலைகள் மற்றும் விவரங்களைமீனவச்சங்கங்களில்பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-7)

பயிற்சிக்கால உத்தியோகத்தர்களாக

## 67 தாதியர்களை நியமிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்.ஏப்.10
வடக்கு மாகாணத்தில் சுகாதார சேவைகள் திணைக்களத்தின்கீழ் உள்ள மருத்துவமனைகளுக்கு 67 தாதியர்களை பயிற்சிக் கால உத்தியோகத்தர்களாக நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மாகாண சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.
இது பற்றி மேலும் தெரிவித்ததாவது:
வடக்கு மாகாணத்தில் உள்ள வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் தாதியர் பயிற்சிக் கல்லூரிகளில் பயிற்சிகளை நிறைவு செய்து நியமனத்துக்காக தாதிய மாணவர்கள் காத்திருக்கின்றனர். மாகாணத்தில் உள்ள மருத்துவமனைகளில் அதிகளவான தாதியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. ஆகவே தேவையின் நிமித்தம், பயிற்சிகளை நிறைவு செய்த மாணவர்களுக்கு நியமனம் கிடைக்கும் வரை 6 மாத கால பயிற்சிக் கால கொடுப்பனவுகளை வழங்கி சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுத்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-7)



மின்கம்பத்துடன் மோதிய

## டிப்பர் சாரதிக்கு ரூ.80,000 தண்டம்

வவுனியா ஏப் 10
மின்கம்பத்துடன் மோதிய டிப்பர் வாகன சாரதிக்கு 80ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. வவுனியா தாண்டிக்குளத்தில் கடந்த 3ஆம் திகதி மாலை 3.30 மணியளவில் டிப்பர் வாகனமொன்று மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.
வவுனியா குருமன்காடு - தாண்டிக்குளம் முதன்மை வீதியில் காணப்படும் வாகன திருத்தும் இடத்திலிருந்து பின்பக்கமாக வீதிக்கு ஏற முற்பட்ட டிப்பர் வாகனம் வீதியின் அருகே காணப்பட்ட மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.
இதன்போது மின்கம்பம் துண்டாகவுடைந்து வீழ்ந்தது. இதனால் அந்தப் பகுதிக்கான மின்சாரம் தடைப்பட்டது. மின்சார சபையினர் பாதிப்படைந்த மின்கம்பத்தை சீராக்கி தடைப்பட்ட மின்சாரத்தை சீர்ப்படுத்தினர். குறித்த டிப்பர் வாகன சாரதிக்கு எதிராக வழங்குத் தாக்கல் செய்யப்பட்டது. சாரதி குற்றத்தை ஒப்புக்கொண்டமையையடுத்து சாரதிக்குத் தண்டம் விதிக்கப்பட்டது. (எ-110)

பெண்களின் பாதுகாப்புத் தொடர்பான

# தேசியத் தலைவரின் இலட்சியம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்

வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம் ஏப் 10**
**எந்த வேளையிலும் பெண்கள் பாதுகாப்பாகவும், சுதந்திரமாகவும் நடமாடும் பாதுகாப்புச் சூழல் தொடர்பிலான; தேசியத் தலைவர் பிரபாகரனின் இலட்சியம் கிராமமட்ட செயற்பாடுகளின்மூலம் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்று வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்தார்.**



பெண்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்கள் நிறைந்து காணப்படும் இன்றைய சமூக சூழலில் பெண்கள் தம்மை தாமே பாதுகாத்துக்கொள்வது எவ்வாறு என்பது தொடர்பாக மாணவர்களுக்கு விழிப்புணர்வூட்டும் செயலமர்வு யாழ்ப்பாணம் கொக்குவில் இந்து கல்லூரியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.
மாகாண மகளிர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் குறித்த செயலமர்வு நடைபெற்றது. செயலமர்வை தலைமை தாங்கி நடத்திய மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் தலைமையுரையின்போதே இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் பெண்களுக்கு முழுமையான பாதுகாப்பு இருந்தது. அப்போது பெண்களுக்கு எதிரான வன்முறைகளோ, துஷ்பிரயோகங்களோ இல்லாத நிலையே காணப்பட்டது. ஆனால் ஆயுத மௌனிப்பின் பின்னர் அந்த நிலையில் பெரும் மாறுதல் ஏற்பட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது.
அதைவிட ஆயுத மௌனிப்பின் பின்னர் குடும்ப விவாகரத்துக்களும் அதிகரித்து வருகின்றன. இனத்தின் விடுதலைக்காக நடத்தப்பட்ட போராட்டம் எமது குடும்ப வாழ்விலும் பாதுகாப்பான நிலையை தோற்றுவித்திருந்ததை இந்த விடயங்களின் மூலமாக நாம் உணர்ந்து கொள்ள முடிகின்றது.
பெண் பிள்ளைகளுக்கான முதல் பாதுகாப்பாக அவர்களது பெற்றோரே இருக்க முடியும்.
அதற்கேற்றவாறான சூழலை ஒவ்வொரு பெற்றோரும் வீட்டில் ஏற்படுத்துவது அவசியமாகும். பெண் பிள்ளைகளின் பாதுகாப்புக் குறித்த அக்கறையின் வெளிப்பாடாக பெற்றோர் வெளிப்படுத்தும் கட்டுப்பாடுகள் சில வேளையில் கடுமையானவையாக பிள்ளைகளாகிய உங்களின் பார்வையில் படலாம். ஆனால் அது உங்களின் பாதுகாப்புக்கானதென்பதை உணர்ந்து கொள்வது அவசியம். நீங்களும் பெற்றோர் என்ற நிலைக்கு வரும்போது இதனை நன்கு உணர்ந்து கொள்வீர்கள். எமது கலாசாரம், பண்பாட்டு விழுமியங்களுக்கு அமைவாக பெண் பிள்ளைகளாகிய உங்களது செயற்பாடுகளை நீங்கள் வகுத்துக் கொள்வதன் மூலம் ஆரோக்கியமான சமூகத்தை கட்டியெழுப்ப முடியும்.
பெண் பிள்ளைகளை வழிநடத்திச் செல்வதுடன் அவர்களுக்கான பாதுகாப்பான சூழலை உறுதிப்படுத்தும் பொறுப்பும் கடமையும் பெற்றோரைத் தாண்டிய நிலையில் ஆசிரியர் சமூகத்துக்கும் உண்டு. இந்தக்கூட்டுப் பொறுப்பினை உரியவர்கள் உணர்ந்து செயற்படுவதன் மூலமே பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் துஷ்பிரயோகங்கள் அற்ற சூழலை எமது பிள்ளைகளுக்கு ஏற்படுத்திக் கொடுக்க முடியும்.
அந்தச் சமூக நோக்கின் வெளிப்பாடாகவே இந்த சிறப்புச் செயலமர்வு திட்டமிடப்பட்டு நடத்தப்படுகின்றது - என்றார்.
செயலமர்வில் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த ஒன்பது, பத்து மற்றும் பதினோராம் ஆண்டு மாணவர்கள் பங்கேற்றிருந்தனர். அவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. நிகழ்வில் இலங்கை பெண்கள் சாரணியம் அமைப்பின் பிரதிநிதிகள், வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் ஆர்.வரதீஸ்வரன் மற்றும் அமைச்சின் திணைக்களங்களின் தலைவர்களும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-8)

வழித்தட அனுமதி இன்றி சேவையில் ஈடுபடும்

## சொகுசுப் பேருந்து சாரதிகளும் கைதாவர்

யாழ்ப்பாணம், ஏப். 10
வடக்கு மாகாணத்தில் வழித்தட அனுமதிப்பத்திரமின்றி பணியில் ஈடுபடும் குளிரூட்டப்பட்ட சொகுசு பேருந்து சாரதிகளும் கைது செய்யப்படுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.
கடந்த காலங்களில் நடைமுறையிலிருந்தாலும் இந்த நடவடிக்கை தற்போது தீவிரப்படுத்தப்பட்டுள்ளது என்று மாகாண மூத்த பொலிஸ்மா அதிபர் றொஷான் பெனார்ண்டோ தெரிவித்துள்ளார்.
வாகனங்கள் கடுமையாக பரிசோதனை செய்யப்பட்டு பத்திரமில்லாது பணியில் ஈடுபடுகின்ற சாரதிகள் கைது செய்யப்படுவர். பேருந்துகளும் பறிமுதல் செய்யப்படும்.
பொலிசாரிடம் கையூட்டு கொடுத்து தப்பிக் கொள்ளலாம் என்ற முறை இனி இல்லை. நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன, பத்திரமில்லாதோரை கைது செய்து கொண்டிருக்கிறோம். இனி வரும் காலங்களிலும் இன்னும் கடுமையாக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்திருந்தார். (எ-26)

## ஆங்கில பாட ஆசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளன

யாழ்ப்பாணம்.ஏப்.10
வடக்குமாகாணத்தில் நிலவும் ஆங்கிலபாட ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளதாக மாகாண கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.
வடக்கு மாகாணத்தில் ஆங்கில பாட ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் 99 காணப்படுகின்றது. பாடசாலை மாணவர்கள் ஆங்கிலபாடத்தின் தேவைபற்றி நன்கு அறிவார்கள். ஆகவே ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமோ தரத்திலானவர்கள் உள்வாங்கப்படவுள்ளார்கள். இதற்கான விண்ணப்பங்கள் ஆளுநரின் அனுமதியின் பின்னர் கோரப்படவுள்ளன. இது தவிர ஆங்கில ஆசிரியர்களுக்கான சிறப்பு பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-7)

## காட்டை அண்டிய பகுதிகளில் தென்னைகள் பயிரிடுவது கடினம்

மக்கள் கவலை

யாழ்ப்பாணம்.ஏப்.10
விசுவமடு உள்ளிட்ட காட்டை அண்டிய பகுதிகளில் யானைகளின் தாக்கத்தால் தென்னைகள் பயிரிடுவது கடினமாக உள்ளது என்று தென்னை பயிர்ச் செய்கை சபையிடம் மக்கள் கவலை தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.
இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது.
வடக்குப் பிராந்திய தென்னை பயிர்ச் செய்கை சபையால் தென்னைச் செய்கையாளர்களுக்கான பயிர்ச்செய்கை தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கை பல்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
இதன்போது மக்கள் தெரிவித்ததாவது:
காட்டை அண்டிய பகுதிகளில் தென்னை பயிர்ச் செய்கையில் ஈடுபட்டால் அதனைக் காட்டு யானைகள் அழித்துவிடும். இதற்கு வேலிபோட்டுத் தருமாறு பல்வேறு தரப்பினரையும் கோரியும் பயன் கிடைக்கவில்லை. எமக்குச் சொந்தமான பகுதியில் தென்னையை நட்டுவிட்டு யானையின் அச்சத்தால் சில நாள்களுக்கு ஒரு முறையே பயிர்களைப் பார்வையிடுவோம். அவை யானையால் தாக்கப்பட்ட சந்தர்ப்பங்களும் உள்ளன.
மாற்று வழியாக தேன்கூடு வைத்தல் சிறப்பானதாகும்.
ஒரு பெட்டியில் தேன் வளர்ப்பதற்கு 4 ஆயிரத்து 500 வகையில் செலவாகும். வளவின் எல்லையில் 2 தொடக்கம் 4 வரையில் தேன் கூடுகள் வைத்தால் போதுமானதாகும். ஆகவே இதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கேட்டுக்கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (7)

## சதொச நிறுவன முன்னாள் தலைவர் விளக்கமறியலில்

கொழும்பு, ஏப்.10
சதொச நிறுவனத்தின் முன்னாள் தலைவர் நலின் ருவன் ஜீவ பெர்னான்டோவை எதிர்வரும் 12 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.
சந்தேகநபரை நேற்று கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போதே கொழும்பு கோட்டை நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.
39 இலட்சம் ரூபா அரச நிதியை முறையற்ற விதத்தில் பயன்படுத்தியமை தொடர்பில் இவர் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப் பட்டு கடந்த் 6 ஆம் திகதி நிதி குற்றவியல் விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தார். முன்னாள் அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேவுடன் இணைந்து கொள்வனவு செய்யப்பட்ட விளையாட்டு உபகரணங்களை அரசியல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தியது எனவும் அரச நிதியை முறையற்ற விதத்தில் பயன்படுத்தியதாகவும் அவர் மீது குற்றச் சாட்டு முன்வைக் கப்பட்டுள்ளது.
(ற-ரி5)

## தொடருந்துடன் மோதி ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஏப். 10
வெள்ளவத்தையில் ஒருவர் தொடருந்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
இந்த விபத்து நேற்று நடந்தது. மாத்தறையில் இருந்து மருதானை நோக்கிப் பயணித்த தொடருந்திலேயே மோதி விபத்துக்குள்ளானார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
கொழும்பு 2 பகுதியைச் சேர்ந்த 46 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக களுபோவில மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் வெள்ளவத்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.
(ற-ரி5)

## குளவித் தாக்குதலுக்கு இலக்கான தோட்டத்தொழிலாளர்கள்

கொழும்பு, ஏப்.10
பொகவந்தலாவ பொகவானைத் தேயிலை மலையில் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த 10 தொழிலாளர்கள் குளவித்தாக்குதலுக்கு இலக்கானார்கள்.
இவர்கள் பொகவந்தலாவ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.
இந்தச் சம்பவம் நேற்றுக் காலை நடந்தது.
தேயிலை மலையில் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த வேளை தேயிலை மலையின் அடிப் பகுதியில் இருந்த குளவிக் கூடு கலைந்ததாலேயே தாக்குதலுக்கு இலக்கானார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.
(ற-ரி5)

### கூட்டமைப்பின் கோரிக்கைக்கு அமைய

# புதிய அரசமைப்பை ரணில் நிறுவினால் தனி ஈழம் மலரும்

### ரோஹித அபேகுணவர்த்தன எம்.பி எச்சரிக்கை

கொழும்பு, ஏப்.10
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைக்கு அமைவாக புதிய அரசமைப்பை தலைமைஅமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நிறுவினால், நிச்சயமாக தனி ஈழம் மலரும்.



இவ்வாறு ஒன்றிணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினரான ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.
கொழும்பில், நேற்று நடைபெற்ற ஒன்றிணைந்த எதிரணியின் செய்தியாளர்சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
"தலைமை அமைச்சருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் இன்று நாட்டில் பெரும் பேசுபொருளாக மாறியுள்ளது. நாம் 2015ஆம் ஆண்டிலேயே, இந்த அரசு தொடர்பில் கூறியிருந்தோம். அதற்கேற்ற வகையில், வெவ்வேறு கருத்துக்களுடையவர்கள் இணைந்து நல்லாட்சியை நிறுவினார்கள். இதற்கு ஆதரவளித்த ஒரு தரப்பினருக்கு பிரதான எதிர்க்கட்சித் தலைமைப் பதவியும் வழங்கப்பட்டுள்ளது.
இந்தத் தரப்பினருக்கு இடையிலான இணக்கம், நம்பிக்கையில்லாப் பிரேரணையின்போதே தெரிந்துவிட்டது. வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு அரசியல் தீர்வு, அடுத்த தேர்தலுக்கு முன்னர் புதிய அரசியலமைப்பு, அதாவது மீண்டும் தனி ஈழத்துக்கு வழியமைக்கும் அரசியலமைப்பு, இராணுவத்தில் இருக்கும் காணிகளை விடுவிப்பது, அரசியல் கைதிகள் அனைவரையும் பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்வது, காணாமற் போனோர் தொடர்பில் விசாரணைகளை செய்து அவர்களது உறவினர்களுக்கு நீதி கிடைக்க வழியமைப்பது என பல நிபந்தனைகளையே தலைமைஅமைச்சர் இவர்களுக்கு வழங்கியுள்ளார். இவ்வாறான நிபந்தனைகளை நிறைவேற்றுவது எனக் கூறியதாலேயே வாக்கெடுப்பின் போது பிரதான எதிர்க்கட்சி பிரேரணைக்கு எதிராக வாக்களித்தது" என்றார்.
(ற-ரி5)

## தவறான முடிவெடுத்து பெண்ணொருவர் சாவு


கொழும்பு, ஏப். 10
கெகிராவைப் பிரதேசத்தில் பெண்ணொருவர் நேற்று முன்தினம் தவறான முடிவெடுத்து தன் உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார்.
19 வயதுடைய திருமணமான பெண்ணொருவரே இவ்வாறு உயிரை மாய்த்துக்கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.
திருமணத்தின் பின் கணவரின் வீட்டில் வசித்து வந்துள்ளார் எனவும் அந்த வீட்டிலேயே உயிரிழந்தார். எனவும் தெரிவிக்கப் பட்டது. இவரது உயிரிழப்புக்கான காரணம் தெரியாத நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.
(ற-ரி5)

## துப்பாக்கிகளுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஏப்.10
கெகிராவ கஹகல்லப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் துப்பாக்கிகளை வைத்திருந்த ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.
கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து தேசிய உற்பத்தியிலான இரு கைத்துப்பாக்கிகள் மீட்கப் பட்டன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.
(ற-ரி5)

## ஒரே சமூகமாக இருந்தால் முரண்பாடுகள் ஏற்படாது

### கிழக்குப் பல்கலை உபவேந்தர் தெரிவிப்பு



மட்டக்களப்பு, ஏப்.10
முரண்பாடுகளுக்கு இன அடிப்படையிலும் மத அடிப்படையிலும் தீர்வுகள் கண்டால் பேரழிவுகள் தான் ஏற்படும்.
இவ்வாறு கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி தங்கமுத்து ஜயசிங்கம் தெரிவித்தார்.
நேற்று இடம்பெற்ற தேசிய சமாதானப் பேரவையின் அனுசரணையுடன் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்ட சர்வமதப் பேரவை உறுப்பினர்களுக்கிடையிலான கலந்துரையாடலில் கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது,
"ஒரே சமூகமாக, ஒரே இனமாக, ஒரே மொழி பேசுவோராக இருந்தால் மக்களுக்கிடையில் முரண்பாடுகள் ஏற்படாதா? என்ற கேள்வியை நாம் எழுப்பினால் மனிதர்களுக்கிடையில் முரண்பாடுகள் ஏற்படுவது இயல்பானது அவை தவிர்க்க முடியாதது என்பதை அறிந்து கொள்ள முடியும்.
எங்கே நாம் ஒருங்கிணைப்பை இழந்திருக்கின்றோம் என்பதைப் பார்க்க வேண்டும். அத்துடன் வர்த்தகமும்
வியாபாரமும் இன நல்லிணக்கத்துக்கான இணைப்புப் பாலமாக இருந்தால் அது சிறப்பாக இருக்கும். நான் அயலவர்களான முஸ்லிம்களுக்குப் பக்கத்தில் வாழ்கின்றேன். ஆனால் கலவரம் இடம்பெற்ற வேளை முஸ்லிம்கள் வாழும் பகுதியில் செல்லும்போது பாதுகாப்புடன் செல்ல வேண்டியிருந்தது.
ஏனைய மதத்தைச் சேர்ந்தவர்களை அயலவராகக் கொண்டிருப்பதில் நாம் பெருமையடைகின்றோமா வெறுப்படைகின்றோமா என்பதைப் பார்க்க வேண்டும்?
உண்மையில் நாம் அனைவரும் கல்வி, தொழிற் பயிற்சிகள், தொழில்துறை, வாழ்க்கை முறை, உட்பட்ட ஏனைய அனைத்துச் செயற்பாடுகளிலும் மதம், இன ரீதியாக பிரிந்துதான் நிற்கின்றோம்.
நமது பிள்ளைகள் இனம் சார்ந்து சமயம் சார்ந்து மொழி சார்ந்து கல்வி கற்பிக்கும் சூழல் நடைமுறையில் காணப்படுகின்றது. இவற்றையெல்லாம் நாம் மாற்றியமைக்க வேண்டும்.
இவ்விடயங்கள் தொடர்பில் சிவில் சமூகம் இன்னும் அதிகமாகச் சிந்தித்தால் பிரிந்து நின்று அழிவுகளை ஏற்படுத்துவதற்குப் பதிலாக அனைவரும் ஒன்றிணைந்து ஆக்கபூர்வமான சமூகத்தையும் கட்டியெழுப்ப முடியும் - என்றார்.
(ற-ரி5)

## அடிக்கல் நடப்பட்டும் வீதி சீரமைக்கப்படவில்லை

### இராதா கிருஸ்ணன் தெரிவிப்பு



நுவரெலியா, ஏப். 10
வீதி அபிவிருத்தி அதிகார சபையினது மாகாண பாதை அபிவிருத்திச் செயற்பாடுகள் திருப்திகரமாக இல்லை. பல வீதிகளுக்கு அடிக். கல் நடப்பட்டு பல வருடங்களாகியும் இதுவரையில் அந்த வீதிகள் அபிவிருத்தி செய்யப்படாமல் இருக்கின்றன.
இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவரும் கல்வி இராஜாங்க அமைச்சருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.
அம்பேகமுவ கோரளை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று அம்பேகமுவ பிரதேச செயலக கேட்போர் கூட மண்டபத்தில் நடைபெற்றது.
இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
"நுவரெலியா மாவட்டத்தில் இருக்கின்ற வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரிகள் மந்தகதியிலேயே செயற்படுகின்றார்கள். ஏன் இவ்வாறு செயற்படுகின்றார்கள் என்பது எமக்கு புரியவில்லை. இது நுவரெலியாவுக்கு மாத்திரமே இந்த நிலை. அதிகாரிகள் கூட்டத்துக்கு வந்து 50 வீதம் 60 வீதம் வேலை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது எனக் கூறுகின்றார்கள். ஆனால் 10 வீதமான வேலைகள் கூட பூர்த்தி செய்யப்படவில்லை.
'நுவரெலியா மாவட்டத்தில் இருக்கின்ற வீதிகள் அபிவிருத்தி செய்யப்படாமையின் காரணமாக இங்குள்ள மக்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றார்கள். பாதை சரியாக இல்லாத காரணத்தால் அநேகமான தோட்டங்களுக்கு பேருந்து வசதிகள் இல்லாமல் இருக்கின்றது. இதன் காரணமாக எங்களுடைய மக்கள் தங்களுடைய பல தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடியாமல் உள்ளது.
எனவே இந்த அதிகாரிகள் தொடர்பாக நான் வெகு விரைவில் இது தொடர்பான அமைச்சருடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்க இருக்கின்றேன் என்றார்.
(ற-ரி5)



மெக்சிக்கோவில் இருந்து சட்ட விரோத குடியேறிகளையும், போதைப் பொருள் கடத்தல்களையும் தடுக்கும் நோக்கில் அமெரிக்க - மெக்சிக்கோ எல்லையில் சுவர் அமைக்கப்பட்டுள்ளது. இராணுவமும் பல இடங்களில் குவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறிருக்க மெக்சிக்கோ வழியாக அமெரிக்காவுக்குள் கடத்தப்பட்ட பல லட்சம் டொலர் பெறுமதியான போதைப்பொருள் இரண்டு நாடுகளினதும் எல்லையில் நேற்று அமெரிக்க இராணுவத்தால் மீட்கப்பட்டுள்ளது. (ம)

## காவிரி நதிநீர் பங்கீடு தொடர்பான செயற்றிட்டத்தை உடன் வழங்குக

### புதுடெல்லியை கேட்கிறது உச்சநீதிமன்றம்

காவிரி நதிநீர் பங்கீடு தொடர்பான தீர்ப்பை செயற்படுத்துவதற்கான வரைவு செயற்றிட்டத்தைவழங்கவேண்டும்என்று புதுடெல்லி அரசைக் கேட்டது இந்திய உச்சநீதிமன்றம்.

காவிரிமேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும் என்று புதுடெல்லி அரசுக்கு இந்திய உச்ச நீதிமன்றம் வழங்கிய கெடு முடிவடைந்துள்ள போதிலும் அதற்காக நகர்வுகள் எதையும் புதுடெல்லி மேற்கொள்ளவில்லை. இதனால் தமிழக அரசின் சார்பில் புது டெல்லிக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது.



இந்த வழக்கு விசாரணைக்காக நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது. அதில் எதிர்வரும் மூன்றாம் திகதிக்கு முன்னர் காவிரி மேலாண்மை வாரியம் அமைப்பதற்கான திட்ட வரைபை புதுடெல்லி அரசு தரவேண்டும்என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. (ம)




## இரசாயனத் தாக்குதலை அடு

# சிரியாவுக் அமெரிக் எச்சரிக்

வொஷிங்டன், ஏப். 10

சிரியாவில் அரச படைகள் நேற்றுமுன்தினம் நடத்தியதாகச் சந்தேகிக்கப்படும் இரசாயனத் தாக்குதலில் சுமார் 100 பேர் உயிரிழந்துள்ள நிலையில், "இந்தத் தாக்குதலுக்கு சிரியா மிகப்பெரும் விலையைக் கொடுக்கும்" என்று எச்சரித்தது அமெரிக்கா.



சிரியத் தலைநகர் டமஸ்கஸுடன் எல்லையைப் பகிரும் கவுட்டா நகரில் அண்மைக் காலமாக போர் இடம் பெற்று வருகிறது. சிரிய அதிபர் அசாத்துக்கு எதிரான ஆயதக் குழுவின் பிடியில் இருந்த இந்த நகரம் தற்போது அரசதரப்பின் கட்டுப்பாட்டுக்குள் வரும் நிலையே உள்ளது. அங்கு, நேற்று முன்தினம் உலங்கு வானூர்திகள் மூலம் இரசாயனத் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதலில் சுமார் 100 பேர் உயிரிழந்தனர். அவர்களில் பெரும்பாலானோர் சிறுவர்கள். சிரியாவில் செயற்பட்டுவரும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் இந்தத் தாக்குதலை உறுதிப்படுத்தியுள்ளது. அரச தரப்பே இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்று கருதப்படும் நிலையில் சிரியாவுக்குத் தனது கண்டனத்தைப் பதிவுசெய்தது அமெரிக்கா.



"சிரியாவின் மதிகேடான இரசாயன தாக்குதலில் குழந்தைகள், பெண்கள் உள்பட பலர் உயிரிழந்துள்ளனர். தாக்குதல் நடத்தப்பட்ட பகுதிகளை வெளியுலகத்தினர் பார்க்க முடியாதவாறு அங்கு சிரிய இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர். அசாத் என்னும் மிருகத்தை ஆதரித்துவரும் ரஷ்யாவும், ஈரானும் இந்தத் தாக்குதலுக்குப் பொறுப்பேற்க வேண்டும், இதற்கு மிகப்பெரிய விலையை தரவேண்டியிருக்கும்" என்று எச்சரித்தார் ட்ரம்ப். (ம)

## ஜப்பானில் நிலநடுக்கம்

டோக்கியோ, ஏப். 10

ஜப்பானின் மேற்குப் பகுதியில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டது. சுமார் 5.8 ரிச்டர் அளவுகோலில் இந்த நிலநடுக்கம் பதிவானது. ஜப்பான் தலைநகர் டோக்கியோவுக்கு அருகில் உள்ள ஹோஸ்னுவில் உள்ள சிமானே பகுதியிலேயே இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

சுமார் 10 கிலோமீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. எனினும் சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை. (ம)

## காவிரி மேலா சேப்பாக்கம்

### இன்

சென்னை, ஏப். 10

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும் என்று வலியுறுத்தி தமிழகத்தில் தொடர்ந்து போராட்டங்கள் இடம் பெற்று வரும் நிலையில், சென்னை சேப்பாக்கம் மைதானத்துக்கு முன்பாக இன்று போராட்டம் நடத்தத் திட்மி டப்பட்டுள்ளது.



நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் சென்னை, கொல்கத்தா அணிகள் விளையாட வுள்ளன. சேப்பாக்கம் மைதானத்தில் இந்த

டுத்து

# க்கு
# கா
# கை





# பிரிட்டன் உளவாளி அமெரிக்காவில் தஞ்சம்



மொஸ்கோ, ஏப். 10
ரஷ்யாவின் முன்னாள் உளவாளியான ஸ்கிர்போல் என்பவருக்கு இரசாயனத் தாக்குதல் நடத்தப்பட்ட விவகாரம் பன்னாட்டுப் பிரச்சினையாக உருவெடுத்துள்ள நிலையில், அவருக்கு தஞ்சமளிக்க அமெரிக்கா முன்வந்துள்ளது.

ரஷ்யாவின் இராணுவ உளவுப்பிரிவில் பணியாற்றியவர் செர்ஜய் ஸ்கிர்போல். அவருக்கு தற்போது வயது 66. இவர் சில ரஷ்ய உளவாளிகளை இங்கிலாந்து உளவுத்துறையிடம் காட்டிக் கொடுத்தார் என்று 2004ஆம் ஆண்டு ரஷ்யாவால் கைதுசெய்யப்பட்டு 13 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார்.

அவரை 2010ஆம் ஆண்டுமீட்டு அடைக்கலம் கொடுத்தது பிரிட்டன். சாலிஸ்பரி நகரில் அவர் வசித்துவந்தார். கடந்த 4ஆம் திகதி 33 வயதான தனது மகள் யூலியானாவுடன் மயங்கிய நிலையில் அவர் மீட்கப்பட்டார். மருத்துவ பரிசோதனையில் ஸ்கிர்போலின் உடலிலும் அவரின் மகளது உடலிலும் விசம் செலுத்தப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது. இதன் பின்னணியில் ரஷ்யாவே உள்ளது என்று திட்ட வட்டமாகத் தெரிவித்திருந்தது பிரிட்டன். இதை அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் ஏற்றுக்கொண்டன.

இந்த விவகாரத்தில் ரஷ்யாவுக்கு எதிராக அமெரிக்காவும், பிரிட்டனும் இணைந்து கடும் போக்கைக் கடைப்பிடித்தன. ஸ்கிர்போல் தற்போது உடல்நலத்துடன் உள்ளார். அவரின் உயிருக்கு எழுந்துள்ள அச்சுறுத்தலை அடுத்து ஸ்கிர்போலுக்கு தஞ்சமளிக்க முன்வந்தது அமெரிக்கா. ஸ்கிர்போலும் அவரது மகளும் வெவ்வேறு பெயர்களில் அமெரிக்காவில் தங்க வைக்கப்படவுள்ளனர். (ம)

# சிரியாவுக்கான ஆதரவை நிறுத்த வேண்டும் ரஷ்யா

## ஹீதர் நவெர்ட் வலியுறுத்தல்



சிரிய அரசால் மேற்கொள்ளப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் இரசாயனத்தாக்குதலை அடுத்து, "சிரியாவுக்கு வழங்கிவரும் ஆதரவை ரஷ்யா நிறுத்த வேண்டும்" என்று வலியுறுத்தினார் அமெரிக்க அயலுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் ஹீதர் நவெர்ட்.

"சிரியாவை ரஷ்யா கண்மூடித்தனமாக ஆதரிக்கிறது.

இதனால் சிரியாவில் நடத்தப்பட்ட இரசாயனத் தாக்குதலில் எண்ணற்ற மக்கள் மூச்சுத்திணறி உயிரிழந்துள்ள இந்த கொடூரமான செயலுக்கு ரஷ்யா பொறுப்பேற்க வேண்டும். ஐக்கிய நாடுகள் சபையின் சட்டத்தை நிறைவேற்ற வேண்டிய பொறுப்புமிக்க நாடுகளில் ஒன்றான ரஷ்யா, இரசாயன ஆயுதங்களை பொதுமக்கள்மீது பயன்படுத்தும் சிரியாவை ஆதரிப்பதன் மூலம் இரசாயன ஆயுதங்களுக்கு எதிரான பன்னாட்டு உடன்படிக்கையை மீறிவிட்டது. எனவே, கண் மூடித்தனமாக சிரியாவை ஆதரிக்கும் போக்கை ரஷ்யா உடனடியாகக் கைவிட வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (ம)

> ❝ ஐக்கிய நாடுகள் சபையின் சட்டத்தை நிறைவேற்ற வேண்டிய பொறுப்புமிக்க நாடுகளில் ஒன்றான ரஷ்யா, இரசாயன ஆயுதங்களை பொதுமக்கள்மீது பயன்படுத்தும் சிரியாவை ஆதரிப்பதன் மூலம் இரசாயன ஆயுதங்களுக்கு எதிரான பன்னாட்டு உடன்படிக்கையை மீறிவிட்டது.


முதலாம் ஆண்டு நினைவாக



தோற்றம் 13 . 10 . 1938
மறைவு 22 . 03 . 2017
திதி: 10.04.2018

வேலுப்பிள்ளை சிவசம்பு

ஏழாலை தெற்கு சுன்னாகம்/ Frazer Avenue, தெஹிவளை
இளைப்பாறிய ஆசிரியர், புனித அந்தோனியார் கல்லூரி, வத்தளை.

நீங்காத நினைவுகளுடன்
மனைவி, மக்கள், மருமக்கள், மற்றும் பேரப்பிள்ளைகள்.

(CS/15560)(11.17)


# ...ாண்மை வாரியத்தை வலியுறுத்தி
# ... மைதானத்தை முடக்கத் திட்டம்

## இன்றைய ஆட்டத்துக்கு பலத்த பாதுகாப்பு




ஆட்டம் இடம்பெறவுள்ளது. இந்த ஆட்டம் நடைபெறவிடாது போராட்டம் நடத்த இளைஞர்கள் வர வேண்டும் என்று சில அரசியல் கட்சிகள் ஏற்கனவே கோரிக்கை வைத்திருந்தன.

இந்தப் பின்னணியில் சேப்பாக்கம் மைதானத்துக்கு முன்பாக இன்று போராட்டம் நடத்த வாய்ப்புள்ளது என்று கருதப்படுகிறது.

இதனால் அந்த மைதானத்துக்கு பலத்த பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது. சென்னை அணியின் வீரர்கள் தங்கி யிருக்கும்விடுதிக்கும் உச்சக்கட்டப் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது என்று இந்திய ஊடகங்கள் தெரிவித்தன. (ம)


மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 07 . 02 . 1947
ஆண்டவன் அடியில் 13 . 04 . 2015

அமரர் சின்னப்பு வேலுப்பிள்ளை

திதி : தசமி (10.04.2018)

ஆண்டுகள் மூன்று கடந்தாலும்
ஆறுதில்லையே எம் துயரம்!
ஏங்கித் தவிக்கின்றோம் – தினமும்
உங்களின் பாசத்திற்காய்
நெஞ்சை விட்டகலா உங்கள்
நினைவுகளுடன்
அனுதினமும் உங்களுக்காய்
வேண்டுகிறோம்.

எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தி
பெற ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கைதடி தெற்கு,
கைதடி.

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்
அன்பு மனைவி, மகன், மருமகள்
மற்றும் உறவினர்கள்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# வெளிப்படைத் தன்மையும் நீதியும் முக்கியம்!

வடக்கு மாகாண சபையின் அமைச்சர்கள் மீது மீண்டும் குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்பட்டுள்ளன. வடக்கு மாகாண அமைச்சர்கள் மீது இப்படிப்பட்ட மோசடி அல்லது முறைகேட்டுக் குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்படுவது இது இரண்டாவது முறை.

ஏற்கனவே இருந்த அமைச்சர்களும் மீதும் இதுபோன்ற குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்பட்டிருந்தன. இதையடுத்து அந்தக் குற்றச்சாட்டுக்களை விசாரிக்க முதலமைச்சர் ஒரு குழுவை நியமித்தார். ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் அமைக்கப்பட்ட அந்த மூவர் குழு வழங்கிய விசாரணை அறிக்கையில் அமைச்சர்கள் நால்வரில் இருவர் மீது நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

அந்த அறிக்கை வெளியே கசிந்ததை அடுத்து அதனை முழுமையாக மாகாண சபையில் முன்வைக்க வேண்டிய நிலைக்கு முதலமைச்சர் தள்ளப்பட்டார். விசாரணைக்குழு நடவடிக்கை எடுக்கப் பரிந்துரைத்த அமைச்சர்கள் இருவரும் முதலமைச்சருக்கு நெருக்கமானவர்களாக இருந்தார்கள். இதனால் அவர்களைப் பதவியைத் தியாகம் செய்யும்படி கேட்ட முதலமைச்சர், மற்றைய இருவர் மீதான குற்றச்சாட்டுக்களையும் விசாரிப்பதற்கு புதிய குழு ஒன்று நியமிக்கப்படும் என்று அறிவித்தார். அதற்கு வசதியாக அந்த இரு அமைச்சர்களும் கட்டாய விடுப்பில் செல்லவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இந்த விவகாரம் பூதாகரமாகியதை அடுத்து அந்த இருவரும் தமது பதவிகளில் இருந்து விலகினர். இதையடுத்து அவர்களின் இடத்துக்கு இருவர் தற்காலிக அமைச்சர்களாக மூன்று மாதங்களுக்கு நியமிக்கப்படுகிறார்கள் என்று முதலமைச்சர் அறிவித்தார். 3 மாதங்கள் கடந்த பின்னரும் அந்தத் தற்காலிக அமைச்சர்கள் தொடர்ந்தும் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். முந்திய அமைச்சர்கள் இருவருக்கு எதிராக நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்ட விசாரணை பற்றி இப்போது மூச்சும் இல்லை.

மாகாண சபையின் மார்ச் மாத வழக்கமான அமர்வில் இந்த விசாரணைக் குழு குறித்துக் கேள்வி எழுப்பப்பட்டபோது, அமைச்சரவையை மாற்றி அமைக்க நினைத்ததால்தான் விசாரணைக் குழு ஒன்றையே நியமித்தேன் என்று முதலமைச்சர் விக்னேஸ்வரன் வலு இலகுவாகச் சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

இத்தகையதொரு நிலையிலேயே அவரது அமைச்சரவை மீது மீண்டும் முறைகேட்டுக் குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்பட்டுள்ளன. இந்தக் குற்றச்சாட்டுக்களில் சில குறித்து முதலமைச்சரும் அறிந்தே இருக்கிறார். அவை அவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டபோது, அதனை உடனடியாக நிவர்த்தி செய்யுமாறு குறிப்பிட்ட அமைச்சருக்கும் அதிகாரிகளுக்கும் கூறியதுடன் அந்த விடயத்தை முடித்துக்கொண்டார் முதலமைச்சர். அது குறித்து விசாரிப்பதற்கு குழு எதனையும் நியமிப்பது குறித்து அவர் சிந்திக்கவில்லை.

ஒருவேளை இந்த அமைச்சரவையில் இருப்பவர்கள் அவருக்கு வேண்டியவர்களாக, மாற்றப்படக்கூடாதவர்களா இருப்பதனால் அவர் விசாரணைக் குழு எதனையும் நியமிப்பது குறித்துச் சிந்திக்காமல் இருந்திருக்கலாம்.

ஆனால், முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரித்து அதன் உண்மைத்தன்மையை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டியது முதலமைச்சரின் கடமை.

தனது முதலாவது அமைச்சரவை மீதான குற்றச்சாட்டுக்களை விசாரித்த குழுவின் அறிக்கையை மாகாண சபையில் முன்வைத்தபோது, தனது ஆட்சி வெளிப்படைத்தன்மையுடன் நடந்து கொள்வதன் சாட்சியே இந்த அறிக்கை என்று முதலமைச்சர் சொல்லியிருந்தார். அதே வெளிப்படைத் தன்மையுடன் அவர் இப்போதும் செயலாற்றவேண்டும்.

இல்லையேல், அமைச்சர்களை மாற்றவேண்டும் என்கிற தனது சொந்த நலனுக்காக விசாரணைக் குழு அமைத்த முதலமைச்சர் என்கிற பெயருடன் அவர் வரலாற்றில் நிலைக்க வேண்டியிருக்கும். சின்னதோ பெரிதோ அமைச்சர்கள், அரசியல்வாதிகள் முறைகேடுகளில், மோசடிகளில், ஊழல்களில் ஈடுபடுவது ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது. அவை ஆரம்பத்திலேயே களையப்பட வேண்டும். ஒரு நீதியரசராக இருந்த முதலமைச்சருக்கு இதை வெளியார் யாரும் சொல்லித் தெரியவைக்கவேண்டும் என்பதில்லை. வெளிப்படைத்தன்மையும் நீதியும் நிலைநாட்டப்படுவது அவசியம்.

# சவாலை முறியடித்து அரசியல் இருப்பை உறுதிப்படுத்தினார் தலைமை அமைச்சர்



சிங்கள மூலம்:- மவ்பிம (சரலி)
தமிழில்:- வீ.எஸ். ரீ

முன்னர் பல சந்தர்ப்பங்களில் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானங்களை விட, இந்தத் தடவை கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியதொன்றாக அமைந்தது. அதன் முடிவு தற்போது வெளியாகிவிட்டுள்ளது. அதனது பின்னணியும் ஆச்சரியமானதொன்றே. இது விடயத்தில் இரகசியமான செயற்பாடுகள் சிலவும் அரங்கேறியிருந்தன. வெளிப்படையாகத்தோன்றாத, உள்ளுக்கும் பெருந் தீச்சுவாலையாகப் பற்றியெறிந்த, கட்டுக்கள் தளர்த்தப்பட்ட செயற்பாடுகள் சில அரங்கேறியிருந்தன.

### நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பில் கூட்டு எதிரணியினது கருத்துக்கள்

கடந்த மூன்றாம் திகதியன்று. நம்



பிக்கையில்லாத் தீர்மானமென்ற மேடைநாடகக் காட்சிகள் நாடகத்தின் கதை வசன கையெழுத்துப் பிரதிகளுக்கு அமைவாக அல்லாது, திடீரென மேடையில் அரங்கேறிய காட்சிகளாக அரச தலைவர் மைத்திரிபாலாவின் வழிநடத்தலில் நடந்து முடிந்தன. நாட்டையே நாசமாக்கும் இந்த அரசை அதிகாரத்திலிருந்து அகற்ற, சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிணையுங்கள். பெரும் வாக்கு வித்தியாசத்தில் நாம் வெற்றி பெறுவது உறுதி எனக் கர்ச்சித்தார் பொது எதிரணியைச் சேர்ந்த தினேஷ் குணவர்த்தன. மகிந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் கையெழுத்திடாவிடினும், எதிர்வரும் 5ஆம் திகதி சூரியன் உதிக்கும் வேளை இந்த அரசு வீழ்ச்சி கண்டிருக்கும் எனக் கொக்கரித்தார் விமல் வீரவன்ச. மதிப்போடு தமது பதவியைத் தாமாக கைவிடுவதைத் தவிர ரணிலுக்கு வேறு மார்க்கமேதுமில்லை என ஆவேசமாகக் குரல் எழுப்பினார் உதய கம்மன்பில. மேற்கண்டவை யாவும் கடந்த இரண்டாம் திகதி வரை கூட்டு எதிரணி முக்கியஸ்தர்கள் வெளியிட்டு வந்த கருத்துக்களாகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களும் பிரேரணைக்கு ஆதரவளிப்பார்களா? எதிர்ப்பார்களா? என்பது உறுதியாகாதிருந்த போதிலும், பிரேரணை விவாதத்துக்கு எடுக்கப்படுவதற்கு முன்னரேயே, முஸ்லிம் காங்கிரஸ் அதனை எதிர்ப்பதென முடிவு செய்து விட்டிருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகள் மற்றும் அவற்றின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பில் ஒரு போதும் இரு தரப்புக்களாக பிரிந்து வாக்களிக்கமாட்டார்கள் என்பதில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் கடும் நம்பிக்கை கொண்டிருந்தார். தமிழ் மக்களது பிரச்சினைகள் குறித்து தலைமை அமைச்சர் ரணிலுடன் கலந்துரையாடி தீர்வுகண்டுவிட முடியுமென கூட்டமைப்பினர் மத்தியில் நம்பிக்கை நிலவியது. வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் மட்டுமே ரணிலுக்கு எதிரான கருத்தைக் கொண்டிருந்ததுடன், தமிழ் மக்களது எதிர்கால நல்வாழ்வு குறித்த விடயமே அதில் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தது. ஆயினும் மகிந்தவின் கூட்டு முன்னணித் தரப்பு ரணிலுக்கு எதிராகக் கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவளிக்க இயலாத சிறைப்பட்ட நிலை விக்னேஸ்வரனுக்கு ஏற்பட்டிருந்தது. ஆதலால் வாக்களிப்பில் கலந்து கொள்வதைத் தவிர்ப்பதைவிட, நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடிப்பதற்காக, பிரேரணைக்கு எதிராக வாக்களிக்க வேண்டிய நிலை தமிழர் தரப்புக்கு ஏற்பட்டிருந்தது.

### தலைமை அமைச்சருக்கு எதிராகச் செயற்பட்ட ஐ.தே.கட்சியினர்

ஆதலால் தமிழர் விடுதலைக் கூட்டமைப்பினதும், முஸ்லிம் காங்கிரஸினதும் ஆதரவைப் பெற ரணிலின் தரப்பினர் அதிகபட்ச முயற்சியை மேற்கொண்டனர். ஆயினும் குறித்த இரு தரப்பினர்கள் எத்தகைய முடிவை மேற்கொள்ளக்கூடுமென்பதில் நிச்சயமற்ற தன்மையும் நிலவியது. முஸ்லிம் காங்கிரஸின் தீர்க்கப்படாத பிரச்சினைகள் தீர்த்திடத் தக்கவையாக இருந்ததால், ரணில் தரப்பினர் முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவைத் தம்பக்கம் ஈட்டிக்கொள்ள வாய்ப்புக்கிட்டியது. குறித்த இரு தரப்பினரது ஆதரவும் ரணிலுக்குக் கிட்டவுள்ளதாக நம்பப்பட்ட நிலையில், ஐ.தே. முன்னணியில் யானைச் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்ற ஐ. தே. கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களில் சிலரது செயற்பாடுகள், அவர்களது கருத்து வெளிப்பாடுகள் ரணிலை விமர்சிக்கும் வகையில் அமைந்தமை ரணிலுக்குத் தலைவலியை ஏற்படுத்தக்காரணமாகின. அந்தக் குழுவில் ஏழு நாடாளுமன்ற உறுப்பினர்கள் செயற்படுவதாகவும், அவர்களை ரணிலுக்கு எதிராக வழி நடத்துவது ரத்ன தேரரே எனவும் தகவல்கள் வெளியாகின. குறித்த குழுவினர் குறித்த அவதானமாக இருக்குமாறும், ஐ. தே. கட்சிக்கு விசுவாசமான ஏனைய ஐ. தே. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை இந்த குழுவினர் தமது பக்கத்துக்கு இழுத்

> தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகள் மற்றும் அவற்றின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பில் ஒரு போதும் இரு தரப்புக்களாக பிரிந்து வாக்களிக்கமாட்டார்கள் என்பதில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் கடும் நம்பிக்கை கொண்டிருந்தார். தமிழ் மக்களது பிரச்சினைகள் குறித்து தலைமை அமைச்சர் ரணிலுடன் கலந்துரையாடி தீர்வுகண்டுவிட முடியுமென கூட்டமைப்பினர் மத்தியில் நம்பிக்கை நிலவியது.

துக்கொள்ள இடமளிக்காமல் கவனம் செலுத்துமாறும் ரணிலுக்கு கடும் ஆதரவு வழங்கும் ஐ. தே. கட்சியின் இளம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தரப்பு எச்சரிக்கை விடுத்து வந்தது. அத்தகைய நிலைப்பாட்டை எவ்விதம் கையாள்வது என்பது குறித்து குழப்பமடையும் நிலைக்கு ரணில் தள்ளப்பட்டார். அவருக்கு அடுத்தடுத்து வந்த எச்சரிக்கைகள் அவரைக் குழப்பத்தில் ஆழ்த்தின.



ஆயினும் இவற்றுக்கு மத்தியில் ரணிலை குறித்த சவாலில் வெற்றி பெற வைக்கும் முயற்சியில் நாடாளுமன்ற உறுப்பினர்களல்லாத ஐ. தே. கட்சியின் ஆதரவாளர்களான பலரும் ஈடுபட்டிருந்த னர்.

அத்தகைய ஐ. தே. கட்சியின் தீவிர ஆதரவாளர்கள் தரப்பு, கட்சியின் புனரமைப்பு என்ற விடயத்தை முன்வைத்து, அதையொரு சாட்டாகக் கொண்டு, வாக்களிப்பில் கலந்துகொள்ளாது தவிர்த்தல், மற்றும் ரணிலுக்கு எதிராக வாக்களித்தல் போன்ற நிலைப்பாடு களிலுள்ள ஐ. தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரெவரெனத் தாம் இனங்கண்டிருப்பதாகவும், அவர்களுடன் பேசி அவர்களை தமது பக்கம் திருப்ப நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் ரணிலுக்கு அறிவுறுத்தியது.

**ரணிலின் வெற்றி குறித்து அச்சம் கொண்டிருந்த மகிந்த தரப்பு உறுப்பினர்கள் சிலர்**

இதனிடையே மகிந்த தரப்பில் மகிந்தவுக்கு ஆதரவான நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒரு தரப்பினர், ரணில் எப்படியாவது தமக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடித்து விடுவார் என்ற ஐயத்துடன் தமக்குள் கருத்துப் பரிமாறிக் கொண்டதையும் அவதானிக்க முடிந்தது. அதே வேளை குறித்த சவாலில் ரணிலைக் காப்பாற்ற முன்னின்ற இளம் ஆதரவாளரொருவர் "இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை தோற்கடிக்க எவருமே எதிர்பாராத சக்தியொன்று உதவி செய்யக்கூடும். பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்படும் சமயமே, அது குறித்துத் தெரிய வரும். அவர்கள் மௌனமாக இருந்து கடைசி நிமிடத்தில் வேலையைக் காட்டுவதை பார்க்கத்தான் போகிறோம். அவர்கள் அவ்விதம் ரணிலை காப்பாற்றினால் நாம் அவர்களைப் பாதுகாப்போம். எமது புதிய பயணத்தில் அவர்களையும் இணைத்துக் கொள்வோம். அந்த வகையில் அவர்கள் எதிர்காலத்தில் ஐ. தே. கட்சியின் உயர் பிரமுகர்களாக ஆகவும் இடமுண்டு எனவும் தெரிவித்திருந்தார்.

இத்தகைய பின்னணியில் குறித்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக 120 வரையான நாடாளுமன்ற உறுப்பினர்களது ஆதரவு வாக்குகள் கிட்டுமென ரணிலுக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆயினும் அது குறித்து பூரண நம்பிக்கை வைக்காத ரணில், எதிர்பாராத இடத்தில் தவறு ஏற்பட்டு விடுமானால், மேலதிக நாடாளுமன்ற உறுப்பினர்களது ஆதரவை முற்கூட்டியே தேடி எம்மை நாம் பலப்படுத்திக் கொள்வது சிறப்பு எனத் தெரிவித்து, வேறு எந்தத் தரப்பினது ஆதரவையும் பெற்றுக்கொள்ள வாய்ப்பிருக்குமானால் அதனையும் முயற்சித்து பெற்றுக்கொள்ளுமாறு கூறிவைத்தார்.

**கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை கட்டுக்குள் வைத்திருந்தார் ரணில்**

ரணில் குறித்த சவாலில் வெற்றி பெற வைக்கப்போராடிய ரணிலின் தீவிர ஆதரவாளர் தரப்பு, நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட தினத்தன்று, நாடாளுமன்ற "லொபி"யில் பிரவேசித்தபோதே ரத்னதேரர் ரணிலுக்கு எதிராகச் செயற்பட இருப்பதைத் தடுத்திட இயலாதென்பதை உணர்ந்து கொண்டனர். சில வேளை அவர் வாக்களிப்பில் கலந்து கொள்வதைத் தவிர்க்கக் கூடுமெனக் கருதினர். ஆனால் ஐ.தே.கட்சியின் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராவது தமக்கு எதிராகச் செயற்படுவாரா? என்ற ஐயம் ரணிலின் மனதில் நிலவியது. தமக்கெதிராகச் செயற்படக்கூடுமென சந்தேகப்படும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் மீண்டும் மீண்டும் பேசி அவர்களது மனங்களைத் தமது பக்கம் திருப்புமாறு கிடைத்த அறிவுறுத்தலை முறைப்படி ரணில் கையாண்டு தமது முயற்சியில் வெற்றி கண்டார்.

ரணிலுக்கு எதிரான கருத்து நிலைப்பாட்டைக் கொண்டிருந்த போதிலும் சில எதிர்த் தரப்பு மைத்திரிபால ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் குறித்த விடயத்தில் மைத்திரபால குறிப்பிடத்தக்க அளவுக்கு பங்களிப்பு வழங்குவதாக ரணிலுக்குத் தெரிவித்திருந்தனர்.

ஆனால் கூட்டரசொன்றை உருவாக்க முக்கிய பங்காற்றிய சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள் சிலர், நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பாக சுயாதீனமாக செயற்பட முடிவு செய்தமை குறித்த



தகவல் அரச தலைவர் அறிந்திராத ஒன்றல்ல. அரச தலைவர் மைத்திரிபாலவோ தமக்கு விருப்பமான விதத்தில் பெரும்பாலான சுதந் திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை வாக்களிப்பைப் பகிஷ்கரிக்க வைப்பிப்பதன் மூலம், நம்பிக்கையில்லாப் பிரேரணைளைச் சிரம

> உண்மையில் அரசு என்பது அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சர் உள்ளிட்ட அமைச்சரவையால் நிர்வாகிக்கப்படும் நிறுவனமாகும். அந்த நிலையில் தலைமை அமைச்சருக்கு எதிராக அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் செயற்படுவதென்பது ஒட்டுமொத்த அரசையும் கவிழ்க்க முயலும் செயற்பாட்டை ஒத்ததாகும். அத்தகைய நாடாளுமன்ற உறுப்பினர்களை அரச தலைவர் தொடர்ந்தும் அரசில் அங்கம் வகிக்க அனுமதிக்க முயற்சித்தால், அதுவும் நியாயமானதொன்றல்ல.

மான சிக்கலான நிலைக்கு இட்டுச் செல்வதற்கே ஆர்வம்காட்டிச் செயற்படுவதாக சுதந்திரக்கட்சியின் நடுநிலை நிலைப்பாடு கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் கருதினர். இந்தச் செய்தி ரணிலுக்கு உடனுக்குடன் கிட்டிவந்தமை அரச தலைவருக்கு பெரும் தலைவலியாக அமைந்தது.

ஆயினும் அரசில் அங்கம் வகித்துக் கொண்டே அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிப்பதால், அத்தகைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதன் பின்னர் தொடர்ந்தும் அதே அரசில் இருப்பது குறித்து, பிரேரணையை எதிர்க்கும் தரப்பினர் ஆட்சேபனை தெரிவிப்பது சட்டப்படி செல்லுபடியற்றதென்பது சட்ட வல்லுநர்களது கருத்தாக அமைந்திருந்தது.

உண்மையில் அரசு என்பது அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சர் உள்ளிட்ட அமைச்சரவையால் நிர்வாகிக்கப்படும் நிறுவனமாகும். அந்த நிலையில், தலைமை அமைச்சருக்கு எதிராக அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் செயற்படுவதென்பது ஒட்டுமொத்த அரசையும் கவிழ்க்க முயலும் செயற்பாட்டை ஒத்ததாகும். அத்தகைய நாடாளுமன்ற உறுப்பினர்களை அரச தலைவர் தொடர்ந்தும் அரசில் அங்கம் வகிக்க அனுமதிக்க முயற்சித்தால், அது நியாயமானதொன்றல்ல. சட்டப்படியாக இத்தகைய புதிய மோதலை முறியடிக்க இயலும். அந்த வகையில் புதிய சட்ட மூலத்தை உருவாக்கும் வழக்குத் தீர்ப்பு கிட்டக்கூடும். ஆதலால் அரசுக்கு எதிராகச் செயற்படும் அமைச்சர்களை உள்ளடக்காமலே அரசு தொடர்ந்து செயற்படவேண்டி ஏற்படும் எனவும் சட்ட வல்லுநர்கள் சுட்டிக்காட்டி யுள்ளனர்.

அந்த வகையில் தன்மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் ஏதோ ஒரு விதத்தில் தப்பிப்பிழைத்துக் கொண்ட ரணில், தற்போது தமக்கெதிராக செயற்பட்ட அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பழிவாங்கும் வகையில் செயற்படாது கட்சி மட்டத்தில் எழும் கோரிக்கைகள், தமது ஆதரவாளர்கள் தரப்பு மட்டத்தில் முன்வைக்கப்படும் கோரிக்கைகள், நாடளாவிய ரீதியில் முன்வைக்கப்படும் யோசனைகளுக்குக் காதுகொடுத்து இளம் பரம்பரையினரை அரசியலில் முன்னணிக்குக் கொண்டு வரத்தக்க வகையிலான கட்சிப் புனரமைப்புச் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியது மிகமிக அவசியமாகிறது. அவ்வித செயற்பாடுகளில் ஈடுபட ரணில் தவறுவராயின் அவர் அரசியலில் போர்க்கிட மற்றதொரு பாரதூர நிலைக்கு உட்பட நேரிடுமென்பது நிச்சயமானதே.

## ஆசிரியருக்கான கடிதம்

# கட்டண அறவீடு தொடர்பான கருத்துக்கு முச்சக்கர மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ள விளக்கம்

எமது சங்கத்துக்கு களங்கம் ஏற்படுத்தும் விதத்தில் 2018.04.08ஆம் திகதிய உதயன் பத்திரிகையின் 19ஆம் பக்கத்தில் வெளியான செய்தியால் மிகவும் வேதனை அடைகின்றோம். எமது சங்கமானது, மிகவும் கட்டுக்கோப்புடன் செயற்படுகின்றது. எமது சங்கம் தொடங்கிய காலம் தொட்டு போர்ச்சூழல் காலத்தில்கூட, நாம் நேர்த்தியான சேவைகளை மக்களுக்காக இரவு, பகல், மழை பாராது சேவையில் ஈடுபடுகின்றோம். மருதனார்மடத்தில் இருந்து சுன்னாகத்திற்கு ரூபா 350 அறவிட்டதாக வெளியான செய்தி மிகவும் தவறான ஒரு செய்தியாகும். கலா அக்கா சேவையில் ஈடுபடுத்திய ஓட்டோவை, அலைபேசி ஊடாக 'லவ் லேனுக்கு' அழைத்து மருதனார்மடம் வந்து, சுன்னாகத்தில் செலான் வங்கியில் அரை மணித்தியாலம், பின்னர் HNB வங்கியில் அரை மணித்தியாலம், பின்னர் இலங்கை வங்கியில் அரை மணித்தியாலம் நின்று மீண்டும் மருதனார்மடத்தில் காஸ் சிலிண்டர் பெற்றுக்கொண்டு, மீண்டும் லவ் லேனுக்கு சென்றுள்ளார். அவர் தானாக முன்வந்து ரூபா 350 பணத்தினைச் செலுத்தினார் என்பதுதான் உண்மை. அதிக பணம் அறவிட்டமை தொடர்பாக எமது சங்கத்துடன் எந்தவொரு தொடர்பையும் ஏற்படுத்தாது, தாம் நினைத்தவாறு தவறான தகவல்களை பத்திரிகையில் வெளியிட்டமையை இட்டு மிகவும் மனவேதனை அடைகின்றோம். இவ்வளவு தூரம், இவ்வளவு நேரம் நின்றதற்கு எவ்வளவு பணம் அறவிடப்பட வேண்டும் என்று மதிப்பிற்குரிய கலா அக்காவிடம் கேட்க விரும்புகிறோம். நாம் சுன்னாகத்தில் இருந்து யாழ்ப்பாணம் சென்று வருவதற்கு ரூபா 600 அறவிடுகின்றோம். மீற்றரைப் பொருத்தினால் ரூபா 790 இற்கு மேல் அறவிட வேண்டும். ஆனால் நாங்கள் ரூபா 600 மட்டுமே அறவிடுகின்றோம். நாங்கள் மக்களுக்கு மகத்தான சேவையாற்ற வேண்டும் என்பதற்காகவே ரூபா 600 பெற்றுக்கொள்கின்றோம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம்.


*எம். நவலோகராஜா, செயலாளர்.*

*குறிப்பு:-போக்குவரத்துக் கட்டண அறவீடு தொடர்பாக யாழ். மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்கத்தின் (சுன்னாகம் கிளை) செயலாளரால் தெரிவிக்கப்பட்ட மேற்குறித்த கருத்துக் குறித்து, உதயன் வாசகி உடுவிலூர் கலாவின் கருத்துப் பெறப்பட்டு, நாளைய உதயன் 'ஆசிரியருக்கான கடிதம்' பகுதியில் பிரசுரிக்கப்படும்.*

*இதேநேரம் யாழ். மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்கம் (சுன்னாகம் கிளை) தெரிவித்துள்ள விபரங்கள் தொடர்பான தமது அனுபவங்கள் குறித்தும், வாசகர்கள் தமது கருத்துக்களைத் தெரிவிக்கலாம். தகுதி கண்டு அவை உதயன் 'ஆசிரியருக்கான கடிதம்' பகுதியில் பிரசுரிக்கப்படும்.*

# இயற்கையில் இணைவோம்

சேரலாதன்



இயற்கையின் படைப்புக்கள் தம்மை மாற்றிக் கொண்டதில்லை. ஆனால் மனிதன் மட்டுமே தன்னை மாற்றிக் கொண்டான் என்ற பொருள்படும்படியான அற்புதமான சினிமாப் பாடலொன்றை பல ஆண்டுகளுக்கு முன்பே கவியரசர் கண்ணதாசன் எழுதியுள்ளார். அந்தப் பாடல் இன்றும் கூட நினைவிலிருந்து மறையவில்லை.

**மனிதனின் செயற்பாடுகள்தான் இயற்கை இடருக்குக் காரணம்**

இயற்கையின் படைப்புக்கள் ஏராளமாகக் காணப்படுகின்றன. ஆகாயம், நிலம், கடல், காற்று, மலைகள், மரம், செடி, கொடிகள், மலர்கள், நீர், சூரியன், சந்திரன், பறவைகள், மிருகங்கள் என ஏராளமானவற்றைக் கூற முடியும். இன்னமும் பல தவறவிடப்பட்டிருக்கலாம். இயற்கை தனது இயல்புகளை என்றுமே மாற்றிக் கொண்டதில்லை. மல்லிகை மலரின் வாசனையில் எந்தவிதமான மாற்றத்தையும் காணமுடியவில்லை. ஆகாயம் அதே நீல நிறத்தில்தான் இன்றும் தோற்றமளிக்கின்றது. காற்று எந்த மாற்றமுமின்றி கால மாற்றத்தை அனுசரித்து வீசிக் கொண்டிருக்கின்றது. மரம், செடி, கொடிகளிலும் மாற்றத்தைக் காணமுடியவில்லை. கடல் கூடத் தன்னை மாற்றிக் கொள்ளாது பூமியை அணைத்துக் கொண்டிருக்கிறது. சுத்தமான நீர் சுவையின்றிக் காணப்படுகின்றது. பறவைகளின் வாழ்க்கை முறையிலும் மாற்றத்தைக் காணமுடியவில்லை. மிருகங்களின் இயல்புகளும் மாற்றமின்றியே தொடர்கின்றன. ஆறறிவு படைத்த மனிதன் மட்டுமே தன்னை மாற்றிக்கொண்டு விட்டான். இயற்கையையும் மாற்றிக் கொள்வதற்கு முயன்று வருகின்றான். இதனால் பொறுமையிழந்த இயற்கை அடிக்கடி தனது சீற்றத்தைக் வெளிப்படுத்தி வருகின்றது. நில நடுக்கம், சூறாவளி, சுனாமி, கடுமையான புயல், எரிமலைகளின் சீற்றம், வெள்ளப் பெருக்கு, கடும் வறட்சி, அதிக குளிர், தாங்க முடியாத வெப்பம், மிகக் கடுமையான பனிப்பொழிவு முதலான இடர்கள் இயற்கையின் சீற்றங்களே தவிர வேறொன்றுமில்லை.



**மனிதனின் சுயநல செயற்பாட்டால் இருப்பைத் தொலைக்கும் மரங்கள்**

மரங்கள் இயற்கையின் கொடைகளில் முக்கிய இடத்தை வகிக்கின்றன. இவற்றின் பயன்கள் அளவிட முடியாதன. உயிர் வாழ்வதற்குத் தேவையான பிராண வாயுவை மரங்கள் உற்பத்தி செய்கின்றன. தீங்கு விளைவிக்கின்ற கரியமிலவாயுவைத் தமக்குள் உள்வாங்கிக் கொள்கின்றன. சுவையான கனிகளை வழங்குகின்றன. வெயில் காலங்களில் இதமான நிழலைத் தருகின்றன. மரங்களின் வேர்கள் மண்ணரிப்பைக் கட்டுப்படுத்துகின்றன. மழைவீழ்ச்சியை ஊக்குவிக்கும் காரணியாகவும் மரங்கள் காணப்படுகின்றன. பறவைகளின் சரணாலயமாகவும் மரங்களே திகழ்கின்றன. இவ்வாறு மரங்களின் பயன்களை அடுக்கிக் கொண்டே போகலாம். ஆனால் நன்றி மறந்த மனிதர்கள் மரங்களை அழிப்பதிலேயே குறிப்பாகச் செயற்படுகின்றனர்.

**தனது சமநிலையை இழக்கிறது பூமி**

நாம் வாழுகின்ற பூமி இயற்கையின் அருங்கொடைகளில் மிகவும் அற்புதமானது. சந்திரன், செவ்வாய் ஆகிய கிரகங்களில் ஆராய்ச்சிகள் இடம்பெற்று வருகின்ற போதிலும் அங்கு மனிதர்கள் வாழ முடியுமா? என்பதற்கான கேள்விக்கு இதுவரை பதில் கிடைக்கவில்லை. இதனால் சகல உயிரினங்களும் பூமியைத் தஞ்சமடைந்துள்ளன. ஆனால் தன்னை வாழவைத்துக் கொண்டிருக்கும் பூமியைக் கூட மனிதர்கள் விட்டுவைக்கவில்லை. பூமிக்கடியில் இடம்பெறுகின்ற அணுகுண்டுச் சோதனைகளால் பூமியின் சம நிலையில் பாதிப்பு ஏற்படுவதை அவதானிக்க முடிகின்றது. பூமியில் அடிக்கடி நில நடுக்கங்கள் ஏற்படுவதற்கு இதுவே முதன்மையான காரணமெனவும் தெரிகின்றது. பெருமளவு நீரை ஓரிடத்தில் தேக்கி வைக்கும் பொருட்டு உலகம் முழுவதும் மிகப்பெரிய அணைகள் கட்டப்பட்டுள்ளன. பூமியின் சமநிலையை இவையும் பாதிக்கவே செய்கின்றன. இதைவிடக் காடுகளை வகைதொகையின்றி அழிப்பதும் சூழலியல் பிரச்சினை களை ஏற்படுத்தி வருகின்றன. இதைத்தவிர நிலத்தடி நீரையும் மனிதர்கள் விட்டு வைக்கவில்லை. அவர்களின் தவறான செயற்பாடுகள் மூலமாக நிலத்தடி நீரும் இன்று மாசடைந்து காணப்படுகின்றது. இதை அருந்துபவர்கள் பல விதமான நோய்களுக்கும் ஆளாகி வருகின்றனர். இரசாயன உரங்கள் மற்றும் கிருமி நாசினிகளின் பாவனை காரணமாக இயற்கையாக விளைந்து மனிதர்களுக்கு உணவாக மாறுகின்ற மரக்கறி வகைகள் உள்ளிட்ட உணவுப் பொருள்கள் நஞ்சாக மாறிக் காணப்படுகின்றன.

> நாம் வாழுகின்ற பூமி இயற்கையின் அருங்கொடைகளில் மிகவும் அற்புதமானது. சந்திரன், செவ்வாய் ஆகிய கிரகங்களில் ஆராய்ச்சிகள் இடம்பெற்று வருகின்ற போதிலும் அங்கு மனிதர்கள் வாழ முடியுமா? என்பதற்கான கேள்விக்கு இதுவரை பதில் கிடைக்கவில்லை. இதனால் சகல உயிரினங்களும் பூமியைத் தஞ்சமடைந்துள்ளன.

**பெரிய பிரச்சினையாக உலகம் வெப்பமாதல்**

காற்று உயிர்கள் உயிர்வாழ்வதற்கு ஆதாரமாகக் காணப்படுகின்றது. இன்றைய நிலையில் காற்றுக்கூட மாசடைந்த நிலையிலேயே காணப்படுகின்றது. சில முக்கியமான வெளிநாட்டுத் தலைவர்கள் அயல் நாடுகளுக்குச் செல்லும் போது சுத்தமான காற்றைத் தம்முடன் எடுத்துச் செல்ல வேண்டிய பரிதாபகரமான நிலையொன்று இன்று தோன்றியுள்ளது. வாகனங்கள், தொழிற்சாலைகள் மற்றும் வீடுகளிலிருந்து வெளிவிடப்படுகின்ற தீமையான வாயுக்கள் காற்றில் கலந்து அதனையும் மாசுபடுத்தி விடுகின்றன. அதுமட்டுமல்லாது உலகம் வெப்பமடைவதற்கும் இவை காரணமாகி விடுகின்றன. உலகம் வெப்பமடைவதால் ஏற்படுகின்ற பாதிப்புக்கள் மிகக் கடுமையானவை. வெப்பத்தின் காரணமாக அண்டார்டிகா மற்றும் பனிமலைகளில் காணப்படுகின்ற பனிப்பாறைகள் உருகிப் பெருமளவு நீர் கடலைச் சென்றடைவதால் கடலின் நீர்மட்டம் உயர்ந்துவிடுகின்றன. இதனால் உலகின் சில நாடுகள் கடலினுள் மூழ்கிவிடப் போகின்றன. தீவுகளாகக் காணப்படுகின்ற நாடுகள் இதனால் அதிக அபாயத்தை எதிர்கொள்கின்றன. மேலும் தொலைபேசிக் கோபுரங்களிலிருந்து வெளிவருகின்ற கதிர்வீச்சு மனிதர்களுக்கு மட்டுமல்லாது வேறு உயிரினங்களுக்கும் ஆபத்தானதாக மாறியுள்ளது. சிறிய பறவை இனங்கள் சிலவற்றை நாம் இழந்தமைக்கு இதுவே முதன்மையான காரணமாகும்.

**விண்வெளியையும் விட்டுவிடவில்லை**

விண்வெளிக்குச் செல்கின்ற மனிதர்கள் ஆராய்ச்சி என்ற பெயரில் ஏராளமான கழிவுகளை விண்வெளியில் விட்டு வைத்துள்ளனர். இவற்றை அகற்றிவிடுவதென்பது சாதாரணமானதொரு விடயமல்ல. விண்வெளி கூட மனிதர்களால் குப்பைக் காடாக மாறிவிட்டது. இதைவிட இன்னுமொரு விடயத்தையும் நாம் மனதில் கொள்ள வேண்டும். மனிதர்களின் பாவனைக்கு இலகுவாக இருக்குமென்ற நோக்கத்துடன் உற்பத்தி செய்யப்பட்ட பிளாஸ்ரிக் பொருள்கள் கழிவுகளாக மாறும் போது பெரும் பிரச்சினையாக மாறியுள்ளன. இந்தக் கழிவுகளால் உயிரினங்கள் மோசமான எதிர்விளைவுகளை எதிர்கொண்டு வருகின்றன. மனிதர்களால் உருவாக்கப்பட்டமை அவர்களுக்கே தீங்காக மாறியுள்ளதை என்னவென்று சொல்வது?

அன்று வாழ்ந்த மனிதர்கள் இயற்கையாகக் கிடைத்த உணவுகளை உண்டதால் நோய் நொடியின்றி நீண்டகாலம் ஆரோக்கியமாக வாழ்ந்தனர். ஆனால் இன்று சிறுவயதுப் பிள்ளைகள் தொடக்கம் வயது முதிர்ந்தவர்கள் வரை நோய்களைச் சுமந்தவர்களாக வாழ்கின்றனர். செயற்கையான உணவு முறைகளுக்கு இவர்கள் தம்மைப் பழக்கப்படுத்திக் கொண்டதே இதற்கான காரணமாகும். இந்த உணவு வகைகள் வாய்க்குச் சுவையாக உள்ள போதிலும் உடல் நலத்துக்குக் கேடு விளைவித்து மனிதர்களை நோயாளிகளாக மாற்றிவிடுகின்றன. இதை உணராதவர்கள் அவற்றில் மயங்கித் தமது உடலுக்குக் கேடு விளைவித்துக் கொள்கின்றனர்.

இந்த உலகமே இயற்கையால் படைக்கப்பட்டது. உயிரினங்கள் அனைத்துக்குமே இயற்கைதான் தலையாயது. அதை வெல்லக் கூடிய ஆற்றல் எவருக்குமே இல்லை. இதனால்தான் இயற்கையைக் கடவுளாகப் போற்றுகின்றோம், பூசிக்கின்றோம். இத்தகைய உயர்ந்த இடத்தில் உள்ள இயற்கைக்கு விரோதமாக நாம் செயற்படுவது அந்த ஆண்டவனையே மதிக்காததற்கு ஒப்பானதாகும். இயற்கையைப் பேணுவோம். இயற்கையோடு ஒன்றிவாழ்ந்து உயர்வு பெறுவோம்.

**நாளை**

**11.04.2018**

புதன்கிழமை

**பங்குனி 28**

திதி: ஏகாதசி முழுவதும்
நட்சத்திரம்: அவிட்டம் பி.இ. 12.44 வரை
சுபநேரம்: 04.36–06.06 வரை
ராகுகாலம்: 12.06–01.36 வரை

## All Kind of offset & Digital printing

# Vista8 printers

- Computer Designing,
- Offset Printing,
- Digital Printing
- Screen Printing
- Mug & Plate Printing
- T - shirt design & Printing
- Photocopy
- Shield & ETC...

ESCADA
JEWEL
3D text

## Nameboard Work

பாடசாலைகளுக்குத் தேவையான சான்றிதழ்கள்,
வீர, வீராங்கனைகளுக்கான வெற்றி இலக்கங்கள், வெற்றிக் கேடயங்கள்,
பதக்கங்கள், சிறப்புமலர்கள் மற்றும் அனைத்து வகையான
அச்சுப் பதிப்புக்களையும் மிகக்குறைந்த விலையில்
துல்லியமாக அச்சிட்டுப் பெற்றுக்கொள்ள.....


No :.116D,
Ramanathan Road
Kaladdy Junction, Jaffna.
vista8print@gmail.com

0212215488
0755206848
0777918373

---

## வனிக்கா சேஜிக்கல்ஸிடம் உள்ள
## உடல் ஆரோக்கியத்திற்கான சில Appliances :

1. Travel Pillow
2. Yoga Mat
3. Yoga Exercise Ball - You tube இல் பார்வை இடலாம்.
4. Safty Gloves - Home use, Garden Use, Kitchen use, Hotel use, Chemicals Use, Normal use, School use.
5. Apron (ஏப்ரன்)
6. Surgeons Cap



**VANIKAA SURGICALS**

203 Hospital Road, Jaffna.
Tel: 021 222 0077,
Mob: 077 44 22 367, 077 510 6910
E-mail- vanisurgi@sltnet.lk

நாங்கள் என்றும் உங்களுடன்

---

# சிறிகுமரன் ரெக்ஸ்

## புதுவருடத்தை முன்னிட்டு
## மாபெரும் மலிவு விற்பனை



இந்தியாவில் இருந்து நேரடியாக இறக்குமதி
செய்யப்பட்ட புத்தம் புதிய ஆடைத் தெரிவுகள்
அனைத்தும் மலிவுவிலையில்

ரெடிமெற் சல்வார்களுக்கு அதிவிசேட விலை கழிவுகள் 10%
தொடக்கம் 30% வரை தள்ளுபடி

குறிப்பு - வாரத்தின் எழுநாள்களும்
வியாபாரம் நடைபெறும்.

14.04.2018 வரை

**எம்மிடம் எண்ணற்ற தெரிவுகள் ஏராளம்.**

பிறக்கவிருக்கும் தமிழ் புத்தாண்டை சிறிகுமரனின் ஆடைத்தெரிவுகளுடன்
கொண்டாடுங்கள்.

770. K.K.S, வீதி. தட்டாதெருச்சந்தி. யாழ்ப்பாணம்.

---

## சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு
# அசத்தலான தள்ளுபடி

14.04.2018 வரை

சிறுவர்களுக்கான ஆடை தினுசுகள்
பெண்களுக்கான சாறிகள்,
சல்வார்கள், பிளவுஸ், Top கள்
மற்றும் அனைத்து விதமான
ஆடைகளையும் ஆண்களுக்கான
சேட்டிங், சூட்டிங் அனைத்து
ஆடைகளையும் ஒரே கூரையின்
கீழ் பெற்றுக் கொள்ளலாம்.



# ஸ்ரீ லலிதா பெஷன்

இல.165, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

# லலிதா ரெக்ஸ்

இல. 5,6 நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.

T.P: 021 222 5260

---

# அபி பஷன் வேல்ட் இன்

ABI Fashion World

புத்தாண்டு சிறப்புத் தள்ளுபடி

தமிழ் புத்தாண்டை மகிழ்வுடன் கொண்டாட
குடும்பத்தில் உள்ள அனைவரும் விரும்பும்
ஆடைகள் ஒரே இடத்தில்



SPECIAL OFFER
# SALE
# 20% - 70%

இச்சலுகை
ஏப்ரல் 13 வரை மட்டுமே

வருடத்தில் குறைந்த விலை
வருடம் முழுவதும் நிறைவான சேவை
(விலைக்கழிவுகள் நிபந்தனைகளுக்கு உட்பட்ட)

Shirt - Rs. 700/=
Sarees - Rs. 800/= முதல்
(Model Shirt with Headphone) - Rs.1500/=முதல்
Tshirt - Rs. 250/=

டெனிம் ஜீன்ஸ் ரூபா 1000/=, ரீசேட் ரூபா 250/=
ஒரு சேலை வாங்கினால் இன்னும் ஒன்று இலவசம்.
சல்வார் வகைகள் 50% வரை விலைக்கழிவு
சிறுவர்களுக்கான ஆடைகள் 50% வரை விலைக்கழிவு
ரொப் வகைகள் 1 இற்கு 1 இலவசம்

என்ன வேண்டும்
உங்களுக்கு எல்லா
ஆடைகளும் இங்கு இருக்கு
கையிருப்பு உள்ளவரை மட்டுமே

112, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரச் சந்திக்கும் பிரதம தபாலகத்திற்கும் இடையில்)

021 222 3738 | 0773246503 | 0770185471 | abifashionworld

## கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட செயலகத்தில் மோட்டார் போக்குவரத்து பிரிவின் மேற்பார்வை உத்தியோகத்தராக கடமையாற்றும் **அம்பலம் பாஸ்கரன்** அவர்களின் அன்புத்தாயார்.

**அம்பலம் கணேஸ்வரி**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்.மாவட்டச்செயலக நலன்புரிக்கழகம்.**

## கண்ணீர் அஞ்சலி



எமது நண்பன்

**தில்லையம்பலம் வசந்தகுமார்**

அவர்களின் மறைவுச் செய்தியால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**காவேரி சில்க்ஸ்**

**உரிமையாளர்களும், ஊழியர்களும்.**

(CS/15572)(11,17)

## கண்ணீர் அஞ்சலி



**தில்லையம்பலம் வசந்தகுமார்**

அரியாலை ஸ்ரீஞான வைரவர் கோயிலின் முன்னேற்றத்துக்காகத் துடிப்புடனும் உற்சாகத்துடனும் பங்காற்றிய வரும் ஆலயத்தின் திருவிழாக் காலங்களில் தொடர்ச்சியான அன்னதான நிகழ்வை தொடக்கி வைத்தவரும் ஆலய ஆரம்பகால இளைஞர்சங்க உறுப்பினராகவும் கடமையாற்றிய

**தில்லையம்பலம் வசந்தகுமார்**

அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அமரர் ந.நர்மலிங்கம் குடும்பம்

முன்னாள் தலைவர், அரியாலை ஸ்ரீ ஞான வைரவர் கோயில்.

(CS/15577)(11,17)

## கண்ணீர் அஞ்சலி



**வடமாகாண பனை தென்.வள அபி.கூட்.சங்கங்களின் சமாசத்தின் முன்னாள் கல்வி உத்தியோகத்தரும், யாழ்.மாவட்ட பனை. தெ.வ.அ.கூட். நிறுவனங்களின்** பணியாளர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் செயலாளரும், வடமாகாண கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கத்தின் முன்னாள் தலைவருமான திரு.வ.சிவகுமார் அவர்களின் மனைவி

**பராசக்தி - சிவகுமார்**

அவர்கள் 07.04.2018 காலமானார். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத் தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**அங்கத்தவர்கள், நிர்வாக சபை உறுப்பினர்கள்**
**யாழ்.மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின்,**
**பணியாளர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்.**

(AJA/6436)(11,17)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் முருகேசு கந்தையா**

மண்ணில் 09.11.1943

விண்ணில் 25.03.2014

பாசத்தின் அடையாளமாய் அன்பின் வடிவமாய் தோன்றி
எம் உயர்ச்சிக்கு வித்திட்டு எம்மை விட்டுப் பிரிந்தாலும்
எம்முள்ளே என்றும் உங்கள் புன்முகம்
காலங்கள் கடந்து சென்றாலும்
கடைசி வரை வாழ வேண்டும்

என்றும் உங்கள் நினைவுகளுடன்

**குடும்பத்தினர்.**

**உசன், மிருசுவில்.**

(CS 15549) (14.17)

## பெயர்மாற்றம்

இன்பர்சிட்டி. பருத்தித்துறை என்னும் முகவரியை வசிப்பிடமாகக் கொண்ட **றொன்சன்** ஆகிய நான் இன்றுமுதல் எனது பெயரை **ரான்சன் பிரியன்** எனப் பெயர் மாற்றம் செய்வதோடு இனிவரும் காலங்களில் சகல ஆவணங்களிலும் எனது புதிய பெயரையே பயன்படுத்துவேன் என்று இத்தால் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத் தருகின்றேன்.

**- ரான்சன் பிரியன் -**

(CS/15530)(11,17)

# STUDY IN INDIA

## ENGINEERING DEGREES

**From ANNA UNIVERSITY, Chennai, India**

**Study Center: EXCEL ENGINEERING COLLEGE**
**Komarapalayam, Tamil Nadu, South India.**

**ENGINEERING DEGREES**

- B.E. - Aeronautical Engineering
- B.E.- Civil Engineering
- B.E.- Computer Science Engineering
- B.E.- Electronics & Communication Eng.
- B.E.- Mechanical Engineering
- B.Tech - Information Technology

**SPECIAL SCHOLARSHIP FEE For 5 Students**

- 1st year - US $ 1500
- 2nd year - US $ 1000
- 3rd year - US $ 1000
- 4th year - US $ 1000
- Food & Accommodation: US $ 100 per month

Entry Requirement: 2C + 1S in Maths Stream (with combined Maths, Chemistry & Physics) and Credit Pass in O/L or A/L English

O/L மட்டும் சித்தியடைந்த மாணவர்கள் 3 வருடம் Diploma கற்றபின் மேலும் 3 வருடங்கள் Engineering Degree யை கற்க முடியும்

SRET EXCEL

மேலதிக விவரங்களுக்கு ☎ 0777 767 818 (தமிழில்)

**Scholars Information Centre**

No;01, Vaverset Place, Wellawette, Colombo 6

(CS/15527)(11,17)

## கடை வாடகைக்கு

129 C. கே.கே.எஸ்.வீதி. யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ரயர் கடை வாடகைக்குண்டு. ரயர்கடை தளபாடங்கள் உட்பட.

**077 222 8312**

(CS/15569)(11,17)

## விபூதி விற்பனைக்கு

கோயில்களில் எடுக்கப்படும் தீச்சட்டிக்குப் போடும் **விபூதியினை** எம்மிடம் மலிவான விலையில் மொத்தமாகவும். சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

சிவா நறுமணப்பூங்கா. இல. 288. ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம். T. P : 021 222 2567

## தவறவிடப்பட்டுள்ளது

பூ.சிவகரன் என்பவரது அடையாள அட்டை சாரதி அனுமதிப்பத்திரம். Job ID உள்ளடங்கலான பேர்ஸ் ஒன்று கடந்த 07.04.2018 அன்று கைதடி கோப்பாய் வீதிக்கு அண்மித்த பகுதியில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:
வீரபத்திரர் கோயிலடி, கோப்பாய் தெற்கு.

**077 902 6536**

## மணமகள் தேவை

வயதான கிறிஸ்தவ கௌரவ குடும்பம் விவாகரத்தான நற்குணமும் நல்ல இலட்சியமும் கொண்ட கனடிய பிரஜை ஒழுக்கமும் நற்பண்பும் மகிழ்ச்சியும் கொண்ட 30 வயதிற்கு உட்பட்ட கிறிஸ்தவ பெண்ணுக்கு வளமான வாழ்வு அளிக்க விரும்புகின்றார். சீதனம் எதிர்பார்க்கவில்லை. ஒரே முறையில் சகல விவரங்களுடன் படங்கள் உட்பட விண்ணப்பிக்கவும்.

(CS 15566)(14.17)

விளம்பர இல.003
மே.பா.உதயன்
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## கேள்வி அறிவித்தல். நல்லூர் பிரதேச சபை
## மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதி. 2018

01. தலைவர் பெறுகைக்குழு நல்லூர் பிரதேச சபை கொக்குவில் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ் குறிப்பிட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு வேலைக்காக கோருகின்றது.

02. தேசிய போட்டிக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் 2016.09.30 ஆம் திகதி 04/ 2016 (I) ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின்படி வடமாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும். அட்டவணையில் காட்டியபடி புனரமைப்பு வேலைகளுக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

04. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிக்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள். தலைவர். பெறுகைக்குழு. நல்லூர் பிரதேசசபை. 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில் எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் - 021-222-2700) இல் இருந்து மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம்

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் தலைவர். பெறுகைக்குழு நல்லூர் பிரதேசசபை. 14/5 கருவப்புலம் வீதி. கொக்குவில் என்னும் இடத்திலிருந்து 2018.04.10 ஆம் திகதியிலிருந்து 2018.04.23 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 தொடக்கம் பி.ப 3.00 வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2000.00 (வரி நீங்கலாக) பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர். பெறுகைக்குழு. நல்லூர் பிரதேசசபை. 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில் என்னும் முகவரிக்கு 2018.04.24 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும் பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது 2018.04.24 ஆம் திகதியன்று மு.ப 10.30 மணிக்கு வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08. கேள்வியானது செல்லுபடியாகும் காலம் கேள்வி சமர்ப்பிக்கும் இறுதி திகதியிலிருந்து 63 நாட்கள் ஆகும்.
09. கேள்வி பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | வேலை விபரம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (Vat நீங்கலாக) | மீளளிக்கப் படாத கேள்விப்பத் திரக் கட்டணம் (VAT,NBT நீங்கலாக) | வேண்டப் படும் தரம் | கேள்வி பிணை வைப்பு (ரூபா) | ஒப்பந்த காலம் |
|---|---|---|---|---|---|---|
| 02. | காரைக்கால் திண்மக்கழிவு முகாமைத்துவ அலகிற்கான கொட்டகை அமைத்தல். | 2.49 | 2,000.00 | C8 | 25,000.00 | 03 மாதம் |

10. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் 2018.04.20 ஆம் திகதி நல்லூர் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் மு. ப. 10.00 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்திற்கு ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் கலந்து கொள்ள முடியும்.

குறிப்பு:- பந்தி 2 இல் கூறப்பட்ட நிபந்தனைகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளில் வேண்டப்படும் தரம் அட்டவணையில் குறிப்பிட்டவாறு இல்லாத சந்தர்ப்பத்தில் அதனிலும் கூடிய தரம் சமர்ப்பித்த கேள்விகள் பரிசீலிக்கப்படலாம்.

**தலைவர் பெறுகைக்குழு**
**நல்லூர் பிரதேசசபை, கொக்குவில்.**

2018.04.10

**சுந்தர்சன் நிறுவனத்தின்**

02.04.2018 - 21.04.2018 வரை

**சித்திரைப் புத்தாண்டு**

**விசேட விலைக்கழிவும் இலவச விநியோகமும்**




வீட்டுக்கு தேவையான மின் உபகரணங்கள் அத்தனைக்கும் உத்தரவாதத்துடன் கூடிய விசேட விலைக்கழிவு தரப்படும்

138, யாழ் வீதி, மானிப்பாய்

## கன்னடத்தில் மறுதயாரிப்பு ஆகிறது

# தனுஷின் 'பவர் பாண்டி'



தனுஷ் இயக்கி, நடித்த 'பவர் பாண்டி' படம் கன்னடத்தில் மறு தயாரிப்பு செய்யப்படுகிறது. தனுஷ் முதன்முறையாக இயக்கிய படம் 'பவர் பாண்டி'. இந்தப் படம் 'ப. பாண்டி' எனப் பெயர் மாற்றப்பட்டு மறுதயாரிப்பு ஆகிறது. ராஜ்கிரண், ரேவதி, தனுஷ், மடோனா செபாஸ்டியன், பிரசன்னா, சாயா சிங் உள்பட பலர் இந்தப் படத்தில் நடித்திருந்தனர்.

தமிழில்வெற்றிபெற்ற இந்தப்படம், கன்னடத்தில்மறுதயாரிப்புச் செய்யப்படுகிறது.

இதில் ராஜ்கிரண் வேடத்தில் அம்பரீஷ் நடிக்க, தனுஷ் வேடத்தில் சுதீப் நடிக்கிறார்.

ரேவதிவேடத்தில்நடிக்கசுஹாசினிமணிரத்னம் ஆகியோர் நடிக்கின்றனர்.

ஏழைக்கும் பணக்காரனுக்கும் ஒரு வித்தியாசம் தான்! ஒருத்தன் நாயா அலஞ்சா அவன் 'ஏழை' ஒருத்தன் நாயோட அலஞ்சா அவன் 'பணக்காரன்'

பிரார்த்தனைகளின் போது உதடுகள்தான் அமைதியாய் இருக்கிறது. இதயம் போடும் இரைச்சலோ எல்லையில்லாதது.!







### இப்பவெல்லாம் பசங்க ஊர் போறப்ப இப்படித்தான் போறாங்க...



### முடி கொட்டுவதை தவிர்க்க இலகு வழி.....



## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 2 | | 4 |
| 9 | 3 | | | | | | 5 | |
| | | | 3 | 7 | | 1 | | |
| 4 | | 1 | | | | 3 | | |
| | | | 5 | 1 | 6 | | | |
| | | 2 | | | | 9 | | 6 |
| | | 7 | | 6 | 8 | | | |
| | 5 | | | | | | 8 | 3 |
| 8 | | 9 | | | | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 6 | 9 | 1 | 8 | 3 | 7 | 4 | 5 |
| 8 | 1 | 7 | 9 | 5 | 4 | 3 | 6 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 2 | 1 | 8 | 9 |
| 7 | 9 | 4 | 3 | 1 | 5 | 6 | 2 | 8 |
| 1 | 8 | 3 | 2 | 9 | 6 | 5 | 7 | 4 |
| 5 | 2 | 6 | 7 | 4 | 8 | 9 | 1 | 3 |
| 9 | 5 | 2 | 4 | 6 | 1 | 8 | 3 | 7 |
| 4 | 7 | 1 | 8 | 3 | 9 | 2 | 5 | 6 |
| 6 | 3 | 8 | 5 | 2 | 7 | 4 | 9 | 1 |

நேற்றைய விடை

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளை யும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கி றார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை.



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேஷம்:** குடும்ப விஷயம் பற்றி பிறரிடம் பேச வேண்டாம். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும்.

**இடபம்:** உங்களின் நற்செயலை சிலர் தவறாக விமர்சிப்பர். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். இலாபம் சுமார். திடீர் பயணம் மேற்கொள்ள நேரிடலாம்.

**மிதுனம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். திட்டமிட்ட பணி எளிதாக நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சியால் ஆதாயம் அதிகரிக்கும்.

**கடகம்:** கடந்தகால உழைப்பின் பயன் கிடைக்கப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் தாராளமாக இருக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தின் நன்மதிப்பைப் பெறுவர்.

**சிங்கம்:** குடும்பத்தினரின் ஆலோசனையை ஏற்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாரான அளவில் இருக்கும். பணியாளர்கள் பணி விஷயமாக திடீர் பயணம் செல்ல நேரிடும்.

**கன்னி:** மற்றவர் செயலை குறை சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாக நேரிடலாம்.

**துலாம்:** முக்கிய பணிகளை திட்டமிட்டு செய்து முடிப்பீர்கள். குடும்பத்தினரின் ஒத்துழைப்பு வளர்ச்சிக்கு துணைநிற்கும். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி விலகும்.

**விருச்சிகம்:** இடையூறு செய்பவரிடம் விலகுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் மந்தநிலை ஏற்படலாம். லாபம் சுமார். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர்.

**தனுசு:** கடந்தகால நற்செயலுக்கு உரிய பயன் தேடி வரும். எதிர்கால வளர்ச்சி குறித்து திட்டமிடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும்.

**மகரம்:** உறவினர்களுடன் இணக்கம் அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். எதிர்பார்த்த வருமானம் வரும். இஷ்ட தெய்வ வழிபாடு நிறைவேறும்.

**கும்பம்:** இடையூறாக செயல்பட்டவர் விலகிச் செல்வர். தொழில், வியாபார வளர்ச்சிக்கான வாய்ப்பு கிடைக்கும். வருமானம் அதிகரிக்கும்.

**மீனம்:** நீண்டநாள் எதிர்பார்ப்பு நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் வியத்தகு முன்னேற்றம் உண்டாகும். சேமிக்கும் விதத்தில் ஆதாயம் வரும்.

# தலைமை நெசவாளி



ஒரு அடர்ந்த காட்டில் ஒரு பெண் சிங்கம் வாழ்ந்து வந்தது. ஒரு நாள் அந்தச் சிங்கம் தான் திருமணம் செய்யப் போவ தாகவும் அது மிகவும் கோலாகலமாக நடைபெறும் என்றும் காட்டு மிருகங்களுக்கு அறிவித்தது. கல்யாண நாளன்று தமக்கு கிடைக்கப் போகும் விருந்தை எண்ணி எல்லா மிருகங்களும் மகிழ்ச்சியோடு இருந்தன. திருமணம் சம்மந்தமான வேலைகளைச் செய்ய சிங்கம் எல்லா மிருகங்களுக்கும் கட்டளை பிறப்பித்தது. அந்த வகையில் ஒரு பட்டுப் பூச்சியைத் தன்னிடம் அழைந்த சிங்கம் தனது திருமண ஆடைக்காக இருபது மீற்றர் நீளமான பட்டு நூல் நெய்து தரும்படி கூறியது. தன்னால் முடிந்த வரை நெய்து தருவதாகப் பட்டுப் பூச்சி சிங்கத்திடம் கூறியது. பின்னர் தனது வீட்டுக்குச் சென்று ஆர்வத்துடன் நூலை நெய்யத் தொடங்கியது.


சிறிது நேரம் கழிந்தது. அவ்விடம் ஒரு சிலந்தி வந்தது. அதுவும் பட்டுப் பூச்சியின் ஒரு பக்கத்தே அமர்ந்து தனது வலையைப் பின்னத் தொடங்கியது. சிலந்தி தனது வலையை வேகமாகப் பின்னத் தொடங்கியது. குறுகிய நேரத்தில் அதனைப் பின்னி முடித்தது. சிலந்திக்கு தான் விரைவில் பின்னி முடித்ததில் பெருமை ஏற்பட்டது. அது பட்டுப் பூச்சியைப் பார்த்து "எனது வலையைப் பார். எவ்வளவு பெரியதாகவும் அருமையானதாகவும் உள்ளது. நான் எவ்வளவு குறுகிய நேரத்தில் வலையைப் பின்னி முடித்து விட்டேன். உன்னை விட நான் சிறந்த நெசவாளி"எனக் கூறிப் பெருமை அடித்துக் கொண்டது. பட்டுப்பூச்சி எழுந்து வந்து சிலந்தி வலையைத் தொட்டுப்பார்த்தது. " நான் நீ சிறந்த நெசவாளி என்று ஒத்துக்கொள்கிறேன். ஆனால் உன் வலையை யாராவது பார்த்து விட்டால் உடனே சுத்தம் செய்துவிட வேண்டும் என்று கூறி அழித்து விடுவார்கள். ஆனால் எனது பட்டு நூல் நெசவை எல்லோருமே பத்திரமாகப் பாதுகாப்பார்கள்" என்று பட்டுப் பூச்சி கூறியது. அதனைக் கேட்ட சிலந்தி வெட்கித் தலை குனிந்தது.

**மெய்யான கலையையே அனைவரும் போற்றிக் காப்பார்கள்.**





# வழிகாட்டுவோம்





| உலக நாடுகள் | தலைநகரம் | மொழி |
|---|---|---|
| 1. கனடா | ஒட்டோவா | ஆங்கிலம், பிரெஞ் |
| 2. ஆஸ்திரேலியா | கான்பெரா | ஆங்கிலம் |
| 3. சீனா | பீஜிங் | மண்டரின் |
| 4. டென்மார்க் | கொபகேகன் டெனிஷ் | ஆங்கிலம் |
| 5. எகிப்து | கெய்ரோ | அராபிக் |
| 6. அமெரிக்கா | வொஷிங்டன் | ஆங்கிலம் |
| 7. இங்கிலாந்து | லண்டன் | ஆங்கிலம் |
| 8. தாய்லாந்து | பாங்கொக் | தாய் |
| 9. சுவிற்சர்லாந்து | சூரிஜ் | ஜேர்மன், பிரெஞ் |
| 10. சிங்கப்பூர் | சிங்கபூர் நகரம் | மலாய்,சைனீஸ், தமிழ் |
| 11. பாகிஸ்தான் | இஸ்லாமாபாத் | உருது, பஞ்சாபி, ஆங்கிலம் |
| 12. இலங்கை | கொழும்பு | தமிழ், சிங்களம், ஆங்கிலம் |
| 13. இந்தியா | புதுடில்லி | ஹிந்தி, உருது, வங்களாம், தெலுங்கு, தமிழ் |
| 14. மலேசியா | கோலாம்பூர் | மலே, சீனம், தமிழ் |
| 15. நேபாளம் | காத்மண்டு | நேபாளி |



# உலக விருதுகள்

**நோபல்பரிசு** – சுவீடன் நாட்டைச் சேர்ந்த அல்பிரட் நோபல் என்பவர் "டைனமைற்"என்னும் சேர்வையைக் கண்டு அறிந்த தன் மூலம் பெறப்பட்ட பணத்தினூடாக நோபல் மறைந்த தினமான டிசெம்பர் 10ஆம் திகதியில் வருடாந்தம் இந்தப் பரிசு வழங்கப்படுகிறது.

1910ஆம் ஆண்டில் இருந்து ரோயல் சுவீடிஸ் அக்கடமி என்னும் நிறுவனம் உலக சமாதானம் , மருத்துவம், இலக்கியம், இரசாயனவியல், பௌதீகவியல் ஆகிய துறைகளில் சிறந்து விளங்குவோருக்கு இந்தப் பரிசை வழங்கி வருகிறது.

1. உலகில் முதன் முதலில் இந்தப் பரிசைப் பெற்றவர் - வில்கெம் ரொண்ட்ரஜன்.
2. பரிசை பெற்ற முதல் தமிழர் - சேர் ஊ.ஏ.ராமன்.
3. ஆசியாவிலே முதலில் இந்தப் பரிசு பெற்றவர் - ரவீந்திரநாத் தாகூர்(இலக்கியம்)
4. குறைந்த வயதில் பெற்றவர் - லோரன்ஸ் டிராக்
5. முதன் பெண்மணி - மேரி கியூரி அம்மையார் (பௌதிகவியல்)
6. அதிக அளவில் இந்த விருதைப் பெற்ற நாடு - அமெரிக்கா (உலக சமாதான விருது)

**புக்கர் விருது** – உலகின் இலக்கிய நூல்களுக்கான இவ்விருது 1968ஆம் ஆண்டு முதல் இங்கிலாந்தில் வழங்கப்படுகிறது.

**புலிட்ஸர் விருது** - வருடாந்தம் பத்திரிகை, நாடகம், இலக்கியம் ஆகிய துறைகளில் சிறந்து விளங்குவோருக்கு ஐக்கிய அமெரிக்காவால் வழங்கப்பட்டு வருகிறது.

**கலிங்கா விருது** – அறிவியலுக்கான விருது.

**நோயல் விருது** – பெண் அரசியல்தலைவருக்கு வழங்கப்படுகிறது.

**லைவர் பரிசு / தளோபஸ் 500 விருது** – சுற்றுச் சூழல் துறைக்கு வழங்கப்படுகிறது.

# சுற்றுலாவின் பயன்கள்



சுற்றுலா செல்வது ஒரு கலை. பயன் தரவல்ல ஒரு பொழுது போக்கு கூட. நாம் கிணற்றுத் தவளைகளாக ஓரிடத்தில் மட்டும் வாழ்தல் கூடாது. பல்வேறு இடங்களுக்குச் செல்வதும் பல்வேறு மக்களைச் காண்பதும் எமது அறிவை விருத்தி செய்து கொள்ள உதவும். புதிய புதிய அனுபவங்களைப் பெற்றிடவும் முடியும். இன்று அறிவியல் வளர்ச்சியின் காரணமாக உலகம் மிகவும் சுருங்கி விட்டது. இதனால் உலக மக்கள் அனைவரதும் வாழ்க்கை முறைகளைப் பண்பாடுகளை நாம் அறிந்து கொள்ள சுற்றுலா பெரிதும் பயன்படும்.

இறைவன் படைப்பில்தான் எத்தனை எத்தனை அழகு. இயற்கைக் காட்சிகள் கண்ணையும் கருத்தையும் கவரும் தன்மையுடையன சுவையனைத்தும் ஒரே இடத்தில் இருப்பனவல்ல. பாய்ந்து செல்லும் ஆறுகள், பரந்து விரிந்த கடல்கள், மலைக்காட்சிகள், மண்ணின் வளங்கள் குகைகள் கோட்டைகள் அனைத்தையும் ஒரே இடத்தில் நாம் காண முடியாது. பல்வேறு இடங்களுக்கும் பயணம் செய்யவதன் மூலமே இவற்றை நாம் பார்த்திட முடியும். மனதில் பதித்திடவும் முடியும்.

நாகரிகமும் பண்பாடும் நாட்டுக்கு நாடு, இனத்துக்கு இனம், .மொழிக்கு மொழி மாறுபடும். வேற்றுமைகளில் ஒற்றுமை காண்பதே. மனிதப் பண்பு. வளரும் உலகில் சுற்றுலாவின் மூலமே ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்ளும் வாய்ப்பு உண்டாகும்.

உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ சுற்றுலாவை மேற்கொள்ளும்போது அது குறித்து நாம் முன்னதாகவே திட்டமிடவேண்டும். மாவட்ட தேசிய அனைத்துலக அளவுகளில் அவரவர் வாய்ப்புக்கும் வசதிக்கும் ஏற்ப சுற்றுலாவை மேற்கொள்ளலாம். சுற்றுலா மேற்கொள்ளும் பொழுது செல்லும் இடங்களில் சிறப்புகளையும் பண்பாடு முறைகளையும் நன்கு அவதானித்துக் கொள்ள வேண்டும். பண்பாட்டுச் சின்னங்களைப் பார்வையிடுவதன் மூலம் பல்வேறு பண்பாட்டு முறைகளை அறிந்திட வழி பிறக்கும்.

உலக நாடுகளில் இப்போது சுற்றுலாத் துறைக்கு இன்று முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. சுற்றுலாவின் மூலம் எமது அறிவு விருத்தியடைகிறது. உள்ளம் மகிழ்ச்சி அடைகிறது. "யாதும் ஊரே; யாவரும் கேளிர்" என்னும் உன்னத நிலை உருவாகிறது.

## ஆங்கிலத்தில்...

கள் ஆங்கிலத்தில் சித்தியடையவில்லை.

49 சதவீதமானவர்கள் ஆங்கில பாடத்தில் சித்தியடையவில்லை என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. ஒன்றரை இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் சாதாரண சித்தியைப் பெற்றுள்ளனர். 31 ஆயிரத்து 619 பேர் அதிசிறப்புச் சித்தியைப் பெற்றுள்ளனர்.

ஏனைய பாடங்களுடன் ஒப்பிடுகையில் ஆங்கில பாடத்துக்கான அடைவு மட்டம் மிகக் குறைவாக உள்ளது என்று பரீட்சைகள் திணைக்களம் சுட்டிக் காட்டியுள்ளது. (ற-114)

## ரணில்...

பரிசாக வடக்கில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலுள்ள 680 ஏக்கர் காணி விடுவிக்கப்படவுள்ளது.

இவ்வாறு சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தலைவரும், முன்னாள் அயலுறவுத் துறை அமைச்சருமான ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார் .

பத்தரமுல்லையிலுள்ள அந்தக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் எதிர்க்கட்சிக்குரிய பொறுப்புகளை நிறைவேற்றுபவர் அல்ல. அவர் அரசின் பங்காளராகவே செயற்பட்டு வருகிறார். முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையிலான அணியிலுள்ள உறுப்பினர் ஒருவரை அந்தப் பதவிக்கு நியமிக்குமாறு அழுத்தம் கொடுக்கவுள்ளோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் அனைவரும் ரணிலுக்கு ஆதரவாக வாக்களித்தனர். அதற்காக அந்தக் கட்சிக்கு எழுத்து மூலமான பத்து வாக்குறுதிகள் வழங்கப்பட்டுள்ளன: புதுவருடப் பரிசாக வடக்கில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலுள்ள 680 ஏக்கர் காணி விடுவிக்கப்படவுள்ளது. வாக்குறுதிகளில் மற்றுமொன்றாக வடக்கு மற்றும் கிழக்கு மாவட்ட செயலர்களாக தமிழர்களே நியமிக்கப்படவுள்ளனர். மேலும் புதிய அரசமைப்பை விரைவில் முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் வாக்ககுறுதியளிக்கப்பட்டுள்ளது. அதனை மேற்கொள்வதற்கு நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் அவசியமாகவுள்ளது. நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் பின்னர் அந்தப் பலம் இல்லாது போயுள்ளது - என்றார். (ற-5,61)

## வலி. வடக்குக்...

தமிழ், சிங்களப் புத்தாண்டுப் பரிசாக வலி. வடக்கில் காணி விடுவிக்கப்படும் என்று இராணுவத் தளபதி மகேஸ் சேனநாயக்க, நல்லிணக்கபுரத்தில் நடைபெற்ற வீடு கையளிப்பு நிகழ்வில் தெரிவித்திருந்தார். வறுதலைவிளானில் வீடு கையளிப்பு நிகழ்வு கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. மீள்குடியேற்ற அமைச்சின் செயலர் பொ.சுரேஷ் பங்கேற்றிருந்தார். எதிர்வரும் 16ஆம் திகதி வலி.வடக்கில் 650 ஏக்கர் காணி விடுவிக்கப்படும் என்று அறிவித்திருந்தார். அதேவேளை, மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் கொழும்பு ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியில், வலி.வடக்கில் 16ஆம் திகதி 500 ஏக்கரே விடுவிக்கப்படும் என்று தெரிவித்திருந்தார். அதனால் காணி விடுவிப்புத் தொடர்பில் குழப்பம் ஏற்பட்டிருந்தது.

இந்த நிலையில், 16ஆம் திகதி விடுவிக்கப் படும் என்று கூறப்பட்ட காணிகளை 13ஆம் திகதி விடுவிப்பதற்கு பாதுகாப்புத் தரப்பினர் இணங்கியுள்ளனர்.

வலி.வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட தென்மயிலை, தையிட்டி கிழக்கு, மயிலிட்டி வடக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 680 ஏக்கர் நிலப் பரப்பு விடுவிக்கப்படவுள்ளது. இந்த நிகழ்வில் இராணுவத் தளபதி கலந்து கொள்ளவுள்ளார். (ற-5)

## கரைச்சியும்...

கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் உப தவிசாளர் தெரிவுக்கான முதல் அமர்வு கரைச்சி பிரதேச சபையின் மாநாட்டு மண்டபத்தில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

தவிசாளர் தெரிவு முதலில் இடம்பெற்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அருணாசலம் வேழமாலிகிதன் முன்மொழியப்பட்டார். சுயேச்சைக் குழுவின் உறுப்பினர் ஐ. மோகன்ராஜ், தவிசாளர் பதவிக்கு வேழமாலிகிதன் தகுதியற்றவர் என்று குறிப்பிட்டார். தமது சுயேச்சைக் குழுவின் சார்பில் த.ரஜனிகாந்தின் பெயரை முன்மொழிந்தார்.

வாக்கெடுப்பு இரகசியமாகவா? அல்லது பகிரங்கமாகவா நடத்தப்பட வேண்டும் என்று வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. பகிரங்க வாக்கெடுப்பை 19 பேரும், இரகசிய வாக்கெடுப்பை 13 பேரும் கோரினர். இறுதியில் பகிரங்க வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

கூட்டமைப்பின் சார்பில் நிறுத்தப்பட்டவருக்கு 19 பேர் வாக்களித்தனர். கூட்டமைப்பு உறுப்பினர்கள் 17பேரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இரண்டு உறுப்பினர்களில் ஒருவரும், ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் ஒருவரும் ஆதரவாக வாக்களித்தனர். சுயேச்சைக் குழு சார்பில் நிறுத்தப்பட்டவருக்கு 13 பேர் வாக்களித்தனர். சுயேச்சைக் குழுவின் 11பேரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஒருவரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மற்றைய உறுப்பினரும் ஆதரவாக வாக்களித்தனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 2 உறுப்பினர்களும், ஈ.பி.டி.பியின் ஒரு உறுப்பினரும் இணைந்து நடுநிலை வகித்தனர். ஆறு மேலதிக வாக்குகளால் வேழமாலிகிதன் தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார். இதன்போது பார்வையாளர் அரங்கிலிருந்த கூட்டமைப்பு ஆதரவாளர்கள் கரகோசம் எழுப்பி ஆர்ப்பரித்தனர்.

உபதவிசாளர் தெரிவின்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் சி.தவபாலன் போட்டியிட்டார். சுயேச்சைக் குழுவின் சார்பில் த.செல்வராணி போட்டியிட்டார். கூட்டமைப்பின் உறுப்பினர்கள் 17பேரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இரண்டு உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு உறுப்பினருமாக 20 பேர் ஆதரவாக வாக்களித்தனர். சுயேச்சைக் குழுவுக்கு 12பேர் வாக்களித்தனர். கூட்டமைப்பின் சார்பில் உபதவிசாளர் பதவிக்கு நிறுத்தப்பட்ட சி.தவபலான் வெற்றிபெற்றார். (ற-5,35)

## விட்டுக்...

தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான புரிந்துணர்வை வலுப்படுத்தும் வகையிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக், முன்னாள் கிழக்கு மாகாண சபையின் தவிசாளர் சட்டத்தரணி பாயிஸ், முன்னாள் கிழக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சர் சி.தண்டாயுதபாணி, எதிர்க்கட்சித் தலைவரின் திருகோணமலை மாவட்ட இணைப்பாளர் குகதாசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சந்திப்பின் பின்னர் அமைச்சர் ஹக்கீம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தார்.

"குச்சவெளி பிரதேச சபையில் ஆட்சியமைப்பதில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது ஆதரவை வழங்காதபோதும் அந்தப் பிரதேச சபையின் ஆட்சியை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனதாக்கிக் கொண்டது. எஞ்சியுள்ள சபைகளில் எங்கெல்லாம் இணைந்து ஆட்சியமைக்க முடியுமோ அந்தப் பிரதேசங்களில் பரஸ்பர விட்டுக் கொடுப்புடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இணைந்து செயற்பட உடன்பட்டுள்ளோம்.

இந்தத் தேர்தல் முறையில் உள்ள குறைபாட்டால் பிரதேச சபைகளின் ஆட்சியை அமைப்பதிலும் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. சில இடங்களில் எமக்குள் உடன்பாட்டுக்கு வரமுடியாத முரண்பாடுகள் தோன்றியிருந்தன. இருந்தபோதும் தலைமைத்துவ மட்டத்தில் இப்போது நாங்கள் புரிந்துணர்வுடனான உடன்பாட்டுக்கு வந்துள்ளோம்.

மீதமுள்ள உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பதில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஒருமித்த நிலைப்பாட்டோடு செயற்படுவது தொடர்பில் இணங்கியுள்ளோம்.

சபை நடவடிக்கைகளில் இணைந்து செயற்படுவதோடு, பதவிகளையும் நியாயமாகப் பகிர்ந்து கொள்ளும் அடிப்படையிலும் பொதுவான உடன்பாட்டினை நாங்கள் கொண்டுள்ளோம். இயன்றவரை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸோடு விட்டுக்கொடுப்பு டனும், உச்சக்கட்ட புரிந்துணர்வுடனும் இணைந்து பணியாற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராக இருப்பதையிட்டு எங்கள் திருப்தியை நாங்கள் தெரிவித்தோம்.மூதூர், தம்பலகாமம், கிண்ணியா உட்பட பல சபைகளில் நாங்கள் இணைந்து செயற்படுவது தொடர்பில் நிலையான உடன்பாட்டுக்கு நாம் வந்துள்ளோம்." என்று ஹக்கீம் தெரிவித்தார். (ற-5)

## வடக்கு...

கொள்வார் என்று தெரியவருகின்றது.

தமிழகத்தில் பல்வேறு அரசியல் சந்திப்புக்களிலும் அவர் ஈடுபடக் கூடும் என்று அறியமுடிகின்றது.

வடக்கு மாகாண சபையின் அடுத்த முதலமைச்சர் யார் என்ற கேள்வி எழுந்துள்ள நிலையில், முதலமைச்சர் விக்னேஸ்வரன் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளமை குறிப்பி டத்தக்கது. (ற-5,31)

## கரைதுறைப்பற்று...

மொழிந்தது. பெரும்பான்மையானவர்கள் பகிரங்க வாக்கெடுக்குப்பு விருப்பம் தெரிவித்ததால் பகிரங்க வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

கனகையா தவராசா 17 வாக்குகளையும், ஜோசப் அமலதாஸ் 3 வாக்குகளையும் பெற்றனர். ஈ.பி.டி.பி., சிறிலங்கா சுதந்திரக் கட்சி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐ.தே.க, சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி என்பன கூட்டமைப்புக்கு ஆதரவு வழங்கின. தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்பன நடுநிலமை வகித்தன.

உப தவிசாளர் தெரிவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இ.ரவீந்திரனை முன்மொழிந்தது. வேறு எவரும் முன்மொழியப்படாத தால் ஏகமனதாக இ.ரவீந்திரன் தெரிவினார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், சி. சிவமோகன், வடக்கு மாகாணசபை விவசாய அமைச்சர் சிவனேசன், உறுப்பினர்களான து.ரவிகரன், எம்.கே சிவாஜிலிங்கம், புவனேஸ்வரன் ஆகியோர் சபை அமர்வுகளைப் பார்வையிட்டனர்.

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் 24 ஆசனங்களில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 9 ஆசனங்களையும், ஐக்கிய தேசியக் கட்சியும், சுயேச்சைக் குழுவும் தலா 3 ஆசனங்களையும், ஈ.பி.டி.பி., தமிழர் விடுதலைக் கூட்டணி, சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி தலா 2 ஆசனங்களையும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், சிறிலங்கா சுதந்திரக் கட்சி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்பன தலா ஓர் ஆசனத்தையும் கொண்டுள்ளன. (ற-21)

## வெற்றியை...

உடன்பாடு இல்லை என்று தெரிவித்து சபை நிறைவுற சில நிமிடங்கள் இருந்த போது சபையில் இருந்து வெளியேறினர்.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளர், உப தவிசாளர் தேர்வுகளுக்காக சபை நேற்றுக் கூடியது. சபையில் தவிசாளர் உப தவிசாளர்களுக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு, சுயேச்சைக் குழு என்பன போட்டியிட்ன. வாக்கெடுப்புகள் இடம்பெற்றன. இரண்டு போட்டியிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிறுத்திய போட்டியாளர்களே வெற்றிபெற்றனர். உபதவிசாளராக வெற்றி பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் போட்டியாளரை அறிக்கும் போது அவர்களுடைய தெரிவில் தமக்கு உடன்பாடு இல்லை என்று தெரிவித்த சுயேச்சைக் குழுவினர் சபையில் இருந்து வெளியேறினர். அதை அங்கிருந்தவர்கள் கடுமையாக விமர்சித்திருந்தனர். சபை நாகரிகமற்ற செயற்பாடே இது என்று அவர்கள் விசனமடைந்தனர். (ற-21)

## பெருந்தொகை...

புலனாய்வுத்துறையினருக்குக் கிடைத்த தகவலை அடுத்து தனியார் ஒருவரின் காணியில் அடுத்து தனியார் ஒருவரின் காணியில் இருந்து இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டன.

தகவல் கிடைத்ததை அடுத்து வவுனியா, சிறப்பு அதிரடிப் படை அதிகாரி எஸ்.பி.டபிள்யூ. ஜே.எஸ்.விஜயசிங்கவின் பணிப்புக்கு அமைய முல்லைத்தீவுப் பொலிஸார் வெடிபொருள்களை மீட்பதற்கான உத்தரவை முல்லைத்தீவு நீதிமன்றில் பெற்றுக் கொண்டனர். ஆயுதங்களை மீட்கும் நடவடிக்கை நேற்று நண்பகல் ஆரம்பமானது. மாவட்ட பதில் நீதிபதி என். சுதர்சன், முல்லைத்தீவு பொலிஸ் பொறுப்பதிகாரி, இராணுவ அதிகாரிகள் முன்னிலையில் காணியின் ஒரு பகுதி அகழப்பட்டது.

றபர் பரல் ஒன்றுக்குள் பாதுகாக்கப்பட்டு புதைக்கப்பட்டிருந்த பெருந்தொகையான வெடிபொருள்களும், ஆயுதங்களும் வெளியே எடுக்கப்பட்டன.

50 எம்.எம். ரவைகள் ஆயிரத்து 710, மைக்றோ பிஸ்ரல் ரவைகள் 3 ஆயிரம், வெடி குண்டுகள் 34, விடுதலைப் புலிகளின் தயாரிப்பான தமிழன் குண்டுகள் 22, அருண் குண்டுகள் 34, ஆர்.பீ.ஜீ. எறிகணைகள் 07, கனரக ரவைகள் 49, டொங்கான் 40 எம்.எம் குண்டுகள் 41, மிதிவெடி வெடிப்பிகள் 48, ஜி.பி.எம்.ஜி. ரவைகள் 2 ஆயிரம், 9 எம்.எம். கைத்துப்பாக்கி ரவைகள் ஆயிரத்து 400, வெடிப்பிகள் 6, கிளைமோர் 4, மிதிவெடிகள் 10, சி4 வெடிமருந்து 48.5 கிலோ, புலிகளின் சீருடை 1, வயர் 10 மீற்றர் என்பன மீட்கப்பட்டன. மீட்கப்பட்டவற்றின் விவரங்கள் பதில் நீதிவானிடம் ஒப்படைக்கப்பட்டன. மீட்கப்பட்ட ஆயுதங்களை அழிக்குமாறு பதில் நீதிவான் உத்தரவிட்டார். வட்டுவாகலில் பாதுகாப்பான கடற்கரைப் பகுதியில் நேற்று மாலை அவை அழிக்கப்பட்டன என்று சிறப்பு அதிரடிப் படையினர் தெரிவித்தனர். (ற-21,ரி3)

## பொருத்தமான...

சபைத் தேர்தலில் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட மாட்டார் என்பதை அந்தக் கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருந்தார்.

கூட்டமைப்பின் சார்பில் அடுத்த முதலமைச்சர் யார் என்பது தொடர்பில், கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் செய்தியாளர்களால் கேள்வி எழுப்பப்பட்டது.

"முதலமைச்சர் வேட்பாளர் தொடர்பில் உத்தியோகபூர்வ முடிவு எதனையும் இப்போது எடுக்கவில்லை. எனினும் பொறுத்த நேரத்தில், பொருத்தமான வேட்பாளரையே நாம் களமிறக்குவோம்" என்று இரா.சம்பந்தன் பதிலளித்தார். (ற-5)

## 6 கிலோ...

டிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ற-21)

## எதிரணியில்...

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக மகிந்த அணியால் முன்வைக்கப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு சுதந்திரக் கட்சியின் ஆறு அமைச்சர்கள் உட்பட 16 பேர் ஆதரவாக வாக்களித்தனர்.

தீர்மானத்தை ஆதரித்த சு.க. உறுப்பினர்கள் கூட்டரசிலிருந்து வெளியேற வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியதுடன், அந்தக் கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களால் சு.கவின் அமைச்சர்களுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் முன் வைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவுக் கும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களுக்கும் இடையே நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு கொழும்பில் சந்திப்பொன்று நடைபெற்றது.

பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த கூட்டரசிலுள்ள சுதந்திரக் கட்சி உறுப்பினர்களை வெளியேற்றவேண்டும் என்ற ஐ.தே.கவின் முடிவு அரச தலைவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக நாளைமறுதினம் (நேற்று) நடைபெறும் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம் ஒன்று எடுக்கப்படும் என அரச தலைவரால் பதிலளிக்கப்பட்டுள்ளது.


சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் ஜனாதிபதியின் இல்லத்தில் நேற்றிரவு 7 மணிக்குக் கூடியது. நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த உறுப்பினர்களும் மத்திய குழு கூட்டத்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் பங்கேற்பதற்கு முன்னர் தலைமை அமைச்சருக்கு எதிரான பிரேரணைக்கு ஆதரவளித்த சு.க. உறுப்பினர்கள் இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தனவின் இல்லத்தில் கூடி பேச்சு நடத்தியுள்ளனர்.

அமைச்சுப் பதவிகளைத் துறந்து கூட்டரசிலிருந்து வெளியேறவேண்டும், பொது எதிரணியான மகிந்த அணியுடன் இணையாமல் எதிரணியில் மட்டும் இருக்கவேண்டும், எதிரணியில் இருந்தாலும் அரச தலைவருக்கு ஆதரவளிக்க வேண்டும், சுதந்திரக் கட்சியை விட்டு வெளியேறக்கூடாது போன்ற தீர்மானங்கள் இந்தச் சந்திப்பில் ஏகமனதாக எடுக்கப்பட்டுள்ளன.

இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை மத்திய செயற்குழுக் கூட்டத்தில் முன்வைத்துள்ளனர். இது பற்றி விரிவாக ஆராயப்பட்டுள்ளது. எனினும் இந்தச் செய்தி நேற்றிரவு அச்சுக்குச் செல்லும் வரை சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவில் இறுதியாக எடுக்கப்பட்ட உத்தியோகபூர்வ முடிவுகள் எதுவும் வெளியாகவில்லை.

எனினும், சுதந்திரக் கட்சியின் ஒரு குழு கூட்டரசில் தொடர்ந்தும் அங்கம் வகிக்கும் என்றும், தலைமை அமைச்சரை எதிர்த்து வாக்களித்தவர்கள் மகிந்த அணியுடன் (பொது எதிரணி) எதிரணியில் மட்டும் அமர்வார்கள் என்றும் உத்தியோகபூர்வமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)




# பங்குமுதலீடு, முயற்சியாண்மை இடையேயான பன்முகத் தன்மை

## பொருண்மிய விருத்தியின் தனித்துவ அளவீட்டுக் கருவி

பாவலன்

பங்குமுதலீட்டுக்கும், முயற்சியாண்மைக்கும் இடையேயான ஒற்றுமைகள் சிலவற்றை அறிந்துகொண்டுள்ளோம். உண்மையில் இங்கு, பங்குமுதலீடுகள் முயற்சியாண்மையின் ஓர் அங்கமாக அமைவுபெறுகின்ற போதிலும், ஒப்பீட்டளவில் சில தனித்துவமான சிறப்புக்களை அல்லது வசதிகளை பங்குமுதலீடு தன்னகத்தே கொண்டுள்ளது. அவை குறித்தும் நோக்குவோம்.

**•குறைந்த மூலதனப் பயன்பாடு**

பங்கு முதலீட்டை நாம் மிகக் குறைந்த மூலதனத்துடன், அதாவது ஒரு சில ஆயிரம் ரூபாக்களுடன் ஆரம்பிக்க முடியும். ஆனால் முயற்சியாண்மை என்பது அவ்வாறில்லை. ஆரம்ப மூலதனமாக அதிக தொகை, குறிப்பாக ஒன்று அல்லது இரண்டு இலட்சங்கள் தேவைப்படுவதுடன் தொடர்ச்சியாக மூலதனத்தை ஈட்ட வேண்டிய தேவை ஏற்படலாம்.

**•பன்முகமான முதலீடு**

எமக்கு வசதியிருப்பின், முதலீடுகளை குறித்த வியாபாரத் திட்டங்களில் மட்டுமன்றி, பல்வேறுபட்ட வியாபார முயற்சிகளில் பன்முகத் தன்மையோடு முதலீடு செய்யும் வசதி பங்குமுதலீடுகளில் காணப்படுகிறது. இங்கு எல்லாத் துறைகளும் ஒரே நேரத்தில் சரிவைச் சந்திப்பதற்கான வாய்ப்புக் குறைவு என்றே கூறலாம். எனவே முதலீடுகளைப் பன்முகப்படுத்துவதன் ஊடே எமது முதலீட்டுக்கான இடர்நேர்வுகளைக் குறைத்துக் கொள்ள முடியும். முயற்சியாண்மையில் குறித்த நேரத்தில் ஓர் குறித்த வியாபாரத்திட்டத்தை மையப்படுத்தியே முதலீடு செய்ய முடியும் என்பது நோக்குதற்குரியது.

**•தவறுகளை நிவர்த்தி செய்தல்**

துரதிஷ்டவசமாக தவறான பங்குத்தெரிவு எமது முதலீட்டுத் தேக்கத்தில் இடம்பெற்றிருப்பின், அதனைத் தவிர்த்திருப்பதற்கான பல சந்தர்ப்பங்களை பங்குமுதலீடு கொண்டுள்ளது. இங்கு பங்குகளை விற்பனை செய்து கிடைக்கும் நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். ஆனால் முயற்சியாண்மையில் வியாபார முயற்சி வெற்றியடையவில்லையெனில், ஈடுபடுத்திய மூலதனத்தை மீளப்பெறு வது என்பது மிகக் கடினம். மேலும் புதிய யோசனைகளை உள்வாங்கும் போது, நட்டம் மட்டுமன்றி மேலதிக மூலதனத் தேவையையும் அது வேண்டி நிற்கும்.




**•பண மதிப்பை கைமாற்றம் செய்து கொள்ளலாம்**

இலங்கை பங்குச்சந்தை ஊடாக பங்குமுதலீட்டைத் தேவைக்கு ஏற்ப இலகுவாக சந்தை விலையில் கைமாற்றம் செய்துகொள்ளவும், பணமாக மாற்றிகொள்ளவும் முடிகிறது. அதாவது பங்குகளை விற்பனை செய்து பணமாகமாற்றிக் கொள்ள முடியும். இங்கு சந்தை விலை என்பது, பங்குச்சந்தையில் சுயாதீனமாக கொள்வனவாளர் மற்றும் விற்பனையாளர்களினால் தீர்மானிக்கப்படும் விலையைக் குறிக்கிறது. நிறுவனங்களின் பெறுபேறு மற்றும் முதலீட்டாளர்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப இது மாற்றமடையும். முயற்சியாண்மை யைப் பொறுத்தவரையில் சொத்துக்களை குறித்த காலவரைக்குள் விற்றுத்தீர்த்தல் என்பது இலகுவான காரியமல்ல.

**•மேலதிக வருமான ஈட்டத்துக்கான இலகு தெரிவு முறை**

வருமானத்தைப் பெருக்குவதற்கான துணைமூலங்களில் எமது அடிப்படை வருமான மூலத்துக்கு எந்தவித இடையூறும் இன்றி எமது இலட்சியத்தைத் தொடர்வதற்கு மிகப்பொருத்தமான துணைமூலமாக பங்குமுதலீடு அமைவுபெறுகிறது. அதாவது, இணையத்தின் உதவியுடன் எங்கிருந்தும் 'சிமாட் டிவைஸ்' ஊடாக முதலீட்டை முகாமைத்துவம் செய்து கொள்ள முடிகிறது. ஆனால் முயற்சி யாண்மையைப் பொறுத்தவரையில் அங்கு இவ்வாறான சுதந்தி ரத்தை அனுபவித்தல் என்பது முடியாத காரியம். அரிது என்றே சொல்லிவிட முடியும். கண்ணும் கருத்துமாய் மிகுந்த அவதானத்தோடு வியாபார முயற்சியை மேற்கொள்வதன் மூலமே அதனைச் சரியான பாதையில் வழிநடத்திச் செல்ல முடியும்.

இந்தவிதமாக பங்குமுதலீட்டுக்கும் முயற்சியாண்மைக்கும் இடையேயான சிறப்புக்கள் மற்றும் ஒற்றுமை வேற்றுமைகள் தொடர்பில் கண்டுகொண்டோம். ஆனாலும் உலகப் பொருளாதாரத்தின் முது கெலும்பாக முயற்சியாண்மை அமைகிறது என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. பொருளாதார வளர்ச்சிக்கு உந்துசக்தியான முயற்சி யாண்மை கொண்டு உருவாக்கப்பட்ட சிறிய நடுத்தரநிறுவனங்களின் பங்களிப்பு காத்திரமானது.

முயற்சியாண்மை ஒருவரை உணர்ச்சிகரமான தொழிலதிபராக மாற்றுகிறது.

வருமானத்தைப் பெருக்குவதற்கான துணைமூலங்களில் எமது அடிப்படை வருமான மூலத்துக்கு எந்தவித இடையூறும் இன்றி எமது இலட்சியத்தைத் தொடர்வதற்கு மிகப் பொருத்தமான துணைமூலமாக பங்குமுதலீடு அமைவுபெறு கிறது. அதாவது, இணையத்தின் உதவியுடன் எங்கிருந்தும் 'சிமாட் டிவைஸ்' ஊடாக முதலீட்டை முகாமைத்துவம் செய்து கொள்ள முடிகிறது. ஆனால் முயற்சி யாண்மையைப் பொறுத்தவரையில் அங்கு இவ்வாறான சுதந்தி ரத்தை அனுபவித்தல் என்பது முடியாத காரியம். அரிது என்றே சொல்லிவிட முடியும். கண்ணும் கருத்துமாய் மிகுந்த அவதானத்தோடு வியாபார முயற்சியை மேற்கொள்வதன் மூலமே அதனைத் சரியான பாதையில் வழிநடத்திச் செல்ல முடியும்.

**•சுயசிந்தனை (idea) வெற்றி அடைவதற்குரிய ஆரம்பம்**

இங்கு, முயற்சியாளன் தனது சுயசிந்தனைக்கு செயல்வடிவம் கொடுக்கும் மூலமாக அமைவது முயற்சியாண்மை மட்டுமே. முயற்சியாளன் சிந்தனைக்குச் செயல்வடிவம் கொடுக்கக்கூடிய புதிய பொருள்களை உற்பத்தி செய்து தனித்துவத்தைப் பேணமுடியும். பங்குமுதலீட்டில் தெரிவுக்கு மட்டுமே இடமுண்டு.

**•வியாபார முயற்சியின் உரிமைத்துவம்**

வியாபாரம் ஆரம்பித்த நாள்முதல் உங்கள் பெயரிலான முயற்சியாக அமைந்திருக்கும். நிறுவனத்தின் உரிமையாளர் அந்த முயற்சி யாண்மையின் சிந்தனையாளராக அமைவு பெறுவார்.

பங்குமுதலீட்டைப் பொறுத்தமட்டில் ஆரம்பநிலையில் முதலீட்டாளன் சிறுபான்மை யினராக (Minority shareholders) மட்டுமே இருக்க முடியும். முதலீட்டுப் பருமனுக்கு ஏற்ப சட்டத்தினால் உரிமைகள் மட்டுப்படுத்தப்படும். ஆனால் நீண்டகாலத்தில் இது மாறுபடுவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

**•வியாபார முயற்சியின் பிடிமானம்**

முயற்சியாண்மையைப் பொறுத்தவரையில் உரிமையாளருக்கும் நிறுவனத்துக்கும் அல்லது வியாபார முயற்சிக்கும் மிக வலுவான் பிடிமானம் காணப்படும். அதாவது, ஒரு தந்தைக்கும் மகனுக்கும் இடையில் இருக்கின்ற பாசப்பிணைப்புக்கு இணையானதாக இது அமைந்திருக்கும். பங்குமுதலீட்டில் இவ்வாறான உணர்வுபூர்வமான பிணைப்புக்கள் ஏற்படுவதற்குரிய வாய்ப்புக்கள் அரிது. பிணைப்புக்கள் சட்டங்களினால் வரையறுக்கப்பட்டுள்ளது.

ஆக, துணிகரமான முயற்சியாளன் ஒருவனுக்கு பங்குமுதலீடு மற்றும் முயற்சியாண்மை ஆகிய இவ்விரண்டிலும் உள்ள நன்மைகளும் தீமைகளும் வேறுபடலாம். இவ்விரு முயற்சிகளும் அடிப்படையில் இடர்நேர்வுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ளன.

அவர்களின் முதலீட்டுப் பயணம் இத்தகு இடர்நேர்வை வெற்றி கொள்வதிலேயே தங்கியுள்ளது. பங்குமுதலீட்டு முயற்சியை நோக்கின் கூழாங்கற்களில் இருந்து இரத்தினக் கற்களை வேறுபடுத்தும் முயற்சியாக அதனை வரைவிலக் கணப்படுத்தலாம். சிலர் இதனை ஒரு சவாலாகக் கொண்டு சொத்துக்களை இலகுவாகப் பெருக்கிக் கொள்கின்றனர். இதனை நாம் ஒரு தொழிலாக அன்றி ஆர்வத்தின் வெளிப்பாடாக (passion) கொண்டு,நிதானமாக எமது தனிப்பட்ட நிதித்திட்ட மிடலுக்கு அமைவாக முதலீட்டுப் பயணத்தை ஆரம்பிக்க வேண்டும். இந்தச் செயல்நிலையூடே வாழ்விலும் வாழ்வாதார நிலையிலும் உயர்வு பெறலாம்.

Galaxy Star
வெற்றி வாரம் 248 / திகதி 08.04.2018
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
04 11 13 44 57
அடுத்த ஞாயிற்றுக்கிழமை சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 2,000,000/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB space LOT space GS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு: 1919

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்:3018 திகதி:09.04.2018 திங்கட்கிழமை
நீலம்
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து / போனஸ் இலக்கம் / அடுத்த புதன்கிழமைக்கான ஜக்பொட்
24 38 59 74 Y 37
38,300,635/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB space LOT space AK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 222
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2018.04.09
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 56,560,410/-
வெற்றி இலக்கங்கள்
11 40 41 55 G
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB space LOT space AK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

# தன்னம்பிக்கை மிக அவசியம்



வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என நினைப்பவர் களுக்கு இலட்சியமும், அதை அடைய தன்னம்பிக்கையும் அவசியம். தொடர்ந்து முயற்சியும், பயிற்சியும் செய்து கொண்டே இருந்தால் இலட்சியத்தை அடைய முடியும். தலைவராவது எப்படி என்று காந்திக்கோ, இராணுவம் அமைப்பது எப்படி என்று நேதாஜிக்கோ யாரும் கற்றுக் கொடுக்கவில்லை. அவர்கள் தளராத தன்னம்பிக்கையுடன் சுதந்திரத்துக்காக உழைத்தவர்கள்.

அமெரிக்க அதிபராக இருந்த ஜோன் எப் கென்னடி ஒரு முறை தன்னைக் காணவந்த பார்வையாளர்களில் ஒரு வரான மாணவன் ஒருவனின் கன்னத்தைத் தட்டி உன்னுடைய எதிர்கால இலட்சியம் என்னவென்று கேட்டார். அந்த மாணவன் தயக்கமின்றி. "இன்று நீங்கள் இருக்கும் இடத்தில் நாளை நான் இருக்க வேண்டும் என்பதுதான் என் லட்சியம்" என்றான். அதே போல பிற்காலத்தில் அந்த இடத்தைப் பிடித்து அமெரிக்க அதிபராகி அசத்தினான். அது வேறுயாருமில்லை, பில் கிளிங்டன் தான்.

வாழ்க்கையில் உண்டாகும் அவமதிப்பு, அலட்சியம், அவமானம் இவையெல்லாம் எம்முடைய வெற்றிக்கான எரிசக்திகள் என்று எடுத்துக் கொண்டால் எம்மை தாழ்த்த நினைப்பவரும் ஒரு நாள் எம்மிடையே நட்புக் கொண்டு எம்முடைய வெற்றிக் கொண்டாட்டத்தில் பங்கேற்பார்கள்.

மனிதர்கள் மூன்று வகையாகப் பிரிக்கப்படுகின்றனர். எல்லோரும் செய்வதையே தானும் செய்து செத்துப் போகிறவன், யாரும் செய்யாததை தான் செய்து வாழ்ந்து காட்டுகிறவன், எவரும் செய்ய முடியாததைச் செய்து சாவடை பவன் என்பன அவை. இவற்றில் நாம் எந்த இடத்தில் இருக்கிறோம் என்பதை சற்று சிந்தித்து பார்த்து எமது செயற் பாடுகளை மாற்றிக்கொள்ள வேண்டும்.

மனிதர்களின் வாழ்வில் வெற்றி, தோல்வி என்பது ஏதோ ஓரிரு சம்பவங்களை மட்டும் வைத்து முடிவெடுக்கப்படு வதில்லை. அது எம்முடைய முழுமையான வாழ்க்கையை சார்ந்தது. தற்போது, தன்னம்பிக்கை, சுய முன்னேற்றம் பற்றி எமது இளைஞர்களிடம் நல்ல விழிப்புணர்வு ஏற்பட்டு வருகிறது. இது எமக்கும், நாட்டுக்கும் நல்லது.

## மரண அறிவித்தல்கள்

### பேசி மரியாம்பிள்ளை



தோற்றம் 26.01.1937 மறைவு 07.04.2018

சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட பேசி மரியாம்பிள்ளை கடந்த (07.04.2018) சனிக்கிழமை லண்டனில் காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை - இராசமணி தம்பதிகளின் அன்பு மகனும் வாலாம்பிகை பேசியின் அன்புக் கணவரும் வதனி, மார்க் ஆகியோரின் பாசமிகு தந்தையும் பற்றிக், ஜொய்ஸ், அருள்தந்தை றெஜி றாஜேஸ்வரன், யோகேஸ்வரன், அமிர்தினி, காலஞ்சென்ற அருள்லேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் சறோஜினி, சாந்தம், கிறிஸ்றிராஜ், மாலதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

St. John the Baptist Church
Hospital Road, Chundukuli, Jaffna.

தகவல்: அருள்தந்தை ம.றெஜி றாஜேஸ்வரன்

### முருகையா ஸ்ரீஸ்கந்தராஜா



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட முருகையா ஸ்ரீஸ்கந்தராஜா நேற்று (09.04.2018) திங்கட்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற முருகையா - பராசக்தி தம்பதிகளின் புதல்வரும் கோப்பாய் வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற சண்முகம் சிவக்கொழுந்து தம்பதிகளின் மருமகனும் யோகாம்பிகை (ராணி) யின் அன்புக் கணவரும் பிருந்தாபன் (HSBC Rajagiriya), வருண் (மூன்றாம் ஆண்டு USJP மருத்துவ பீடம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் திவ்யா (Doctor Panadura Hospital) வின் அன்பு மாமனும் ரஞ்சனி, அம்பிகா (வவுனியா), ஸ்ரீராஜ்குமார் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் வீரகுல சிங்கம், விஜயகுமார், சௌந்தி (லண்டன்), புவனேந்திரன் (ஆஸ்திரேலியா), கமலா சஷ்டிவரதன் (சவுத் ஆபிரிக்கா), காலஞ்சென்றவர்களான மகேந்திரன் (கனடா) கணேஸ் (கோப்பாய்), குலேந்திரன் (கோப்பாய்) மற்றும் யசோ சுதர்ஷன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக இன்று (10.04.2018) செவ்வாய்க்கிழமை மு.ப. 9.00 மணிமுதல் பி.ப. 5.00 மணிவரை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நாளை (11.04.2018) புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைக்காக கல்கிசை பொதுமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 674 1958, 0114012817
076 667 4322

தகவல்: மனைவி, பிள்ளைகள்

## இது புதுசு



பெண்களுக்கான கைக்கடிகார வகைகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை 950 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

## கண்டிக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர் என்று பொலிஸ் பேச்சாளர் குறிப்பிட்டார். (ந-5)

## தவறுகளைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம். ஏ. சுமந்திரன்.

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு, செம்பியன்பற்று வடக்கில் உள்ள பொது மண்டபத்தில் ஓய்வுபெற்ற தபால் அதிபர் றோ.மதுரநாயகம் தலைமை நடைபெற்ற மக்கள் சந்திப்பிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்துள்ளதாவது:

தற்போது வாக்களிக்கும் வீதம் எப்படியாக மாறியுள்ளது என்பது குறித்து நாங்களும் இப்போது சிந்தித்து வருகின்றோம். இது மக்களுடைய நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறதா? அல்லது இது உள்ளூராட்சிச் சபை என்ற காரணத்தாலே தேசிய நிலைப்பாடுகளை விட்டுவிட்டு மக்கள் தங்களது பிரதேச அபிவிருத்தியை மட்டும் நோக்கி வாக்களித்துள்ளார்களா? என்பது குறித்து நாங்கள் ஆராய்ந்து கொண்டிருக்கின்றோம்.

வாக்களிக்கும் முறையிலே ஏற்பட்டுள்ள மாற்றத்தின் காரணமாக தேசிய அளவிலே நாங்கள் அரசுடன் பேரம் பேசுகின்ற சக்தி குறைகின்றதா என்ற கேள்வி எழுகின்றது. மக்களின் ஜனநாயக விடயத்தில் எந்தவிதமான மாற்றமும் கிடையாது. 1956 ஆம் ஆண்டில் இருந்து மக்கள் ஒரே செய்தியைச் சொல்லிவருகிறார்கள் அதிலே எந்த மாற்றமும் கிடையாது எனச் சொல்லிவந்துள்ளோம். அதை இந்த முறை தேர்தலிலே சொல்லமுடியவில்லை.

இது தொடர்பில் நாங்கள் சற்றுச் சிந்திக்கவேண்டும். எங்களது நடவடிக்கையில் ஏற்பட்ட குறைபாடு காரணமா? மக்களைச் சந்திப்பதில், அவர்களின் பிரச்சினைகளை அறிவதில் நாங்கள் பின்னிற்கின்றோமா? என்பது குறித்து நாங்கள் சிந்திக்க வேண்டும். அரசியல் கட்சியாக எங்களது பக்கத்தில் இருந்து நாங்கள் விட்ட தவறுகளைத் திருத்திக்கொள்ள முயலவேண்டும். அதனால்தான் தேர்தல் முடிந்த கையோடு நாங்கள் இந்த மக்கள் சந்திப்பதை ஒழுங்கு செய்துள்ளோம். புதிய அரசமைப்பு சாத்தியமானால் உள்ளூராட்சி சபைகளுக்கு கூடுதலான அதிகாரங்கள் கொடுக்கப்படும்.

அதிகாரங்களைப் பகிர்ந்து அளிக்கின்றபோது மத்தியிலே இருப்பது மாகாணத்துக்கு மட்டுமல்ல நேரடியாக உள்ளூராட்சிச் சபைக்கும் கொடுப்பதாக உத்தேசிக்கப்பட்டுள்ளது. மாகாண சபையின் விடயங்களைச் சட்டமாக்கும் அதிகாரம் மாகாண சபைக்கு இருந்தாலும் அதை நிறைவேற்றும் அதிகாரம் உள்ளூராட்சிச் சபைகளுக்குக் கொடுக்கப்படவேண்டும் என்ற முன்மொழிவு இருக்கிறது. அதன்படி பார்த்தால் உள்ளூராட்சிச் சபைகளும் அரசியல் அதிகாரங்களைக் கூடுதலாகப் பிரயோகிக்கும் சபைகளாக மாறும். என்றார்.

இந்தச் சந்திப்பில் பருத்தித்துறை பிரதேச சபையின் தவிசாளர் அ.சா.அரியகுமார், பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர்கள், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ந)

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1457
சீட்டிழுப்பு திகதி 09.04.2018
வெற்றி இலக்கங்கள்
07 31 43 44 I
வியாழக்கிழமை ஜக்பொட்
ரூ. 19, 556, 972/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB space LOT space JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

# ஆவரங்கால் மத்தி. அசத்தலான வெற்றி

யாழ்ப்பாணம், ஏப். 10
அரியாலையின் 99ஆவது சுதேசிய விழாவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் கரப்பந்தாட்டத் தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற 'ஏ' பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய அணி வெற்றிபெற்றது.
அரியாலை திருமகள் சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அச்சுவேலி யுத் அணி மோதியது. மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதலிரு செற்களையும் முறையே 25:15, 25:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி நேர்செற் கணக்கில் வெற்றிபெற்றது ஆவரங்கால் மத்திய அணி. (ம-23)



# வலைப்பந்தாட்டத்தில் யாழ்ப்பாணம் மகுடம்

யாழ்ப்பாணம், ஏப். 10
வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் நடத்திய மாவட்டச் செயலக அணிகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்டத்தில் பெண்கள் பிரிவில் யாழ்ப்பாண மாவட்டச் செயலக அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.
மன்னார் பொது உள்ளக விளை யாட்டரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் யாழ்ப்பாண மாவட்டச்செயலக அணியை எதிர்த்து கிளிநொச்சி மாவட்டச் செயலக அணி மோதியது. ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய யாழ்ப்பாணம் மாவட்ட செயலக அணி 52:14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியனானது. (ம-422)

# சிறி அம்பாள் முன்னேற்றம்




யாழ்ப்பாணம், ஏப். 10
குஞ்சர்கடை கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் சிறி அம்பாள் அணி வெற்றி பெற்றது.
கொலின்ஸின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் அம்பாள் அணியை எதிர்த்து பலாலி விண்மீன் அணி மோதியது. ஆட்டத்தின் 11ஆவது நிமிடத்தில் பலாலி விண்மீன் அணியின் டேமியன் தனது அணிக்கான முதலாவது கோலைப் பதிவுசெய்ய முதல் பாதியாட்டத்தில் பலாலி விண்மீன் அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.
இரண்டாம் பாதியின் 23ஆவது, 31ஆவது நிமிடங்களில் சிறி அம்பாள் அணியின் சார்பாக கோல்கள் பதிவாக முடிவில் அந்த அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. ஆட்டநாயகனாக சிறி அம்பாள் அணியின் பிரதீஸ் தெரிவுசெய்யப்பட்டார். (ம-422)

# யாழ்ப்பாண அணி பூப்பந்தில் மகுடம்



யாழ்ப்பாணம், ஏப். 10
வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட பூப்பந்தாட்ட தொடரில் ஆண்களுக்கான குழு நிலைப் பிரிவில் யாழ்ப்பாண மாவட்ட ஆண்கள் அணி சம்பியனானது.
மன்னார் மாவட்ட உள்ளரங்கில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் மன்னார் மாவட்ட அணியை எதிர்த்து யாழ்ப்பாண மாவட்ட அணி மோதியது. மூன்று ஒற்றையர், இரண்டு இரட்டையர் செற்களைக் கொண்டதாக இறுதியாட்டம் அமைந்தது.
முதலாவது ஒற்றையர் ஆட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட அணியின் சார்பில் கீர்த்தனன், மன்னார் மாவட்ட அணியின் சார்பில் சிவியன் மோதினர். 21:19, 21:11 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கீர்த்தனன் வெற்றி பெற்று யாழ்ப்பாணம் மாவட்ட அணிக்கு 1:0 என்ற முன்னிலையை வழங்கினார்.
இரண்டாவது ஒற்றையர் ஆட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட அணியின் சார்பில் றொமின்சன், மன்னார் மாவட்ட அணியின் சார்பில் நிசான்பாலன் இருவரும் மோதினர். றொமின்சன் 21:19, 21:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதலிரு செற்களையும் கைப்பற்றி யாழ்ப்பாண மாவட்ட அணிக்கு 2:0 என்ற முன்னிலையை வழங்கினார்.
மூன்றாவது ஒற்றையர் ஆட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட அணியின் சார்பில் தர்சிலியன், மன்னார் மாவட்ட அணியின் சார்பில் நிலக்சன் இருவரும் மோதினர். 21:15, 21:11 புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றார் நிலக்சன். மூன்று ஒற்றையர் ஆட்டங்களும் முடிவடைய யாழ்ப்பாண மாவட்ட அணி 2:1 என்ற செற் கணக்கில் முன்னிலை வகித்தது.
தொடர்ந்து நடைபெற்ற முதலாவது இரட்டையர் ஆட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட அணியின் சார்பில் றொமிசன், துசாந்தன் இணையும், மன்னார் மாவட்ட அணியின் சார்பில் நிலக்சன், சஜீவன் இணையும் மோதின. யாழ்ப்பாண மாவட்ட இணை 21:15, 21:18 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றதை அடுத்து 3:1 என்ற செற் கணக்கில் மாவட்டச் சம்பியனானது யாழ்ப்பாணம் மாவட்ட அணி. (ம-23)

# சென்.மேரிஸ், யூட் அணிகள் வென்றன

யாழ்ப்பாணம், ஏப். 10
தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தின் 55ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் சென். மேரிஸ், சென். யூட் அணிகள் வெற்றிபெற்றன.
மாலை 4.45 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழக அணி மோதியது. 5:2 என்ற கோல்கணக்கில்சென். மேரிஸ்அணிவெற்றிபெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் முல்லைத்தீவு சென். யூட் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணி மோதியது. 3:2 என்ற கோல் கணக்கில் சென். யூட் அணி வெற்றிபெற்றது. (ம-23)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஏப். 10

**அரியாலையின் கரப்பந்தாட்டம்**

அரியாலையின் 99ஆவது சுதேசிய விழாவை முன்னிட்டு நடத்தப்படும் கரப்பந்தாட்டத் தொடரில் 'ஏ' பிரிவினருக்கான அரையிறுதி ஆட்டங்கள் அரியாலை திருமகள் சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை 6 மணிக்கு இடம்பெறும் முதலாவது அரையிறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியை எதிர்த்து அச்சுவேலி யுத் அணி மோதவுள்ளது. தொடர்ந்து இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி அணி மோதவுள்ளது.

**நாமகள் வி.கழக கால்பந்தாட்டம்**

தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தின் 55ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை 4.45 மண்க்கு இடம்பெறும் ஆட்டத்தில் துறையூர் ஐயனார் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதவுள்ளது. (ம-23)

# யாழ். மாவட்ட கரப்பந்தாட்டம் விரைவில்

யாழ்ப்பாணம், ஏப். 10
யாழ்ப்பாண மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் தனது பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையில் கரப்பந்தாட்டத் தொடரொன்றை நடத்தவுள்ளது. ஏ. பி. திறந்த வயதுப்பிரிவு, 18 வயதுக்கு உட்பட்ட பிரிவு என்று நான்கு பிரிவுகளாக போட்டிகள் நடைபெறவுள்ளன. (ம)

# ரியல் - அத்லெட்ரிகோ ஆட்டம் சமநிலையில்





ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில், நேற்றுமுன்தினம் நடைபெற்ற ரியல் மட்ரிட் - அத்லெட்ரிகோ மட்ரிட் அணிகளுக்கு இடையிலான காலிறுதி ஆட்டத்தின் முதல் சுற்று சமநிலையில் முடிவடைந்தது.

ஆட்டத்தின் ஆரம்பம் முதல் இரண்டு அணிகளும் சிறந்த போராட்டத்தை வெளிப்படுத்தின. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியின் 53ஆவது நிமிடத்தில் ரியல் மட்ரிட் அணியின் சார்பாகக் கோலைப் பதிவுசெய்தார் ரொனால்டோ. அடுத்த நான்கு நிமிடங்களில் அத்லெட்ரிகோ மட்ரிட் அணியின் கோலைப் பதிவுசெய்து பதிலடி கொடுத்தார் கிரீஸ்மன். வேறெந்த மாற்றங்களும் நிகழவில்லை. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்றதை அடுத்து ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (ம)



## சிற்றியை தோற்கடித்தது மன்செஸ்டர் யுனைற்ரெட்

இங்கிலாந்து பிறீமியர் லீக் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் மன்செஸ்டர் சிற்றியை வீழ்த்தியது மன்செஸ்டர் யுனைற்ரெட்.

ஆட்டத்தின் 25ஆவது நிமிடத்தில் கொம்பானி, 30ஆவது நிமிடத்தில் கென்டோகன் அடுத்தடுத்து கோல்களைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது மன்செஸ்டர் சிற்றி.

இரண்டாவது பாதியில் சரிவில் இருந்து மீண்டு சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தியது யுனைற்ரெட். 53ஆவது மற்றும் 55 ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்து கோல்களைப் பதிவுசெய்தார் போக்பா. 69ஆவது நிமிடத்தில் கிறிஸ் கோலொன்றைப் பதிவுசெய்ய முடிவில் 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது மன்செஸ்டர் யுனைற்ரெட். (ம)

## கேதர் யாதவ் விலகல்

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் இருந்து விலகினார் சென்னை அணியில் இடம் பிடித்திருந்த துடுப்பாட்ட வீரர் கேதர் யாதவ். மும்பை அணிக்கு எதிராக கடந்த 7ஆம் திகதி நடைபெற்ற ஆட்டத்தில் தசைப்பிடிப்பால் அவதிப்பட்டார் கேதர். இதையடுத்தே இந்த வருடத்துக்கான தொடரில் இருந்து அவர் விலகினார். கேதவ் யாதவின் இடத்துக்கு முரளி விஜய் களமிறங்க வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன.

(ம)

## அதிரடியே எனது வழி

சுனில் நரைன் சில காலங்களாக திடீரென ஒரு அதிரடி தொடக்க வீரராக மாறிவிட்டார். பந்தை எறிகிறார் என்று நரைன் மீது குற்றச்சாட்டு வைக்கப்பட்டுள்ள நிலையில், அவர் இவ்வாறாக ஓர் அதிரடி வீரராக உருவெடுத்துள்ளமையைக் கவனத்திற்கொள்ள வேண்டியுள்ளது.

ஒரு பந்துவீச்சாளராக ரி-20 ஆட்டங்களில் விளையாடிய நரைன் 48 ஆட்டங்களில் 147 ஓட்டங்களை மட்டுமே சேர்த்துள்ளார். அதி ரடிகாட்ட ஆரம்பித்த பின்னர் 272 ரி-20 ஆட்டங்களில் ஆயிரத்து 321 ஓட்டங்களைக் குவித்துள்ளார். 5 அரைச் சதங்களைப் பதிவுசெய்துள்ளார். 114 பவுண்டரிகள், 78 சிக்சர்களை விளாசியுள்ளார்.

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கொல்கத்தா அணி பெங்களூரை வீழ்த்த நரைன் முக்கிய காரணமாக இருந்தார். 17 பந்துகளில் அரைச் சதம் கண்டு அவர் வியக்க வைத்தார். குறிப்பாக வோக்ஸின் பந்துப்பரிமாற்றத்தை, சற்றும் எதிர்பாராத விதமாக புரட்டி எடுத்தார். முதலில் ஒரு 'லோங் ஆன் சிக்ஸ்'. பிறகு 'கவர்' பகுதியில் ஒரு நான்கு. அடுத்த பந்திலும் கோக்லியின் கணிப்பைப் பொய்யாக்கி 'கவர்' திசையில் ஒரு பவுண்டரி. அடுத்த பந்தில் ஓர் இமாலய சிக்ஸ். மொத்தம் 20 ஓட்டங்கள். வொஷிங்டன் சுந்தர் வீசிய அடுத்த பந்துப்பரிமாற்றத்தில் 19 ஓட்டங்களைச் சேர்த்தார் நரைன். அத்துடன் பெங்களூரின் வெற்றிவாய்ப்பு மிகவும் மங்கியது.

ஆட்டநாயகனாகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் நரைன் கருத்துத் தெரிவிக்கையில், "எடுத்த எடுப்பிலிருந்தே பந்துகளை அடித்து ஆடு வது நல்லதே. நான் என்னை தொடக்க வீரராகக் கருதவில்லை. ஆனால் பந்துகளை அடித்து நொறுக்க வேண்டும் என்பதே எனக்கு இட்டபணி, இதனால் முதல் பந்தில் ஆட்டமிழந்தாலும் கவலை இல்லை" என்கிறார் அவர்.

ஆட்டமிழப்பு குறித்து அச்சப்படாத துடுப்பாட்ட வீரர் என்றால் எதிரணிகள் தொடை நடுங்கவே செய்யும். அந்தவகையில் இந்த ஐ.பி.எல். பருவகாலத்தில் நரைன் கவனிக்க வைக்கிறார்.

ஒன்று மட்டும் உண்மை, கொல்கத்தா அணி யின் நிர்வாகம், கடந்த வருடம் அணித் தலை வராகச் செயற்பட்ட கம்பீரைப் புறக்கணித்து நரைனைத் தக்கவைத்ததிலும் நியாயம் இருக்கவே செய்கிறது.

(ம)



# சங்கானை பிரதேச செயலகம் துடுப்பாட்டத்தில் சம்பியன்

யாழ்ப்பாணம், ஏப். 10

யாழ்ப்பாண மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவினரால் நடத்தப்பட்ட பிரதேச செயலக அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில், சங்கானை பிரதேச செயலக அணி 11 ஓட்டங்களால் வெற்றிபெற்றுச் சம்பியனானது.

சுழிபுரம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் சங்கானை பிரதேச செயலக அணியை எதிர்த்து நல்லூர் பிரதேச செயலக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சங்கானை பிரதேச செயலக அணி நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப் பரிமாற்றங்களில் இலக்குகள் எதனையும் பறிகொடுக்காமல் 65 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக கலைமதி 27, ரஜிதா 23 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நல்லூர் பிரதேச செயலக அணி நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப் பரிமாற்றங்களில் இரண்டு இலக்குகளை இழந்து 54 ஓட்டங்களைப் பெற்று 11 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அதிகபட்சமாக சுபர்ணா 22, கஜந்தினி 15 ஓட்டங்களைப் பெற்றனர்.

(ம-422)


## அம்பாள் - இந்து இளைஞர் நாளை மோதல்

யாழ்ப்பாணம், ஏப். 10

அரியாலையின் 99ஆவது சுதேச விழாவை முன்னிட்டு இரண்டு பிரிவாக நடத்தப்படும் கரப்பந்தாட்டத் தொடரில் 'பி' பிரிவினருக்கான இறுதியாட்டம் அரியாலை திருமகள் சன சமூக நிலைய மைதானத்தில் நாளை இடம்பெறவுள்ளது. இதில் நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)







## ஏகப்பட்ட பந்துகளை விரயம் செய்தேன் நான்; படுதோல்வி குறித்து விராட் கோக்லி கருத்து


ஐ.பி.எல். தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் கொல்கத்தாவிடம் அடைந்ததோல்விக்குதானும் ஒரு காரணம் என்பதை ஏற்றுக் கொண்டார் அந்த அணியின் தலைவர் கோக்லி.

ஆட்டம் முடிந்த பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே கோக்லி இவ்வாறு தெரிவித்தார்.

"கொல்கத்தா அணிக்கு எதிராக பெங்களூர் தோல்வியடைந்தமைக்கு நானும் முக்கிய காரணம். ஏகப்பட்ட பந்துகளை நான் விரயம் செய்தேன். அத்துடன் நானும் வில்லியர்ஸும் அடுத்தடுத்த பந்துகளில் ஆட்டமிழந்தோம். இதுவும் அணிக்குப் பின்னடைவைக் கொடுத்தது. இந்த ஆட்டத்தில் இருந்து சில விடயங்களைக் கற்றுக்கொண்டோம். அடுத்தடுத்த ஆட்டங்களில் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்த இயலும்" என்று கோக்லி மேலும் தெரிவித்தார். இந்த ஆட்டத்தில் கோக்லி 31 ஓட்டங்களைப் பெற்றார். இதற்காக அவர் 33 பந்துகளை எதிர்கொண்டார்.

(ம)

## ஹைதராபாத் அணி பதற்றமற்ற வெற்றி



ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் ராஜஸ்தான் றோயல்ஸை சிறு பதற்றமும் இல்லாமல் வீழ்த்தியது ஹைதராபாத் அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஹைதராபாத் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் அணிக்கு ஆரம்ப வீரர்களாக ரகானே மற்றும் சோட். 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் சோட். 13 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார் ரகானே. அதிரடி வீரரான ஸ்ரோக்ஸ் வெறும் 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். பட்லர் 6 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். ஆக, ராஜஸ்தானின் அதிரடி வீரர்கள் என்று அடையாளம் காணப்பட்ட பலர் பதின்மத்தைக்கூடத் தாண்டவில்லை. சாம்சன் மட்டும் நிலைத்துநின்று அதிகபட்சமாக 49 ஓட்டங்களைப் பெற்றார். அதற்காக அவர் 42 பந்துகளை எதிர்கொண்டார். அந்த வகையில் பார்க்கையில் சாம்சனின் இன்னிங்ஸும் ராஜஸ்தானுக்குப் பின்னடைவே. முடிவில் 9 இலக்குகளை இழந்து 125 ஓட்டங்களைப் பெற்றது அந்த அணி.

பந்துவீச்சில் சகிப் அல் ஹசன், கருல் இருவரும் தலா 2 இலக்குகளையும், புவனேஸ்வர் குமார், ரசிட்கான், ஸ்ரான்லேக் மூவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய ஹைதராபாத் அணிக்கு ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் சகா 5 ஓட்டங்களுடன் ஏமாற்றினார். எனினும் தவானுடன் இணைந்து சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினார் வில்லியம்சன். தவான் அதிரடியாக விளையாடிக் கொண்டிருக்க வில்லியம்சன் ஒருநாள் ஆட்டங்களின் பாணியில் சென்றுகொண்டிருந்தார். இலக்கு மிகவும் இலகுவானது என்பதால் ராஜஸ்தானால் ஒன்றும் செய்ய இயலவில்லை. அரைச்சதம் கடந்தார் தவான். பிறிதொரு இலக்கை இழக்காமல் 100 ஓட்டங்களைத் தொட்டது ஹைதராபாத். இணைப்பாட்டம் நீண்டது. முடிவில் மற்றொரு இலக்கை இழக்காமல் 25 பந்துகள் மீதமிருக்க 9 இலக்குகளால் வெற்றிபெற்றது ஹைதராபாத். தவான் 77 ஓட்டங்களுடனும், வில்லியம்சன் 36 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

(ம)






ஐ.பி.எல். தொடரில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோதவுள்ளன. இந்த ஆட்டத்துக்காக சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நேற்றுக் கடும் பயிற்சியில் ஈடுபட்டது சென்னை சுப்பர் கிங்ஸ். (ம)

## யாழ். கல்வி வலய கால்பந்தாட்டத்தின் அரையிறுதிகளும் இறுதியாட்டமும்

யாழ்ப்பாணம், ஏப். 10

யாழ்ப்பாணக் கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவு அணிகளுக்கு இடையிலான சில அரையிறுதியாட்டங்களும் இறுதியாட்டமும் இன்று நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ள 16 வயதுப்பிரிவு அணிகளுக்கு இடையிலான அரையிறுதி யாட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து நாவாந்துறை ஆர்.சி. வித்தியாலய அணி மோதவுள்ளது. பிறிதொரு அரையிறுதியாட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து மத்திய கல்லூரி அணி மோதவுள்ளது.

சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள 18 வயதுப்பிரிவு அணிகளுக்கு இடையிலான அரையிறுதியாட்டங்களில் காலை 8.30 மணிக்கு சென். பற்றிக்ஸ் அணியை எதிர்த்து சென். ஜோன்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது. காலை 9.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் முத்துத்தம்பி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி மோதவுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் காலை 10 மணிக்கு இடம்பெறும் 20 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது.

(ம23)

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
வடமாகாண சாரதி தெரிவு
செவ்வாய், வியாழன், வெள்ளி, ஞாயிறு
பி.ப. 2.30 → 6.00
வடமாகாண முன்பள்ளி ஆசிரியர் தெரிவு
செவ்வாய், வியாழன், வெள்ளி
பி.ப. 1.30 → 4.30
வடமாகாண முகாமைத்துவ உதவியாளர்
செவ்வாய், வியாழன், வெள்ளி
பி.ப. 2.30 → 6.00
இப்பரீட்சைகளுக்கான தவசேகரின் வழிகாட்டி நூல்களை பிரபல புத்தக நிலையங்களில் பெறலாம்.
076 688 3394
DMI
வெலிங்ரன் சந்தி, SDB வங்கி எதிரில் டானியல் 2ஆம் மாடி.

அபிவிருத்தி உத்தியோகத்தர்
தரம் II
வினைத்திறன்காண் தடைப் பரீட்சைக்கான வகுப்புக்கள்
EB Exam
(பரீட்சைக்கான எதிர்பார்க்கை வினாக்களை உள்ளடக்கியது)
By: N. கமலநாதன்
(ஓய்வுநிலை நிர்வாக உத்தியோகத்தர்)
13.04.2018
வெள்ளி 9am - 4pm
கோலாசிற்றி
234, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
077 843 5224

வாடகைக்கு
யாழ். மானிப்பாய் றோட், ஜின்னா வீதி இல. 98 இல் இருக்கும் மேல்மாடி வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு - 077 6365 926

Quantity Surveying Trainee
Female Canditate Only
Site and Office Management
Knowledge in Auto CAD
Valied Motor cycle Licence
Mail your CV- engjaffna@gmail.com

உடனடி வேலைவாய்ப்பு
01) சுப்பர் மார்க்கட் (லேபர், கிளீனர்)
SR 65000+ OT, உணவு, தங்குமிட வசதிகள் உண்டு.
02) ஏயார்ப்போட் (லேபர், கிளீனர்) (ஆண், பெண்)
SR 65000+ OT, உணவு, தங்குமிட வசதிகள் உண்டு.
03) றைவர் (கெவி வேக்கிள், லைட் வேக்கிள்)
SR 65000 தொடக்கம் 85000 வரை, உணவு, தங்குமிட வசதிகள் உண்டு.
(மற்றும் வீட்டுப் பணிப்பெண்கள், மேசன், பிளம்பர், வெல்டர், காப்பென்டர், வயறிங் உடன் தேவை) LL NO:- 2772
077 551 5051, 075 652 1618

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.04.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.